சேசுநாதர் சரித்திரம்

தத்துவ போதகர்

தமிழ் இலக்கியக் கழகம்

தூத்துக்குடி

1964

6984

Cum Permissu Superiorum
Nihil Obstat :

A. MICHAEL,
3—12—'63.

Imprimatur :

S. MARIADAS,
Administrator.
3—12—'63

ஆசிரியரது வேண்டுகோள்

தமிழிலும் தெலுங்கிலும் கிரந்தத்திலும் (சமஸ்கிருதம்) நான் எழுதின வெல்லாம் நம் தூய அன்னை கத்தோலிக்கு உரோமன் திருச்சபைக் கருத்துப்படி இருக்க வேண்டும் என்பது என் விருப்பம். தப்பாகவோ தவறாகவோ புண்படுத்தக்கூடிய முறையிலோ ஏதாவது மறந்து நான் விட்டிருந்தால் அதைத் திருத்தும்படி அவளை மன்றாடுகிறேன். இவ்வேண்டுகோளை ஒவ்வொரு சுவடியிலும் சேர்க்கும்படி, இந்நூல்களைப் படிசெய்வோரையும் மொழி பெயர்ப்போரையும் மிக உருக்கமாக மன்றாடுகிறேன்.

சான் தோமே, 6 சனவரி 1656.

[தாம் இறப்பதற்குப் பத்து நாட்களுக்கு முன்பு இவ்வேண்டுகோளைத் தாம் எழுதிய நூல்களிலெல்லாம் சேர்க்கும்படி ஆசிரியர் ஒழுங்குசெய்தார் என்று பல்தசார் டா கோஷ்டா ஞானோபதேச மொழிபெயர்ப்பில் கூறுகிறார்.]

பதிப்புரை

இத்தாலிய நாட்டில், உரோமை நகரிலே பிரபு குலம் ஒன்றில் பிறந்த ராபர்ட் தே நொபிலி (Robert De Nobili) என்ற குருவானவர் “ தத்துவ போதகர் ” என்னும் புனைபெயர் பூண்டு, தமிழ், வடமொழி, தெலுங்கு முதலிய நம் நாட்டு மொழிகளைக் கற்று, தமிழ் நாடு முழுவதுக்கும் மொழி வளர்ச்சியில் தலைநகரமாகத் திகழ்ந்த கூடல் என்னும் மதுரை மாநகரை மையமாகக்கொண்டு “ மதுரை மிஷனை ” நிறுவி, இவண் வேத போதகப் பணியுடன் தமிழ்ப் பணியும் ஆற்றியுள்ளார்.

தமிழ் உரைநடை இலக்கியத்தின் முதல் ஆக்கியோன் இவரேயாவர். இவர் இயற்றிய அரிய பல நூல்கள் அழிந்து போகா வண்ணம் பாதுகாத்து, நம் தமிழ் மக்களுக்குப் பெரிதும் பயன்பயக்க வேண்டும் என யேசு சபை, சங் ச. இராசமாணிக்கம் சுவாமி அவர்கள் பழங்காலத்துப் பல கைப்பிரதிகளை ஆய்ந்து செம்மைப்படுத்தி அச்சேற்றத் தகுந்த முறையில் எமக்கு அளித்துள்ளார்கள். அவர்களது சிறந்த நோக்கத்துக்கும் சிரமத்துக்கும் அவர்களை மனமார வாழ்த்திப் பாராட்டுகிறோம்.

சிந்தனையைக் கிளறி ஞான அறிவூட்டும் பழமை வாய்ந்த இந்நூலையும் இதன் தொடர்பாய் வெளியிடப்படும் வேறு பல நூல்களையும் நம் தமிழ் மக்கள் மகிழ்வுடன் வரவேற்று ஆதரவளிப்பர் என நம்புகிறோம்.

இவ்வரிய நூலை அச்சேற்ற அனுமதியளித்த மதுரை மாகாண யேசு சபைத் தலைமையடிகளார் அவர்களுக்கும், தேவையான மூலப் பிரதிகளை வழங்கி உதவிய யேசு சபை சங். சோலியர் சுவாமி அவர்களுக்கும், அச்சடித்த டயோசீசன் அச்சகத்தாருக்கும் யாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழ் இலக்கியக் கழகம்,
தூத்துக்குடி.

உள்ளுறை

		பக்கம்
	பதிப்புரை	... iii
	முன்னுரை	... v
1.	மனித இரட்சிப்பு	... 1
2.	கபிரியேல் சொன்னது	... 3
3.	கர்த்தர் பிறப்புக்கு முன்	... 6
4.	திவ்விய கர்த்தர் பிறப்பு	... 8
5.	திவ்விய கர்த்தர் பிறந்த பின்	12
6.	விருத்த சேதன ஆசாரம்	... 15
7.	மூன்று ராசாக்கள்	... 17
8.	தேவாலயத்தில் காணிக்கை	19
9.	எகிப்து தேசத்திற்கு	... 20
10.	யூதேயா திரும்புதல்	... 23
11.	வேத சாஸ்திரிகளிடையே	... 24
12.	நசேரத் ஊரிலே	... 25
13.	ஞானஸ்நானம் பெற்றது	... 27
14.	நாற்பது நாள் நோன்பு	... 29
15.	சீஷர்களை அழைத்தது	... 31
16.	போதித்த படிப்பினை	... 32
17.	செய்த புதுமைகள்	... 35
18.	அப்காரின் தூது	... 37
19.	யூதரின் பகை	... 39
20.	யூதரின் உபாயங்கள்	... 41
21.	லாசரை உயிர்ப்பித்தல்	... 42
22.	மீட்பரைக் கொல்லச் சதி	... 45
23.	எருசலேமில் வரவேற்பு	... 47
24.	பாஸ்கு தயாரிப்பு	... 48
25	கால் கழுவும் சடங்கு	... 49
26	சற்பிரசாதம்	... 49
27.	பூங்காவில் வருந்தல்	... 50
28.	பிடிபட்டது	... 54
29.	கைப்பாசின் வீட்டிலே	... 56
30	பட்ட அவமானம்	... 59
31.	பிலாத்து அரண்மனையில்	... 61
32	ஏரோதின் அரண்மனையில்	... 64
33.	கற்றூணில் அடிபட்டது	... 65
34	முள்முடி சூட்டியது	... 68
35.	சாவுத்தண்டனை	... 69
36.	சிலுவைப் பாதை	... 72
37	திருமரணம்	... 75
38	மரித்தபின் நடந்தவை	... 80
39.	கல்லறையில் அடக்கம்	... 82
40.	ஆண்டவர் மரித்த பின்	... 84
41.	உயிர்த்தலும் ஆரோகணமும்	85
	Ribadineira's Life	... 89
	அநும்பதம்	... 90

முன்னுரை

ஆசிரியரின் வாழ்க்கைக் குறிப்பு

தமிழ் நாட்டில் தத்துவ போதகர் என்றும், சொந்த நாட்டில் இராபர்ட் தே நொபிலி என்றும் பேர்கொண்ட சேசு சபைக் குருவானவர் கி பி 1577ம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் உரோமை நகரில் பிறந்து 1596ல் சேசு சபையில் சேர்ந்து 1605ம் ஆண்டு மே திங்கள் 20ம் நாள் கோவா நகர் வந்து சேர்ந்தார். 1606ம் ஆண்டு நவம்பர் 15ம் நாள் மதுரைக்கு வந்து தமிழ் மொழியை நன்கு கற்றுத் தமிழ்த் துறவியினுடைய உடை உணவு முதலிய பழக்க வழக்கங்களை மேற்கொண்டு அன்றுடம் ஒருசந்தி இருந்து இறைச்சி முட்டை மது மீன் முதலியவற்றை விலக்கிக் கடுந்தவம் இருந்து தமிழ் மக்களுக்குக் கிறித்தவத் திருமறையைப் புகட்டிப் பலரை மனந்திருப்பினர் மனந்திருப்பியதோடு அமையாது புதிய கிறித்தவர்கள் கடைட்பிடிக்க வேண்டிய திருமறையைப்பற்றிப் பல நூல்கள் இயற்றினர். தமிழில் மட்டுமென்று, வடமொழியையும் தெலுங்கையும் கற்று அவ்விருமொழிகளிலும், பல நூல்களைச் செய்திருக்கிருர். இவர்

எழுதிய நூல்கள்

(1) ஞானேபதேச காண்டம்:— ஐந்து காண்டங்களையுடையது. நான்காவது காண்டத்திற்கு மந்திரவியாக்கியானம் என்றும் ஐந்தாம் காண்டத்திற்கு வேதலக்ஷணம் என்றும் வேறு பெயர்கள் இருக்கின்றன. இவற்றுள் ஐந்தாங் காண்டந்தவிர மீதிக் காண்டங்கள் அச்சாகிவிட்டன. (2) ஆத்தும நிர்ணயம்: ஆத்துமத்தின் தோற்றம் இயல்பு முடிவுபற்றி விரிவாகக்கூறும் 38 அதிகாரங்களைக்கொண்ட நூல். 1889ல் சென்னையில் அச்சாகியது. (3) புனர் சென்ம ஆட்சேபம்: மறுபிறப்பை எட்டு சல்லாபங்களில் மறுப்பது; சென்ற ஆண்டில் அச்சாகியது (4) தூஷணத்திக்காரம்: பிற மதத்தினர் திருமறைமீது சொல்லும் பழிச்சொற்களை 32 அதிகாரங்களில் மறுப்பது. இவ்வாண்டு அச்சாகியது. (5) நித்திய சீவன சல்லாபம்: நீடுவாழ்வு அடைவதுபற்றி ஒன்பது சல்லாபங்களில் விளக்குவது. இவை தவிர்த்து (6) ஞான தீபிகை, (7) பேதகப் பரீக்ஷை, (8) ஞான சங்க்ஷேபம், (9) விசுவாச சல்லாபம், (10) உபதேச சல்லாபம், (11) பத்து சல்லாபம், (12) சிலுவையின் விசேஷ சல்லாபம், (13) மந்திரமாலை என்ற நூல்களை எழுதியிருப்பதாக முனிவரே சொல்லுகிருர். ஆனல் இவற்றில் ஒன்றும் இதுவரை அகப்படவில்லை மேலும் (14) ஞானேபதேசக்

குறிப்பிடம், (15) 26 பிரசங்கங்கள், (16) 28 பிரசங்கங்கள், (17) மெய்யான மனிதனும் மெய்யான சர்வேசுரனும் ஒன்ருயிருக்கிற சேசுநாதர் சரித்திரம், (18) தேவமாதா சரித்திரம், (19) அர்ச். இஞ்ஞாசியார் சரித்திரம், (20) அக்கியான நிவாரணம், (21) சின்னக்குறிப்பிடம், இன்னும் பல நூல்களை இயற்றியதாகச் சொல்லுவர். இங்குச் சேசுநாதர் சரித்திரம் அச்சாகிறது.

சேசுநாதர் சரித்திரம்

உலக வரலாற்றைப் புனித சின்னப்பர் இருவர் வாழ்க்கையில் அடக்குகிருர். அவர்கள் ஆதாமும் கிறித்துபெருமானும். ஆதாம் என்ற முதல் மனிதனுல் மனுக்குலம் பலுகிப்பெருகியது. இன்று அவனது இரத்தம் மக்கள் ஒவ்வொருவர் உடலிலும் ஓடுகின்றது. ஆனுல் ஆதாம் செய்த தீவினையால் அவன் கெட்டதோடு நில்லாமல் அவன் வாரிசாக வந்த மனுக்குலமும் கெட்டுப் பாவத்திற்குமேல் பாவம் செய்து, மக்களுக்குக் கடவுள் கொடுத்த உயர்ந்த பதவியை இழந்து, சாவு நரகம் பேய்க்கு அடிமைப்பட நேரிட்டது. இழந்துபோன உயர்ந்த பதவியைப் பெறவும், செய்த தீவினையைப் போக்கவும், மீண்டும் இறைவனது திருவருளைப்பெற்று வீடுபேறு அடையவும் கிறித்துபெருமான் மனித அவதாரம் செய்து மக்களோடு வாழ்ந்து சொல்லாலும் செயலாலும் முன்மாதிரியைக் காட்டி இறுதியில் மக்களுக்காகச் செந்நீர் உகுத்து உயிரைக் கொடுத்து, அடைத்திருந்த மோட்ச வாசலைத் திறந்துவிட்டார். அவர் கொண்டுவந்த மீட்பை மக்கள் அனைவரும் பெற்று ஈடேற வேண்டுமாயின் அவரை அறிந்து அவரது போதனைக்குச் செவி சாய்த்து அவரது கற்பனையை மேற்கொள்ளவேண்டும்.

இத்தகைய மீட்பு வேலையைச் செய்ய அப்போஸ்தலர் என்ற பன்னிரு அடியாரைத் தேர்ந்தெடுத்து உலகமெங்கும் சென்று தாம் கொணர்ந்த நற்செய்தியை மக்களுக்கு அறிவிக்கும்படி அவர்களைக் கட்டளையிட்டார். அவர்களுள் மத்தேயு, அருளப்பர் என்ற இருவரும், லூக்காசு, மார்க்கு என்ற வேறு இரு சீடர்களும் அவரது வாழ்க்கையை இறைவனது தனிப்பட்ட துணையருளால் எழுதினுர்கள். இவர்கள் எழுதிய நூலைப் பின்பற்றி இடம் காலம் முதலிய சூழ்நிலைக்கேற்பப் பலர் பல வரலாறுகளை எழுதியிருக்கின்றனர். இஸ்பாஞ்ஞியா நாட்டில் ரிபடினேரா என்ற சேசுசபைக்குருவானவர் கிறித்துபெருமான் வரலாற்றைப்

பக்திச்சுவையோடு சுருக்கமாக எழுதியிருக்கிறார். அந்நூலுக்கு அவரது காலத்தில் மிகுந்த செல்வாக்கு இருந்தது. அக்காலத்தை யொட்டி வந்த தத்துவ போதகர் அந்நூலைக்கற்று அதைத் தழுவி இந்நூலைச் செய்ததாகத் தெரிகிறது.

மூலநூலில் அதிகாரமோ வேறு பாகுபாடோ ஒன்றுமில்லை. தொடர்ந்து ஒரு கட்டுரைபோல் அமைந்திருக்கிறது. தத்துவ போதகர் எழுதிய நூலின் பழைய சுவடிகள் அவ்வாறே இருக்கின்றன. பிற்காலத்தில் வரும் சில சுவடிகளில் நாம் கொடுத்துள்ளபடி பல பிரிவுகளாக இந்நூலைப் பிரித்துள்ளனர். அந்தப் பாகுபாட்டை ஆசிரியர் செய்யாதபடியால் பிறைக் கோட்டுக்குள் அமைந்திருக்கிறோம். இவ்வாறு பாகுபாடு செய்யுங்கால் மூலநூலில் வாக்கியம் முற்றுப்பெறாதபோது அதை முற்றுப் பெறும்படி பாகுபாடு செய்தவர்கள் வாக்கியத்தைக் கொஞ்சம் மாற்றியிருக்கிறார்கள். சான்றாக 8ம் பக்கத்தில் "மார்கழி மாதத்தைத் தெரிந்துகொண்டார் என்கிறதினாலே" என்று பழைய சுவடிகளில் இருக்க அதிகாரமாகப் பாகுபாடு செய்யப்பட்ட சுவடிகளில் 'என்கிறதினாலே' என்ற சொல்லைவிட்டுவிட்டு 'என்று அறியவும்' என்று திருத்தி மூன்றாம் பிரிவை முடிக்கின்றனர். இதேபோல் வேறு சில இடங்களில் இருக்கிறது. சுவிசேஷத்தில் குறிப்பிடாத பற்பல செய்திகள் இந்நூலில் வருகின்றன. அவற்றை அக்காலத்திலுள்ள மக்கள் நம்பியதாலும் ரிபடினேரா என்ற பெரியார் எழுதி வைத்ததாலும் ஆசிரியரும் மேற்கொள்கிறார். அவற்றில் சில: சிபில் என்ற கன்னியரின் தீர்க்கதரிசனங்கள், அப்பொல்லோ என்ற விக்கிரகத்துக்குள் இருந்துபேசிய பேயின் கூற்று, 'சர்வேசுரனுடைய ஏக சுதனுக்கு' என்று அகஸ்டஸ் சீசர் பீடம் கட்டி வைத்தது, எகிப்துக்குச் செல்லுங்கால் ஆண்டவரைக் கண்ட பெர்சி என்ற மரம் செய்த வணக்கம், அவரை நீராட்டிய ஊற்றுநீர் செய்த புதுமைகள், யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்ற இடத்தில் நிகழும் புதுமைகள், அப்கார் என்ற மன்னனுக்கு எழுதிய மடல், ஆண்டவர் இறந்தபோது ஆரயோபஜித் என்பவன் சொன்ன சொற்கள், ஆண்டவர் அறையுண்ட சிலுவையின் நீளம் முதலியன.

மூல நூலுக்கும் தத்துவ போதகர் நூலுக்கும் பல வேறுபாடுகள் இருப்பினும், இரண்டிற்கும் உள்ள தொடர்பைக்

காட்டுவதற்கு 3வது பிரிவையும் 16ம் பிரிவின் இறுதிப் பிரிவையும் ஆங்கிலத்தில் கொடுத்திருக்கிறோம். அவற்றைத் தமிழ்ப் பகுதியோடு ஒப்பிட்டுப் பார்ப்போர்க்கு இவ்விரு நூல்களுக்குமுள்ள தொடர்பு புலப்படும்.

நடை

தேவதாயின் தந்தையாகிய சுவக்கீம் என்பவரைத் தேவாரம்பர் என்றும், யூதேயா, எகிப்து நாடுகளிலுள்ள அறிஞரைப் பிராமணர் என்றும், பெரிய பாத்திரத்தைக் கோர்க்கலம் என்றும், முத்தமிட்டுக் காட்டிக்கொடுக்க வந்த யூதாசை 'இஷ்டகாரா' என்றும், தேவதாயைப் பரிசுத்த கன்னியாஸ்திரியான அர்ச்சியசிஷ்ட மரி என்கிறவள் என்றும், அவ்விடத்திலே என்பதை அவடத்திலே என்றும், பெத்லேகேம் என்ற ஊரை வெத்திலயம் என்றும், சிறிய ஊரைக் கொஞ்ச ஊர் என்றும், நீ எங்கிருந்து வந்தவன் என்பதை 'எங்கித்தியான்' என்றும், போக (போகச்சே) என்பதைப் போகச் செய்தே என்றும் ஆசிரியர் அழைக்கின்றார். மேலும் வடமொழியில் (ங்)க, (ம்)ப, (ந்)த, (ஞ்)ச என்று தொடங்கும் சொற்களை முறையே கெர்ப்பம், பெந்து, தெக்கணம், செந்து என்று அகரத்திற்குப் பதிலாக எகரமிட்டு எழுதுகின்ற வழக்கு மிகுதியாக இருக்கிறது. இந்நூலின் இறுதிப் பத்தியை ஆசிரியர் எழுதியதா அல்லது படிசெய்தவர் எழுதியதா என்று தெரியவில்லை. ஆகவே அதைப் பிறைக் கோட்டுக்குள் அச்சிட்டிருக்கிறோம். வேறு சில இடங்களில் மூலநூலில் சொற்கள் மிகுந்தோ அல்லது குறைந்தோ வருவதைப் பிறைக்கோட்டுக்குள் சுட்டியிருக்கிறோம். அவை எத்தகையன என்று இடம் நோக்கி கண்டுகொள்க. ஒரு சில இடங்களில் மூல நூல் விடுபட்டிருந்தபடியால் அதே நிகழ்ச்சியைப்பற்றிப் பேசும் ஆசிரியர்தம் 26ம் பிரசங்கங்கள் அல்லது மூன்றாங்காண்டம் என்ற பகுதியிலிருந்து விடுபட்ட பகுதியை நிறைவு செய்ய முயன்றிருக்கிறோம். இதைத் தவிர்த்து கீழேவரும் சொற்களைச் சுட்டிக்காட்டியபடி திருத்திக்கொள்க:—

தேவாரம்பர் (1 · 17), அமிழ்ந்து (10 · 34), முகிவில்லா (13 · 18), பண்ணினூர் (13 · 25), திறந்து (18 · 31), கோவிலிலே (19 · 21), புதுமைகளைப் (21 · 15), 26 பிரசங்கங்கள் பிறைக்கோட்டு (24 · 35), பேர்களுக்கும் (25 · 20), மாதாவுக்கும் (25 · 28), நடக்கிற (26 · 17), வேண்டின (32 · 5), தக்கதாகச் (34 · 20), வக்கணை 6 (39 · 5), சஞ்சாரம் (44 · 11), பட்டணத்துக்கு (48 · 17), சருவேசுரனை (50 · 33).

இந்நூலை ஆசிரியர் எழுதிய காலம் தெரியவில்லை. ஆனால் மூன்றாங் காண்டத்தையும் 26 பிரசங்கங்களையும் இதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது பிற்காலத்தில் மிகுதியாக வழங்கும் பரிசுத்ததம, அர்ச்சியசிஷ்டதம என்ற சொற்கள் இங்கு வழங்காதபடியால் இந்த நூல் அந்த நூல்களுக்கு முன்னதாக எழுதப் பெற்றிருக்கவேண்டும். மேலும் இந்நூலுள் ஆசிரியர் எழுதிய பிற நூல்கள் மேற்கோளாகக் காட்டப்படாதிருப்பது, பிற நூல்களைக் காட்டிலும் இந்நூல் முந்தியது என்று சான்றுபகரும். இந்நூலைத் தத்துவ போதகர் எழுதினார் என்பது பாரம்பரைச் செய்தி. முனிவர் எழுதிய பிற நூல்களையும் இந்நூலையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அதே கருத்து படிப்போர் உள்ளத்தில் தோன்றும். சிறப்பாக மரித்த லாசரை உயிர்ப்பித்த நிகழ்ச்சியைக் கூறும் பகுதியை மூன்றாங்காண்டத்தில் வரும் அதே நிகழ்ச்சியோடு ஒப்பிடுங்கால் கருத்தில் மட்டுமன்று சொற்களிலும் ஒற்றுமை காணலாம். ஒற்றுமை கண்டு அதே ஆசிரியர் இவ்விரு நூல்களையும் எழுதியிருக்கிறார் என்று உணரலாம்.

கிறித்து பெருமானுக்காகத் தன் வாழ்க்கையைக் கையளித்து அவரது நற்செய்தியை எவ்வளவோ துன்பத்திலும் நெருக்கடியிலும் போதித்து அவரை நேசிக்கத் தூண்டும்படி முனிவர் எழுதிய இந்நூல் பக்திச் சுவை மிகுந்தது. இதைப் படிப்போர் கிறித்து பெருமானை அறிந்து நேசிக்காமல் இருக்க முடியாது.

ஆண்டவர் உயிர்த்த திருநாள் 29—3—'64.

தூய சவேரியார் கல்லூரி
பாளையங்கோட்டை

ச. இராசமாணிக்கம், சே. ச.

தத்துவ போதகர்

(Robert de Nobili S. J.)

மெய்யான சர்வேசுரனும் மெய்யான மனுஷனும் ஒன்ருயிருக்கிற

சேசுநாதருடைய சரித்திரம்

[1. மனித இரட்சிப்பின் தேவயிரகசியம்]

தயாபரனுமாய் எல்லாத்துக்கும் வல்லவருமாயிருக்கிற சருவேசுரனனவர் மனுஷன் செய்த பாவத்துக்காக உத்தரிக்க வேணுமென்று மனுஷாவதாரம் பண்ணித் தாம் உண்டாக்கின வஸ்துக்களை மனுஷனுக்குக் கொடுத்திருக்கையிலே, தம்மையுங் கொடுத்து மிகவும் இறுகினதுமாய் அவிழ்க்கப்படாததுமாய் இருக்கிற ஒரு கட்டின மேரையாய் அவனைத் தமக்கு ஐக்கியம் பண்ணி, அதினிமித்தமாகச் சருவேசுரன் மனுஷனுய் மனுஷன் சருவேசுரனுயிருக்கச் சித்தமானர்.

அப்படியே அவர் இத்தனை உன்னதமான மனேவாக்குக் கெட்டாத இரகசியத்தை நிறைவேற்றுகிறதற்கு மிகவும் பாக்கிய முள்ளதுமாய் அர்ச். சின்னப்பர் திருவுளம்பற்றினப்போலே பக்குவமானதுமாய் இருக்கிற காலம் வந்திருக்கிறபோது எப்பிரேய சந்ததியிலே யூதர் கோத்திரத்திலே [1]தேவராம்பர் அன்னமை யென்கிற இருவரிடத்தில் நின்று பிறந்த மரி என்கிற ஓர் கன்னியாஸ்திரியைத் தெரிந்துகொண்டு, அவள் இஸ்பிரீத்துசாந்துவினுடைய சேர்க்கையினலே தம்மைக் கெர்ப்பந்தரித்து, கன்னிமுத்திரை மகிமை கெடாமல் தம்மைப்பெற்று இது முகாந்திரமாக அவள் தமக்கு மெய்யான மாதாவுமாய்த் தாம் அவளுக்கு மெய்யான பிள்ளையுமாய் இருக்கவும் பண்ணினர். அப்படியே சருவேசுரனனவர் சகல பெண்சாதிகளுக்குள்ளே அந்நாள் வரைக்கும் இருந்தவர்களையும் அதுக்குப் பிற்பாடு இருக்கப் போகிறவர்களைக் காட்டிலும் மிகவும் அர்ச்சிய சிஷ்டவளுமாய்ப் பரிசுத்தமுள்ளவளுமாயிருக்கிற தம்மால் தெரிந்துகொள்ளப் பட்ட இந்தப் பரிசுத்தக் கன்னியாஸ்திரியானவளைத் தேவ மாதாவுக்கான சகல வரப்பிரசாதப் புண்ணியங்களினலே அலங்கரித்தார். இதல்லாமல் சருவேசுரனனவர் மகாத்துமாவாகிற அபிரகாமென்கிறவருடைய சந்ததியிலேயும் அதிலே பிறந்த தாவீதென்கிற இராசாவினுடைய கோத்திரத்திலேயும் மனுஷனகப் பிறப்பேனென்று அவர்களுக்கு வார்த்தைப்பாடு கொடுத்திருந்ததினலே இப்படிக்கொத்த பரிசுத்த கன்னியாஸ்திரியான

1. சுவக்கீம், Joachim

வளை தாவீதென்கிற இராசாவினுடைய கோத்திரத்திலே பிறக்க கட்டளை இட்டார்.

இந்த மேரையாகப் பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் மகா இராசாவுமாய் உத்தம குருவுமாயிருக்கிற கர்த்தனுக்கு மாதாவாய் இருக்கப்போகிற அப்படிக்கொத்த பரிசுத்த கன்னியாஸ்திரியிடத்திலே சருவேசுரனானவர் விளங்கப் பண்ணின, பிதா பிதாக்கள் தீர்க்கத்தரிசிகளுடைய மகிமையல் லாமல், குருக்கள் இராசாக்கள் முதலான பிரபுக்களுடைய மகிமையும் விளங்கப்பண்ணினர்.

இது தவிர, இப்படிக்கொத்த பரிசுத்த கன்னியாஸ்திரிக்கு ஊழியஞ் செய்துகொண்டு துணையாயிருக்கவும், அவள் பரிசுத்த கன்னியாஸ்திரியாய் இருந்து, தம்மைக் கர்ப்பந்தரித்துக் கர்ப் பிணியாய்க் காண்பிக்கிறபோது, அவள் பேரிலே குற்றம் சொல்லாதபடிக்கும் அவள் பிறந்த கோத்திரத்திலேதானே இருந்து மகாத்துமாவாகிற யோசேப் என்கிறவரோடே அவளை விவாகம் பண்ணவேணுமென்று கட்டளையிட்டார்.

இந்தப் பிரகாரமாக மனுஷாவதார இரகசியத்தை நடத்துகிற திலே தமது மகிமையைக் காட்டிலும் தம்முடைய பரிசுத்த மாதாவின் மகிமையைப் பராமரித்துக்கொண்டு வந்தார். அதே தென்றால், தாம் பண்ணின மனுஷ அவதாரத்தின் நிமித்தமாகக் கர்ப்பிணியாய்க் காண்பிக்கிறபோது, அவளுக்கு அவமானம் வராதபடிக்கு, இஸ்பிரீத்துசாந்துவின் செய்கையினலே அவரு டைய நிர்மலமான உதரத்திலே உற்பவித்திருக்கிற தம்மை யோசேப் என்கிறவருடைய குமாரன் என்று மனுஷர் எண்ணிக் கொண்டு வருகிறதற்குச் சித்தமானர்.

அப்படியே மனுஷாவதாரம் பண்ணித் தாழ்ச்சியையும், லோக நிந்தையையும் படிப்பிக்கக் கர்த்தரானவர் இந்த லோக சம்மந்தமாயிருக்கிற ஐசுவரியங்களைக் காட்டிலும் அதுகளுடைய குறையானது பரலோகத்திலே மிகவும் பிரியமாயிருக்கிறதென் றும், யாராகிலும் தாரித்திரராயிருக்கிறதினலே கஸ்தி சங்கோசப் படவேண்டாமென்றுங் காட்டுகிறதற்குத் தம்முடைய மெய் யான பரிசுத்த மாதாவாயிருக்கிற அர்ச். மரியவென்கிறவளுந், தம்முடைய தகப்பனென்று மனுஷராலே எண்ணப்பட்ட அர்ச். யோசேப் என்கிறவரும் தாரித்திரராய் இருக்கத்தக்க தாகச் சித்தமாயிருந்தார்.

[2. கபிரியேல் சம்மனசு சொன்ன மங்களம்]

இப்படித் திருவுளமாயிருந்த சருவேசுரனனவர் பரிசுத்த கன்னியாஸ்திரியாகிற அர்ச். மரியாயிடத்திலே மனுஷாவதாரம் பண்ணுகிறதற்கு முந்தி அவளுக்கு இப்படிக்கொத்த பரம இரகசியத்தை அறிவிக்கவும், அதினிமித்தமாக அவளுடைய கன்னி முத்திரை மகிமைக்குச் சற்றுகிலும் சேதம் வராதென்று நிச்சயம் பண்ணிவிக்கவும், அவள் அதுக்குச் சம்மதிக்கவுஞ் சொல்லப் போகிற வார்த்தையைக் கேட்கவும், காபிரியேல் என்கிற சம்மனசுவை அவளண்டையிலே அனுப்பினார்.

அப்படியே [1]பரி. கன்னி. அர்ச். மரியாய் என்கிறவள் சம்மனசு தம்மோடே சொன்ன மனுஷாவதாரத்தின் இரகசியத்துக் கடுத்த வார்த்தைகளுக்கு 'ஆகட்டும்' என்று சம்மதித்தவுடனே அளவில்லாத நீதியென்கிற சூரியனுடைய கிரணங்களையும், லோகத்தை எரியப்பண்ணுகிற திவ்விய அக்கினியையும் பொறுக்கத்தக்கதாக வல்லவளாயிருக்கிறதற்குக் கொடைமேரையாக அவளுக்கு நிழல் கொடுக்கவந்த இஸ்பிரீத்துசாந்துவின் வரப்பிரசாதத்தினலே சுதனகிய சர்வேசுரனனவர் அவளுடைய நிர்மலமான உதிரத்திலே மனுஷ அவதாரம் பண்ணினர்.

இந்தப்பிரகாரமாகச் சருவேசுரனைக் கெர்ப்பந்தரித்த பரிசுத்த மாதாவானவள் அவரைத் தம்து நிர்மலமான உதரத்திலே ஒன்பது மாசம் தரித்துக்கொண்டு, அந்த ஒன்பது மாசத்துக்குள்ளே தமக்குப் பெந்துவாயிருக்கிற எலிசபெத்தென்கிறவளைச் சந்தித்துத் தாஞ் சந்தித்த வார்த்தை நிமித்தமாக அவளுடைய உதரத்திலே இருக்கிற ஸ்நாபக அருளப்பரென்கிற பிள்ளையை அனேக இஷ்டப்பிரசாதங்களினலே ரொப்பினர்.

அந்தக்காலத்திலே, அகூஸ்துஸென்கிற இராயன் தனக்குக் கீழ்ப்படிந்து நடக்கிற சீர்மைகளுக்கெல்லாம் ஒரு நிருபத்தை எழுதி அனுப்பி, அதிலே எல்லாரும் தனது காணியாட்சியிலே எண்ணிக்கைக் கொடுக்க வேணுமென்று கட்டளையிட்டான். இந்த ரோமாபுரி இராயன் கட்டளையின்படியே பூர்ண கெர்ப்பிணியாயிருக்கிற தேவ மாதாவானவள் தம்முடைய பர்த்தாவாகிய யோசேப் என்கிறவரோடேகூட வாசமாயிருக்கிற நாசரேத் என்கிற ஊரிலே இருந்து தமது காணியாட்சியாகிற பெத்லேகம் என்கிற ஊருக்குப் போனள்.

1. பரிசுத்த கன்னியாஸ்திரியான அர்ச்சியசிஷ்ட

இந்தப் பிரகாரமாகக் கீழ்ப்படியாமல் கெட்டுப்போன லோகத்தை ரெக்ஷிக்கவந்த கர்த்தரானவர் தமது பரி. மாதாவின் நிர்மலமான உதரத்திலே யிருக்கையிலே முதலாய்க் கீழ்ப்படியத் துவக்கினதுமல்லாமல், தம்முடைய தாய் தகப்பனர் இருவரும் லோகப்பிரபுவாகிற ரோமாபுரி ராயனுக்குக் கீழ்ப்படியச் சித்தமானர்.

இதல்லாமல் செருசலேம் என்கிற பட்டணத்துக்கு ஏறக்குறைய அஞ்சு நாழிகை வழித் தூரமாயிருக்கிற பெத்லேகமென்கிற ஊரானது [1]கொஞ்ச ஊராயிருக்கும். கொஞ்சமாயிருக்கிற ஊரிலே கர்த்தரானவர் தமக்கு அடையாளமாயிருந்த தாவீதென்கிற இராசா பிறந்ததினுலேயுந், தம்முடைய தாழ்ச்சியினலே நம்முடைய ஆங்காரத்தைத் தாழ்த்த வேணுமென்கிறதினுலேயும், [2]மிக்கேசென்கிற தீர்க்கதரிசி எழுதிவைத்ததின்படியே ஆதிலே தாம் பிறந்து அதுக்குப் பிற்பாடு பெரிய பட்டணமாயிருக்கிற செருசலேம் என்கிற பட்டணத்திலே தாம் பாடுபடத் திருவுளமாயிருந்தார்.

அப்படியே சகலமான காலங்களுக்குங் கர்த்தராயிருக்கிற சருவேசுரனனவர், ஆதித் தாய் ஆதித்தகப்பன் பாவஞ் செய்த அநேக ஆயிரம் வருஷத்துக்குப் பிற்பாடு, அந்தக்காலங்களுக்குள்ளே தாம் பிறக்கிறதற்கு மிகவும் யோக்கியமான காலத்தைத் தெரிந்துகொண்டார்.

அதேதென்முல், அத்தனை நெடுங்காலத்தின் நாள்வட்டத்திலே மனுஷர் தங்களுக்குப் பாவத்தினுல் வந்த வியாதி எப்படிக் கொத்ததென்றும் அதுக்கான அவுஷதம் தங்களுக்கு மிகவும் வேண்டியிருக்கிறதென்றும், அது சுபாவப் பிலத்தினுலே [3]சவதரிக்கப்படாதென்றும் அறிந்து, அப்படிப்பட்ட அவுஷதத்தைத் திவ்விய வைத்தியனுகிற சருவேசுரனை மாத்திரங் கேட்கிறதற்கு அவகாசமுண்டாயிருக்கிறதென்றும் நிச்சயம் பண்ணுவார்கள்.

இதல்லாமல் சருவேசுரனனவர் தாம் மனுஷனுகப் பிறக்கிறதற்கு முந்தி அநேக வருஷம் பிதாப் பிதாக்களுக்கு மனுஷனுகப் பிறப்பேன் என்றும் அவர் வார்த்தைப்பாடு கொடுத்துத் தீர்க்கத்தரிசிகளினலே சொல்லப்பட்ட அந்தந்தக் காலங்களிலே இருந்த மகாத்துமாக்களிடத்திலே அனேகம் அடையாளங்கள் காண்பித்து "சகல சனங்களினுலே அபேட்சிக்கப்பட்டிருந்த

1. சிறிய 2. மிக். 5, 2. 3. சம்பாதி, சேகரி.

தம்மைக்'' கண்ட மனுஷரெல்லாரும் மகா ஆதரவோடே அங்கீகரித்து கொள்ளுவார்கள் என்கிறதுக்குச் சந்தேகமில்லை.

பின்னையும் சமாதான இராசாவாயிருக்கிற சேசுநாதரானவர், சருவேசுரனுக்கும் மனுஷருக்கும் சமாதானம் உண்டாகும்படிக்கு மத்தியஸ்தனாக வருகிறதினாலே, தாம் பிறக்கிற காலத்திலே லோகமெல்லாம் சமாதானமாய் இருக்கப்பண்ணினார். இந் நிமித்தமாக ரோமாபுரி இராயன் தனது சத்துருக்களைச் செயித்ததினாலே, தனக்குக் கீழ்ப்படிந்திருக்கிற விஸ்தார தேச இராச்சியங்கள் எங்கும் சற்றாகிலும் விரோதங்கள் இல்லாமல் நல்ல சமாதானத்தை அடைந்ததினாலே சமாதானத்துக்கு அடையாளமாக [1]சானுஸ் கோவில் வாசலை அடைக்கக் கட்டளையிட்டான்.

அதேதென்றால், அந்தக் காலத்திலே அக்கியானிகளாய் இருக்கிற ரோமாபுரி இராயருக்கு: 'அப்படிக்கொத்த கோவில் திறந்திருந்தால்ச் சமாதானமில்லை. அது அடைத்திருந்தால் சமாதானத்துக்கு அடையாளமாய் இருக்கும்.' இது தவிரக் கர்த்தரானவர் லோகமெங்கும் தம்முடைய வேதமானது விக்கினமில்லாமலே எளிசாய்ப் பரம்புகிறதற்கு அப்படிக்கொத்த சமாதானக் காலத்திலே வந்தருளத் தக்கதாகத் திருவுளமானார்.

ஆனால் அப்பால் பரலோகத்தையும், பூலோகத்தையும் உண்டாக்கின கர்த்தரானவர் பரமண்டலத்திலே நின்றிறங்கிப் பூலோகத்திலே மனுஷனாகப் பிறந்து மனுஷரோடே சஞ்சாரம் பண்ண வந்தருளுகிறபோது, அவராலே உண்டாக்கப்பட்ட வஸ்துக்களானதுகள் அவருடைய மகிமைக்குச் சாக்ஷிகளாய் இருந்து வந்தருளுகிறார். இப்படிக்கொத்த இராசாதி இராசனுடைய உன்னதமான பிரதாபத்தை அற்புதங்களினாலேயும் ஆச்சரியமான காரியங்களினாலேயும் காட்டுகிறதற்கு ஆன நியாயங்கள் உண்டாயிருந்தது. ஆனபடியினாலே சிறிது காலங் கர்த்தரானவர் தாம் பிறக்கிறதற்கு முந்தி எழுதி வைத்ததின்படியே மகா ஆச்சரியமானதுமாய் சுபாவத்துக்குண்டான மேரைக்கு மேலானதுமாயிருக்கிற அனேகங் காரியங்களைச் சம்பவிக்கப்பண்ணினார்.

இப்படிக்கொத்த காரியங்கள் கர்த்தரானவர் வந்தருளுகிறதற்கு அடையாளங்களாகச் சம்ப்விக்கப் பண்ணின

1. Janus

தினலே அதுகளை நிமித்தமாக மனுஷருடைய விசாரங்களையும் மனசுகளையும் எழுப்பி யவர்கள் அப்போஸ்தலர் முதலான குருக்களினலே அறியப்பட்ட தம்முடைய வேதத்தை அங்கீகரிக்கிறதற்கு ஆயத்தமாய் இருக்கப் பண்ணினரொழிய மற்றப்படியல்ல.

ஆனல் அக்கியானிகளாயிருக்கிறபேர்கள், அக்கியானமென்கிற அந்தகாரத்திலே அமிழ்ந்திருக்கக்கொள்ள, அப்படிக்கொத்த அற்புதமான காரியங்களைக் கண்டு தங்களுடைய பிரபுகளுக்குண்டான லவுகீக பாக்கியங்களுக்கு அது அடையாளமாய் இருக்கிறதென்று விபரீதமாய்ச் சொல்லிக்கொண்டு வருகிருர்கள். இப்படி இவர்கள் விபரீதமாய்ச் சொல்லிக்கொண்டு வருகிற சம்பவித்த அற்புதமான காரியங்களுக்குள்ளே, இவர்களுக்குத் தீர்க்கதரிசிகள் போலவே இருந்த [1]சீவில்லென்கிற சில கன்னியாஸ்திரிகள் சேசுநாதர் பேரிலே எழுதிவைத்த விசேஷங்களானது மகா ஆச்சரியமாக இருக்கும்.

அதேதென்ருல், சேசுநாதர் நெடுங்காலம் வருகிறதற்கு முந்தி அவர் பிறந்ததையும், நடந்ததையும், பாடுபட்டதையும், மரணமடைந்ததையும் விபரீதமாக எழுதி வைத்தார்கள். ஆனல் நாம் இப்போ அந்த காலங்களிலே சம்பவித்த மற்றுண்டான புதுமைகளைச் சொல்லாமல், சேசுநாதர் சிறிது காலம் வந்தருளுகிறதற்கு முந்திச் சம்பவித்த சில புதுமைகளைமாத்திரம் சொல்லிக் காட்டுவோம்.

[3. கர்த்தர் பிறப்புக்குமுன் சம்பவித்த சில புதுமைகள்]

அதெப்படியென்ருல் லோகமெங்கும் பேர்போனதாயிருந்த [2]அப்போலு தேவனென்கிற விக்கிரகத்துக்குள்ளே பசாசானது இருந்துகொண்டு மனுஷரை ஏய்த்துப்போட வேணுமென்று, தன்னைப் பார்த்தவர்கள் கேட்டதுக்கெல்லாம் பிரத்தியுத்தாரம் சொல்லிக்கொண்டு வரும். இப்படிக்கொத்த பேர்போன பசாசானது அந்தக் காலத்திலே முந்திப் பிரத்தியுத்தாரஞ் சொன்னப்போலே இப்போ பிரத்தியுத்தாரஞ் சொல்லாமல் பேசாமல் இருந்தது. இப்படிப் பேசாமல் இருந்த அந்தப் பசாசானது ஒருவிசை மாத்திரம் சருவேசுரன் உத்தாரங் கொடுத்ததினலே

1. Sibyl 2. Apollo

பூசை பண்ணின [2]சேசார் அவுகுஸ்துஸ் என்கிற ரோமாபுரி இராயனைப் பார்த்து: "எப்பிரேய சந்ததியிலுள்ள சர்வேசுரனாகிற ஒரு பிள்ளை, எனக்குச் சம்பிரமான ஒரு கோவிலைக் கட்டி வைத்துப் பூசையும் பண்ணின சேசார் அவுகுஸ்துஸ் என்கிற உனக்கு, என்னை மறுமொழி சொல்லாமலிருக்கச் சொல்லித் திரும்ப நரகத்திலே போகக்கட்டளையிட்டார் என்கிறதினாலே நான் உனக்குப் பிரத்தியுத்தாரம் சொல்ல மாட்டேன்" என்று சொல்லி இப்படி அப்போலு என்கிற விக்கிரகத்துக்குள்ளே இருந்து பேசிக்கொண்டுவந்த இந்தப் பசாசுமல்லாமல் அந்தக் காலத்திலே அங்கங்கே விக்கிரகங்களுக்குள்ளே இருந்து அக்கியானிகளுக்குப் பிரத்தியுத்தாரஞ் சொல்லிக்கொண்டு வந்த சகல பசாசுகளும் பிரத்தியுத்தாரம் சொல்லாமல் பேசாமல் இருந்தது. இதல்லாமல் முன்சொல்லப்பட்ட ரோமாபுரி இராயன் எத்தனை பிரபுவாயிருந்தாலும் சருவேசுரனாலே ஏவப்பட்டுத் தன்னைக் கர்த்தனென்று சொல்லாதபடிக்கு விலக்கினான்.

அதேதென்றால், இராசாதி இராசனாய் இருக்கிற கர்த்தன் வந்தருளுகிற இடத்திலே சூரியனுடைய பிரகாசத்தினாலே நக்ஷத்திரங்களுடைய பிரகாசமானது காண்பியாததுபோலே அவருடைய மகிமையினாலே லவுகீக மகத்துவம் எல்லாம் காண்பியாதென்கிறதுக்குக்குச்சந்தேகமில்லை. இது நிமித்தமாக அக்கியானியாகிற ரோமாபுரி இராயன் ரோமாபுரியிலே இருக்கிற [3]கப்பித்தோலியுவென்கிற ஸ்தலத்திலே ஒரு பீடத்தைப் போடுவித்து அதிலே "சர்வேசுரனுடைய ஏக சுதனுக்குப் பீடம்" என்ற வார்த்தைகளை எழுதிவைத்தான்.

இத்தனை சமாதானமும் அற்புதங்களும் ஆச்சரியமான காரியங்களும் விளங்கிற காலத்திலே மனுஷனாகப் பிறக்கத்தக்கதாகத் திருவுளமாயிருந்த கர்த்தரானவர், லோக சம்மந்தமாயிருக்கிற செல்வ சுகங்களைவிட்டுத் தவசு முதலான கடினங்களை நமக்குப் படிப்பிக்க வருகிறதினாலே, தாம் பிறக்கிறதற்கு மகாக் கடினமான குளிருள்ள காலத்தைத் தெரிந்துகொண்டார்.

அதேதென்றால், உற்பத்தியினாலே வருகிற மற்றுண்டான வஸ்துக்கள் தாங்கள் நினைத்தாப்போலே தாயினிடத்திலே நின்று பிறக்கிறதற்கு வல்லதுகளாய் இராதிருந்தாலும், சகலமான காரி

2. Caesar Augustus 3. Capitolium

யங்களுக்கும் கர்த்தராய் இருக்கிற சேசுநாதரானவர், இப்போ பரமண்டலத்திலே தமக்குண்டான ஞானமும் பெலமும் தாம் பரிசுத்த கன்னியாஸ்திரியிடத்தில் கர்ப்பமாக உற்பவித்த க்ஷணத்திலே முதலாய்த் தமக்குண்டாயிருக்கக்கொள்ள, தாம் மனுஷனாய்ப் பிறக்கிறதற்குக் காலத்தையும் சமயத்தையும் தெரிந்து கொள்ளத்தக்க வல்லவராய் இருந்தார். ஆனபடியினாலே தாம் பிறக்கிறதற்கு மகாக் கடினமான குளிர் காலமாகிற மார்கழி மாதத்தைத் தெரிந்துகொண்டார் [1][என்று அறியவும்.]

[4. திவ்விய கர்த்தர் பிறப்பு]

பரிசுத்த கன்னியாஸ்திரியானவள் தம்முடைய பத்தாவோடேகூடத் தூரப்பயணமாகிற நாசரேத் என்கிற ஊரைவிட்டுப் புறப்பட்டதற்குப் பிற்பாடு வழியிலே லோக சம்மந்தமாயிருக்கிற சுகங்களை விட்டு அனேகங் குறைச்சல்களையுந் தாரித்திரங்களையும் அனுபவித்துக்கொண்டு பெத்லேகமென்கிற ஊரிலே போனாள்.

போனவுடனே கொஞ்ச கிராமமாயிருக்கிற அந்த ஊரிலே அவுகூஸ்துஸ் என்கிற ரோமாபுரி இராயன் சொற்படிக்கு வந்த சனங்கள் மகாத்திரளா யிருக்கிறதினாலே தரித்து இருக்கிறதுக்கு இடமில்லாதேபோச்சுது. இது நிமித்தமாக பரிசுத்த கன்னியாஸ்திரியானவள் [2]வெற்றிலயமென்கிற ஊரைவிட்டு அதுக்குச் சமீபமாயிருக்கிற ஒரு மாட்டுக்கொட்டிலே தம்முடைய பத்தாவோடேகூடப் போயிருந்தாள்.

அதேதென்றால், ஒரு கறட்டின் பக்கச் சரிவிலே யிருக்கிற வெத்திலயமென்கிற ஊருக்குக் கீழ்ப்புறமாக அந்தக்கறட்டினுடைய சரிவின் முகிவிலே ஒரு கெபியுண்டு. அந்த கெபியிலே ஏழைப் பரதேசிகள், இடையர்கள் அவசரமான சமயங்களில் வந்து [3]தரித்துக்கொண்டு தங்கள் மாடுகளைக் கட்டுவார்களென்கிறதினாலே அதுக்கு மாட்டுக்கொட்டில் என்கிற பேரிட்டார்கள்

அப்படிக்கொத்த மாட்டுக்கொட்டில் என்கிற அரண்மனையிலே, சம்மனசுக்களுக்கு இராக்கினி யாயிருக்கிற பரிசுத்த கன்னியாஸ்திரியானவள் தம்முடைய பத்தாவோடேகூடப் பிரவேசம் பண்ணினாள். அவள் பிரவேசம் பண்ணின நீசமுமாய் மிருகங்களுக்கான ஸ்தலமுமாயிருக்கிற அந்தக் கெபியிலே,

1. என்கிறதினாலே (பா. பே) 2. பெத்லேகேம் 3. வாசம் பண்ணி

லோகத்தை எல்லாம் தம்முடைய கையிலே தூக்கிக்கொண்டு இருக்கிறவருமாய்த் தம்முடைய மட்டில்லாத மகிமையினாலே பரமண்டலத்திலேயும் பூமண்டலத்திலேயும் அடங்காதவருமாயிருக்கிற கர்த்தரானவர் [மனுஷனாகப் பிறக்கத்தக்கதாகத் தெரிந்துகொண்டார்.

இவர்] இப்படிக்கொத்த[3] நிச்சிதமான ஸ்தலத்தைத் தாம் பிறக்கிறதற்குத் தெரிந்துகொண்டாரென்று ஆங்காரமுள்ள மனுஷனானவன் கண்டு, தனது ஆங்காரத்தை விட்டு இந்த லோகமென்கிற கண்ணீர்க் கணவாயிலே இருக்கிறநாள்மட்டுந்தன்னைப் பரதேசியென்றுந், தான் மோக்ஷத்தை அடைகிறதற்கு சருவேசுரனாலே உண்டாக்கப்பட்டு, அப்படிக்கொத்த மோக்ஷானந்தத்தை அனுபவிக்கப் போகிற பரமண்டலமென்கிற அரண்மனையினுடைய அதிசயமான சிங்காரத்தைப் பார்க்கும்போது, இந்த லோக சம்மந்தமாயிருக்கிற மிகுந்த விலையுள்ள அரண்மனை முதலான செல்வங்களெல்லாம் ஒரு மாட்டுக் கொட்டிலுக்குச் சரியாயிருக்குமென்றும் [1]பரிச்சேதம் பண்ணக்கடவான்.

அப்படியே லோகத்திலுள்ள சகலமான வஸ்துக்களும் மவுனமாயிருக்க, பரமண்டலங்களிலேயிருந்து பேரின்ப மதுரம் பொழிய, எல்லாரையும் இரக்ஷிக்கிறவர் வருகிறாரென்று லோகமெல்லாம் பார்த்துக்கொண்டிருக்க நடுச்சாம மாகிறபோது, தம்முடைய பத்தாவோடுகூட அந்த மாட்டுக்கொட்டிலே [2]தரித்திருக்கிற பரிசுத்த கன்னியாஸ்திரியானவள் சருவேசுரனும் மனுஷனும் ஒன்றாயிருக்கிற தமது திருக்குமாரனைப் பெறத்தக்கதாகச் சமயமாச்சுதென்று அறிந்து, அந்தப் பரம இரகசியத்தின் பேரிலே உத்தம மேரையாகத் தியானம்பண்ணி, அப்படிக்கொத்த தமது திருக்குமாரனைப் பார்க்க வேணுமென்கிற மிகுந்த பக்தியினாலே பிதாவாகிய சருவேசுரனைப் பார்த்து "சுவாமி தேவரீருடைய விலைமதியாத திருக்குமாரனுக்கு அடியாள் மாதாவாயிருக்கத் தக்கதாகத் தேவரீருக்குச் சித்தமுண்டாச்சுதே. அப்படிக்கொத்த தேவரீருடைய திருக்குமாரனை அடியாள் பெற்று, லோகத்துக்குக் காட்டத்தக்கதாக அடியாளுக்கு அனுக்கிரகம் பண்ணுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறேன்" என்கிற மன்றாட்டைக் கேட்டுக்கொண்டாள்.

1. தீர்ப்பு 2. வாசஞ் செய்ய 3. தகுதி இல்லாத

அப்படிக்கொத்த மிகுந்த ஆசையோடே பரவசமாய்த் தியானம் பண்ணிக்கொண்டிருக்கிற பரிசுத்த கன்னியாஸ்திரியானவள், பிறவித் துன்பமில்லாமல் தம்முடைய கன்னி முத்திரை மகிமை சற்றாகிலும் கெடாமல், சூரியனைப் பார்க்கக் காந்தியும் சுத்தமுமுள்ளவருமாய், லோகத்தை இரக்ஷிக்க மனுஷசுபாவத்தை எடுத்து நித்திய சருவேசுரனும் மனுஷனும் ஒன்றாயிருக்கிறவருமாய், குழந்தையாய்க் குளிரினாலே நடுங்கி அழுது கொண்டு மனுஷன் செய்த பாவத்துக்காக அப்போதே உத்தரிக்க துவக்கினவருமாயிருக்கிற தமது நிர்மலமான உதரத்திலே நின்று பிறந்த தம்முடைய திருக்குமாரனைத், தமது [கண்]முன்பாகக் கண்டாள். அவரைக் கண்டவுடனே மனோ வாக்குக் கெட்டாத பரம சந்தோஷத்தை அடைந்ததுமல்லாமல், இத்தனை தாழிச்சியுடனே பிறந்த அப்படிக்கொத்த குழந்தையானவர் மெய்யான சருவேசுரனாயிருக்கிறாரென்று அறிந்திருக்கக் கொள்ளச் சொல்லப்படாத அதிசயமுமாய் ஆச்சரியமுமாயிருந்தாள்.

ஆனபடியினாலே உடனே அவரை சருவேசுரனென்று ஆராதனை பண்ணி அவரை ஆண்டவரென்று வணங்கி, அவரைத் தம்முடைய குமாரன் என்று இரண்டு கையினாலே எடுத்துக் கட்டிக்கொண்டு முத்தி செய்து கறபழியாத தம்முடைய திருமுலைப் பாலைக்கொடுத்து முந்த வைத்துக்கொண்டிருந்த தரித்தருக்கான சுத்தமுள்ள சீலைகளினாலே சுற்றினதற்குப் பிற்பாடு அன்று இராத்திரி மகாக்கடினமான குளிராயிருந்தபடியினாலே, அந்த மாட்டுக்கொட்டிலிலே அதுக்கான வேறே ஒரு ஸ்தலமில்லாமல் இசையாஸ்ள[1] ன்கிற தீர்க்கத்தரிசி எழுதி வைத்ததின்படியே அவடத்திலே நின்று ஒரு பசுவின் மாடும், ஒரு வாகனமும் இந்த இரண்டு மிருகங்களுடைய வாயினாலேயும் வைக்கோலினுடைய உஷ்ணத்தினாலேயும் அனல் பிறக்க வேணுமென்று முன்னிட்டிலே வைக்கோலின் மேலே அவரைக் கிடத்தி வைத்தாள்.

இந்தப் பிரகாரமாக மனுஷனாய்ப் பிறந்த கர்த்தரானவர், எப்போப்பிறந்தாரென்றால், லோகந்துவக்கி ஐயாயிரத்து நூற்றுத் தொண்ணூற்று ஒன்பதாம் வருஷத்தில், லோகம் எல்லாஞ் சலப்பிரளயத்தினாலே அமிழ்ந்தபோய் இரண்டாயிரத்துத்துள்ளாயிரத்து ஐம்பத்தேழாம் வருஷத்திலே, மகாத்மாவாகிற ஆபிரகாம் என்பவர் பிறந்து இரண்டாயிரத்துப் பதினைந்தாம் வருடத்திலே, யூத சனங்கள் எசித்து தேசத்தைவிட்டுப் புறப்பட்டு ஆயி

ரத்தைந்நூற்றிப்பத்தாம் வருஷத்திலே, தாவீதென்கிற இராசா பட்டத்தில் வந்த ஆயிரத்திமுப்பத்திரண்டாம் வருஷத்தில், தானியேல் என்கிற தீர்க்கதரிசி எழுதிவைத்த கிழமை யென்கிற கணக்கின்படியே அறுபத்தஞ்சாங்கிழமையில், ஒலிப் பியசு என்கிற லக்கத்தின் நூற்றித்தொண்ணூற்றி நாலாம் ஒலிப்பயத்தில், ரோமாபுரிப் பட்டணந்துவக்கி எழுநூற்றி ஐம்பத்திரண்டாம் வருஷத்தில், மார்கழி மாசம் இருபத்தைந் தாம் திகதி சனிக்கிழமை நடுச்சாமத்துக்குப் பிற்பாடு ஞாயிற்றுக் கிழமை நாள், சருவேசுரனும் மனுஷனும் ஒன்ருயிருக்கிற சேசுநாதர் பிறந்தார்.

பிறந்தவுடனே ஒன்பது விலாச சபையிலுள்ள சம்மனசுக் கள் எல்லாம் மிகுந்த சந்தோஷத்தோடே பரமண்டலத்திலே திருநாள் கொண்டாடிக்கொண்டு, தனது ஆசனங்களை நிறுத் தினவருமாய், ஆங்காரத்தினுலே கெட்டுப்போய்ப் பரமண்டத் திலே இருந்து நகரத்திலே விழுந்த மற்றச் சம்மனசுக்களுடைய ஸ்தானத்திலே மோக்ஷத்தை அடைந்திருக்கத் தக்கதாக மனு ஷரை இரக்ஷிக்க வந்தவருமாய் இருக்கிற தங்களுடைய ஆண்ட வரைப் பார்த்து ஆராதனைப் பண்ணவேணுமென்று வந்தார்கள் அப்படியே கர்த்தனை ஆராதனை பண்ணத் தக்கதாக வந்த சம் மனசுக்களுக்குள்ளே உடனே ஒரு சம்மனசானவர், [2]வெத்திலய மென்கிற ஊருக்குக் கிழக்கே ஒரு நாழிகை வழியிலே யாக்கோப் என்கிறவர் தனது ஆடுகளை மேய்த்த தலமாகிற எதேனென்கிற கோபுரத்துக் கடுத்தாப்போலே, தங்களுடைய மந்தை ஆடு களை மேய்த்துக் காத்துக்கொண்டிருக்கிற சில இடையருக்குக் காண்பித்து, லோகத்தை இரக்ஷிக்கிறவர் பிறந்த சந்தோஷமான விசேஷத்தையும், அவர் பிறந்த ஸ்தலத்தையும் அவரைக் கண்டு பிடிக்கிறதற்கான அடையாளங்களையுஞ் சொன்னர்.

இப்படித் தங்களுக்குச் சம்மனசு சொன்ன விசேஷத்தை இடையர் கேட்டுக்கொண்டு மகாத் தீவிரத்தோடேயுஞ் சந்தோ ஷத்தோடேயும் வெத்திலேமென்கிற ஊருக்குப்போய் மாட்டுக் கொட்டிலே கிடக்கிற கர்த்தனைக் கண்டு வணங்கி ஆராதனை பண்ணித் திரும்ப வந்ததற்குப் பிற்பாடு தாங்கள் கண்ட அற்பு தமான வர்த்தமானத்தை மற்ற இடையர்களுக்குச் சொன் ஞர்கள்.

1. இசை 1:3. 2. பெத்லேகேம்

[5. திவ்விய கர்த்தர் பிறந்த பிற்பாடு நடந்த அதிசயமான வர்த்தமானம்]

இதல்லாமல் [1]பாலாமென்கிற தீர்க்கதரிசி எழுதி வைத்ததின் படியே கர்த்தர் பிறந்தக்ஷணத்திலேதானே, கிழக்குத்தேசத்திலே ஒரு நவமான நக்ஷத்திரம் காணப்பித்தது. அந்த நக்ஷத்திரமானது 'யாக்கோப் என்கிறவருடைய சந்ததியில் பிறந்த நக்ஷத்திரம்' என்கிற கர்த்தன் பிறந்ததற்கு மூன்று இராசாக்கள் அவரைத் தேடிக்கொண்டு வருகிறதற்கு அடையாளமாயிருந்தது. இந்தப் பிரகாரமாக கர்த்தரானவர், மனுஷனாய்ப் பிறந்தவுடனே யூதர் களுக்கும் அக்கியானிகளுக்கும், இடையர்க்கும் இராசாக்களுக் கும், ஏழைகளுக்கும் ஐசுவரியமுள்ளவர்களுக்கும், கிட்டவிருக் கிறவர்களுக்கும் தூரத்திலேயிருக்கிறவர்களுக்குந் தம்மைத் தேடிக் காணத்தக்கதாகத் தயைபண்ணி எல்லாரையும் இரக்ஷிக் கிறதற்குப் பிறந்தாரென்று காட்டிச், சேராத இரண்டு மதில் போலேயிருக்கிற யூதர்களும் அக்கியானிகளும் மூலைக் கோடிக் கல்லென்கிற தம்முடையவிடத்திற் சேரத்தக்கதாக உபாயம் பண்ணினார். இப்படி உபாயம் பண்ணின கர்த்தரானவர் பிறந்த விசேஷத்தை இடையருக்குச் சொன்ன சம்மனசோடே எண் ணப்படாத சம்மனசுக்கள் கூடிக்கொண்டு, சருவேசுரனும் மனுஷனும் ஒரு மாட்டுக்கொட்டிலே யித்தனை தாழ்ச்சியோடே மனுஷனாகப் பிறந்ததினாலே அவருடைய மகிமையானது லோகத் திலே கனமான நக்ஷத்திரங்களினாலே விளங்குமென்று காட்ட வேணுமென்கிறதற்காகவும், லோகத்துக்கெல்லாஞ் சமாதானம் உண்டாகும்படிக்குப் பரமண்டலத்திலே இருந்துவந்த இராசாதி ராசனாகிற கர்த்தனுக்கு மனுஷர் முழுமனதோடே கீழ்ப்படிந்து, அவருடைய வெற்றிக்கொடியைப் பார்த்துக்கொண்டு, உலோ கம், பசாசு, சரீரம் என்கிற சத்துருக்களோடே மகா தைரிய மாக யுத்தம் பண்ணுகிறதினாலே மிகவும் சமாதானமாயிருப்பார் களென்று காட்ட வேணுமென்கிறதற்காகவும் "உன்னதமான ஸ்தலங்களிலே இருக்கிற சருவேசுரனுக்குத் தோத்திரமும், பூமி யிலே வாசமாயிருக்கிற நல்ல மனசுள்ளவர்களுக்குச் சமாதான மும் உண்டாகக்கடவது" என்று மனுஷனாகப் பிறந்த கர்த்த னுக்கு ஸ்தோத்திரமாகப் பாடினார்கள்.

1. Balam

இந்தப் பிரகாரமாகப் பரமண்டலத்திலேயும், பூமண்டலத்திலேயுங் கர்த்தர் பிறந்த திருநாள் கொண்டாடப்பட்டது. அதேதென்றால், கர்த்தர் பிறந்ததினிமித்தமாக உண்டாக்கப்பட்ட வஸ்துக்களெல்லாம் உசத்தப்பட்டதினாலே, அப்படிக்கொத்த வஸ்துக்களானதுகள் சந்தோஷமாயிருக்கிறது நியாயத்துக்கு ஒத்திருக்கிற மேரையாயிருந்ததொழிய மற்றப்படியல்ல.

இதல்லாமல், கர்த்தர் பிறந்த வர்த்தமானத்தை மனுஷன் அறிந்து அவர் குழந்தையுமாய்ச் சிறு பிள்ளையுமாய் இருக்கிறாரென்று சரீரத்தினுடைய கண்ணினாலே கண்டாலும், அவரை மெய்யான சருவேசுரனும், மனுஷனும் நித்திய இராசாவுமாயிருக்கிறாரென்று ஆத்துமத்தினுடைய கண்ணினாலே கண்டுபிடித்து, அதன் நிமித்தமாக மனுஷனாய்ப் பிறந்த கர்த்தனிடத்திலே தேவ சுபாவமும் மனுஷ சுபாவமும் கட்டின மேரையாக ஒன்றாயிருக்கிறதென்றும், அவர் மனுஷனாகியமட்டும் பிறந்த தாழ்ச்சியையும் பார்த்து நன்றியறிந்து, இப்படிக்கொத்த புண்ணியங்களை அனுசரிக்க வேணுமென்று துணிவான்.

இது தவிர அவர் சருவேசுரனாகியமட்டும் முகிவில்லாப் பிலமும் மகிமையுமாய் இருக்கிறாரென்றும், தங்களுக்குள்ளே மிகுந்த வேற்றுமையுள்ள வஸ்துக்களாகிற சருவேசுரனும் மனுஷனுங், கன்னியாஸ்திரியும் மாதாவும், நித்தியமும் அநித்தியமும், பரமண்டலமும் பூமண்டலமும், மரணமும் சீவியமும் இதுகளெல்லாம் அவர் ஒன்றும், பொருத்தம் பண்ணினதல்லாமல் இப்படிக்கொத்த மனோ வாக்குக்கெட்டாத இரகசியங்களுடைய விசுவாசத்தையும் மனுஷனுடைய மனதிலே தரிக்கப்பண்ணாரென்றும் மனுஷனானவன் கண்டு ஆச்சரியப்பட்டு, அவருக்குப் பயந்து நடக்கக்கடவான்.

அதேதென்றால், தாம் மனுஷனாகப் பிறக்கத்தக்கதாக அனாதியாய் ஸ்தாபித்த கர்த்தரானவர், தம்முடைய மகிமை விளங்குகிறதற்கும், பாவத்தினாலே கெட்டுப்போன மனுஷனை இரக்ஷித்து அவனுக்குச் சகல புண்ணியங்களுடைய மாதிரிகையாயிருக்கிறதற்கும், இந்தப் பிரகாரமாக மனுஷ சுபாவத்தை எடுத்து, மனுஷனாகப் பிறக்க வேண்டியிருந்ததொழிய மற்றப்படியல்ல.

இப்படிக் கர்த்தர் மனுஷனாகப் பிறந்த ராத்திரி அந்த மாட்டுக் கொட்டிலிலே பரிசுத்த கன்னியாஸ்திரியாயிருக்கிற மாதா

வுக்கும் அவருடைய திருக்குமாரனுக்கும் உதவியாக ஒரு ஊத்தானது இருந்தாப்போலே புறப்பட்டதென்றும், அந்த ஊத்தானது அனேகம் வருஷத்துக்குப் பிற்பாடு தாம் இருந்த நாள் வரைக்கும் வற்றுதிருந்ததென்றும், மகாத்துமாவாகிற [1]பேத்தென்கிறவர் எழுதிவைத்தார்.

இப்படிக்கொத்த புதுமை அவ்விடத்திலே சம்பவித்ததினுலேயுஞ், சகல புதுமைகளை அதிசயிக்கிற கர்த்தன் மனுஷனுகப் பிறந்ததினுலேயும், நீச ஸ்தலமாகியிருந்த அந்த மாட்டுக்கொட்டிலானது, பிரபுக்களுடைய சகலமான[2] அரண்மனைகளைப் பார்க்க எண்ணப்படத்தக்க யோக்கியமான ஸ்தலமாயிருந்தது.

இதுநிமித்தமாக கர்த்தன் பிறந்த அந்த மாட்டுக்கொட்டிலிலே, கிறிஸ்துவர்களாயிருக்கிற பேர்கள் எப்போதும் மகாப் பூச்சியமாக எண்ணிக்கொண்டு, வருவார்கள். இதல்லாமல் அதிலே ஒரு சம்பிரமான கோவிலைக் கட்டிவித்துக் அந்தக் கெபியெல்லாம் விலையேறப் பெற்ற கல்லுகளைக்கொண்டு சிங்காரம் பண்ணினுர்கள்.

இப்படிக் கர்த்தன் பிறந்த அந்த ஸ்தலத்தைச் சிங்காரம்பண்ணின கிறிஸ்துவர்கள், அவர் வைக்கோலின் மேலே கிடந்து அத்தாலே உண்டாக்கப்பட்ட முன்னிட்டியை அவடத்திலே நின்று ரோமாபுரி பட்டணத்துக்குக் கொண்டு வந்து அவடத்திலே பரிசுத்த கன்னியாஸ்திரியாயிருக்கிற அர்ச். மாதாவினுடைய பேர் சொல்லிக் கட்டியிருக்கிற கோவிலுக்குள்ளே பிரதான கோவிலிலே மகாப் பூச்சியமாக ஸ்தாபித்தார்கள்.

ஆனபடியினுலே கிறிஸ்துவர்களாயிருக்கிறபேர்கள் இந்த நாள் வரைக்கும் அப்படிக்கொத்த பொக்கிஷமாகிற முன்னிட்டியைப் பார்த்துக் கர்த்தனை ஸ்தோத்திரம் பண்ண வேணுமென்று மகாப் பத்தியோடே அந்த கோவிலிலே திரளாய் வருவார்கள்.

1. Beda   2. சகல

[6. விருத்தசேதன ஆசாரம்]

ஆனால் முன் சொல்லப்பட்ட கர்த்தரானவர் மனுஷனுடைய ஆங்காரத்தைத் தாழ்த்தத்தக்கதாக வந்தவராய் அது மகாக் கனமான அகங்காரமாயிருக்கிறதினாலே, தாம் பிறக்கிறபோது மகா கனமான தாழ்ச்சியைக் காட்டினதும் போதாதென்றுந் தாம் பிறந்த எட்டாம் நாள் விருத்த சேதனம் என்கிற ஆசாரத்தை நிறைவேற்றிக் கொள்ளு கிறதிலேயோ வென்றால், அப்படிக்கொத்த ஆசாரமானது பாவங் களுக்காக ஸ்தாபித்திருக்கிறதினாலே அத்தை நிறைவேற்றிக் கொண்டு கர்த்தரானவர் பாவிக்குண்டான அடையாளத்தைக் கொண்டு காண்பித்தாரென்றே சொல்லவேண்டியிருக்கிறது.

ஆனால் கர்த்தரானவர் மனுஷனாகப் பிறந்து, மனுஷன் செய்த பாவங்களை மேல்போட்டுக்கொண்டு, அந்தப் பாவங் களுக்காக உத்தரிக்கவும் அதுகள் நிமித்தமாக மனுஷனுடைய ஆத்துமத்திலே இருக்கிற அசுத்தத்தையும் தம்முடைய விலைமதி யாத இரத்தத்தினாலே கழுவவும் மனுஷனாக வந்தார். ஆனபடியி னாலே இனிமேல் மனுஷனுக்காகச் சிலுவை மரத்திலே பிதாவா கிய சருவேசுரனுக்குத் தம்மைப் பலியாகக் கொடுக்கப்போகிற காலமாய் இருக்கிறதென்று மனுஷரை இரட்சிக்கிறதற்குத் தமக்குண்டான மனோ வாக்குக் கெட்டாத ஆசையினாலேயும், சிநேகத்தினாலேயும் ஏவப்பட்டு, விருத்தசேதனமென்கிற ஆசா ரத்தை நிறைவேற்றிக் கொள்ளுகிறதிலே தம்முடைய திரு இரத் தத்தைச் சிந்திப்போட்டார். அவர் அந்த சமயத்திலே சிந்திப் போட்ட இரத்தமானது மனுஷன் பேரிலே தமக்குண்டான சிநேகத்துக்கு அடையாளமுமாய், இனிமேல் சிலுவையிலே பாடு பட்டு மரணத்தை அடைகிறபோது மனுஷன் செய்த பாவத் துக்காக உத்தரிக்கிறதற்கு அச்சாரமுமாயிருந்தது.

இதெல்லாம் மகாத்துமாவாகிற அபிரகாமென்கிறவருக்கு முந்தமுந்த விருத்தசேதனமென்கிற ஆசாரமானது கட்டளை யிட்டிருந்ததினாலே, கர்த்தரானவர் தாம் அபிரகாமென்கிறவரு டைய சந்ததியிலே மனுஷனாகப் பிறந்தாரென்றும் அப்படிக் கொத்த விருத்தசேதனமென்கிற ஆசாரமானது அந்நாள் வரைக் கும் நன்றாயிருந்ததென்றுஞ் சரீர சம்மந்தமாயிருக்கிற அந்த விருத்த சேதனத்தினாலே குறித்திருக்கிற சுபாவமான இச்சை களுடைய நிர்க்கிரகமென்கிற ஞான விருத்தசேதனத்தை மனு

ஷனுக்குப் படிப்பிக்க வேணுமென்றும், தாம் விருத்தசேதனம் என்கிற ஆசாரத்தை நிறைவேற்றிக்கொள்ளுகிறதற்குச் சித்த மானார்.

ஆனபடியினாலே, இந்த ஆசாரத்தை நிறைவேற்றுகிறதற்கு வேதத்திலே விசேஷமான ஸ்தலங் குறித்திருக்கவில்லையென்று இருக்கக்கொள்ள, கர்த்தரானவர் தாம் பிறந்த அந்த மாட்டுக் கொட்டிலிலேதானே அந்த ஆசாரத்தை தம்முடையவிடத்திலே நிறைவேற்றப்பண்ணினார். ஆனால் இந்த விருத்தசேதனமென்கிற ஆசாரத்தைத் தம்முடையவிடத்திலே நிறைவேற்றப்பண்ணின வருமாய்ப் பாவியினுடைய அடையாளத்தைக் கொண்டு காண் பித்திருக்கிறவருமாய் நவமாய்ப் பிறந்த இந்தப் பாலனானவர், யாரென்று எல்லாரும் அறியவேண்டியதற்காக அவருக்கு இரக்ஷிக்கிறவரென்கிற பேரிட்டார்கள். இந்தத் திவ்விய நாம தேயமானது பரமண்டலத்திலே பிதாவாகிற சருவேசுரனாலே இடப்பட்ட நாமதேயமாயிருந்ததொழிய, பூமியிலே இடப்பட்ட நாமதேயமாயிருக்கவில்லை.

அதெப்படியென்றால், பரிசுத்த கன்னியாஸ்திரியாயிருக்கிற அர்ச். மாதாவுக்கு சம்மனசானவர் மனுஷ அவதாரத்துக்கடுத்த விசேஷத்தைச் சொல்லுகிறபோது தம்முடைய இடத்திலே நின்று பிறக்கப்போகிற பிள்ளைக்கு சேசுவென்கிற பேரிடுவீர் என்று சொன்னதுமல்லாமல், அர்ச். யோசேப் என்கிறவர்க்குக் காண்பித்து இந்தப் பிரகாரமாய் பேரிடச்சொல்லி அந்தப் பிள்ளை தானே [தனது சனங்களின்] பாவங்களிலே நின்று இரக்ஷிக்க வருவாரென்று வெளிப்படுத்தினார்.

இப்படிச் சம்மனசானவர் சொல்லி வெளிப்படுத்தினதை விசாரிக்கும்போது, மனுஷனாகப் பிறந்த கர்த்தரானவர் சேசு வென்கிற பேர் பெற்றுச் சுவாமாய் ரக்ஷிக்கிறவராயிருக்கிறா ரென்று நாம் நிச்சயம் பண்ணுகிறதல்லாமல் விருத்தசேதன மென்கிற ஆசாரத்தை நிறைவேறப்பண்ணிக் கொள்ளுகிறதிலே பாவியினுடைய அடையாளத்தைக் கொண்டிருந்தது, மனுஷரை இரக்ஷிக்க வந்தவருக்கு, மனுஷனுடைய பாவத்தினாலே மாத்திரம் வந்ததென்று நிச்சயம் பண்ணக்கடவோம். அதேதென்றால் பாவங்களிலே நின்று மனுஷரை இரக்ஷிக்க வந்தவர் எள் பிரமாணமாகிலும் பாவத்துக்கு உள்படமாட்டார் என்கிறதற் குச் சந்தேகமில்லை.

[7. மூன்று இராசாக்கள் சந்தித்தது]

அப்படியே விருத்தசேதனமென்கிற சடங்கு நிறைவேறின அஞ்சாம் நாள் முன் சொல்லப்பட்ட நவமான நக்ஷத்திரத்தைக் கண்டு, கிழக்குத் தேசத்திலே யிருந்து மூன்று இராசாக்கள் வெத்திலயமென்கிற ஊரிலே பிறந்த கர்த்தரை வணங்கவேணு மென்று வந்தார்கள். அதெப்படியென்றால், கர்த்தர் பிறந்த வுடனே கிழக்குத்தேசத்திலே நவமாய்ப் பிறந்த அந்த நக்ஷத் திரத்தினுடைய பிரமாணத்தையும் மிகுந்த பிரகாசத்தையும் அந்த மூன்று இராசாக்கள் கண்டதினாலே மகா ஆச்சரியப் பட்டு, மூன்று இராசாக்கள் தெய்வீகமுமாய் மேலானதுமா யிருக்கிற வேறே பிரகாசத்தினாலே தங்கள் மனதிலே பிரகாசிக் கப்பட்டு, அநாதி இராசாவுமாய் உலகத்தை இரக்ஷிக்கிறவருமா யிருக்கிற கர்த்தன் யூதேய தேசத்திலே நவமாய் மனுஷனாகப் பிறந்தாரென்று அறிந்தார்கள்.

அப்படியே அவர்கள் இஸ்பிரீத்து சாந்துவினாலே ஏவப் பட்டுத் தங்களுடைய இராச்சியங்களையுஞ் செல்வ சுகங்களையும் விட்டு, அவரைத் தேடி வணங்கவேணுமென்று பயணமாகப் புறப்பட்டார்கள். அப்படி அவர்கள் பயணமாகப் புறப்பட்டு போகிறபோது, அந்த நக்ஷத்திரமானது தனது பிரகாசத்தினாலே அவர்களுக்கு வழியைக் காட்டிக்கொண்டு துணைபோலே கூடவே நடந்துபோச்சுது. அந்த நக்ஷத்திரமானது மறைந்து போனதினாலே அவர்கள் செருசலேம் என்கிற பட்டணத்திலே பிரவேசம் பண்ணித் தங்கள் தேசத்திலே நவமாய்த் தங்களுக் குக் காண்பித்த நக்ஷத்திரத்தினுடைய வர்த்தமானத்தை வெளிப் படுத்தி, யூதர்களுக்கு இராசாவாயிருக்கிறவர் எங்கே பிறந் திருக்கிறாரென்று கேட்டார்கள். இந்த விசேஷத்தை அந்தச் சீர்மைக்கு இராசாவாயிருக்கிற எரோதே என்கிற இராசா வானவன் தனது பட்டணத்திலே இருக்கிற வேதபாரகரை அழைப்பித்து அவர்களோடே இந்தக் காரியத்தின்பேரிலே ஆலோசனை பண்ணினான். அப்போது அவர்கள் தீர்க்கத்தரிசிகள் எழுதிவைத்ததின்படியே [1] ‘கொஞ்சக் கிராமமாகிற பெத்லேய மென்கிற ஊரிலே இராசாதி இராசாவாகிற கர்த்தன் மனுஷ னாகப் பிறப்பார்’ என்று சொன்னார்கள்.

1. மிக். 5, 2.

இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கேட்ட ஏரோதை என்கிற இராசாவானவன் அந்த மூன்று இராசாக்களை இரகசியமாய் அழைப்பித்து அவர்களோடே பேசிக்கொண்டு அவர்களுக்குக் கிழக்குத் தேசத்திலே நவமாய்க் காண்பித்த நக்ஷத்திரத்தினுடைய வர்த்தமானத்தைக் கேட்டாராய்ந்து கொண்டதற்குப் பிற்பாடு, தன் மனதிலே கபடுவைத்துக்கொண்டு அவர்களைப் பார்த்து, "நீங்கள் பெத்லேமென்கிற ஊரிலேபோய் நவமாய்ப் பிறந்த பிள்ளையாகிற கிறிஸ்துவென்கிறவர் எங்கே பிறந்திருக்கிறாரென்று குறையற்ற பிரகாரமாக நன்றாய் விசாரியுங்கள். நாமும் அவரை வணங்கத்தக்கதாக, நீங்கள் கண்ட வர்த்தமானத்தைத் [திரும்ப வந்து] நமக்குச் சொல்லுங்கள்" என்று சொல்லி அவர்களை அனுப்பினான்.

அப்படியே அந்த மூன்று இராசாக்கள் பெத்லேயமென்கிற ஊருக்குப் போகவேணுமென்று செருசலேம் என்கிற பட்டணத்தை விட்டுப் புறப்படுகிறபோது, தங்களுக்குக் கிழக்குத் தேசத்திலே நவமாய்க் காண்பித்த நக்ஷத்திரமானது திரும்பக் காண்பித்ததினாலே மகா சந்தோஷப்பட்டார்கள். அவர்கள் இப்படிச் சந்தோஷப்பட்டு வழி நடந்து போகிறபோது அந்த நக்ஷத்திரமானது அவர்களுக்குமுன்னே போகப்போக பெத்திலேயம் என்கிற ஊரிலே கர்த்தர் பிறந்த மாட்டுக் கொட்டில் மட்டும் வழி காட்டிக்கொண்டு அந்த மாட்டுக்கொட்டிலுக்கு மேலாக ஆகாசத்திலே நின்றது.

இந்தடவாக நக்ஷத்திரமானது நின்றதைக் கண்டு மூன்று இராசாக்கள் சங்கோசப்படாமல், அந்த நீசமான மாட்டுக் கொட்டிலிலே பிரவேசம் பண்ணி, அதிலே பிறந்திருக்கிற பாலனானவர் மெய்யாகவே சருவேசுரனும் மனுஷனும் ஒன்றாயிருக்கிறாரென்று விசுவாசத்தினுடைய கண்ணாலே கண்டுபிடித்து, அவர் பாதத்திலே சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கித் தங்களுக்கு உண்டான விசுவாசம், பத்தி, மகிமையைக் காட்ட வேணுமென்கிறதற்காகத் தங்களுடைய பொக்கிஷப் பெட்டிகளைத் திறந்துப், பொன், தூபம், மீறை என்கிற மூன்று காணிக்கைகளை அவருடையப் பாதத்திலே வைத்தார்கள். அதெப்படியென்றால், பிறந்த அப்படிப்பட்ட பாலனானவர் எல்லாத்துக்கும் இராசாவாக இருக்கிறாரென்று [1]பகுதிபோலே பொன்னையும், எல்லாத்தையும் உண்டாக்கின சருவேசுரனுப்

1. கப்பம்

இருக்கிறரென்று தூபத்தையும், மனுஷனுடைய பிாவத்துக்காக உத்தரித்து மரணத்தை அடையப்போகிற மெய்யான மனுஷனுயிருக்கிறரென்று மீறையையும் அடையாளமாகப் பாலனைகப் பிறந்த கர்த்தனேக் கண்டு வணங்கினதற்குப் பிற்பாடு, அவருடைய பாதத்திலே வைத்த மூன்று காணிக்கைகளோடேகூடத் தங்கள் இருதயங்களேயும் காணிக்கையாக வைத்துத் தங்களுக்குச் சம்மனசு காண்பித்து அறிவித்ததினுலே எரோதை என்கிற இராசாவண்டைப் போகாமல் வேறே வழியாகத் தங்களுடைய தேசத்துக்குப் போனுர்கள்.

[8. தேவாலயத்தில் காணிக்கையாகக் கொடுத்தது]

அதற்குப் பிற்பாடு கர்த்தர் பிறந்த நாற்பதாம் நாள் பரி. கன்னி. அர்ச். மாதாவும் அவளுடைய பர்த்தாவாகிற யோசேப் என்கிறவரும் யூதர்களுடைய ஆசாரத்தின்படியே அந்த மாட்டுக் கொட்டிலேவிட்டுத் தங்கள் திருக்குமாரனே எடுத்துக்கொண்டு போய் செருசலேம் என்கிற பட்டணத்திலே இருக்கிற கோவிலிலே தேவ சன்னதியிலே ஸ்தாபித்து அவருக்காக வேத கற்பனேயின்படி தரித்திரருக்கான [காணிக்கை] இரண்டு புருக் குஞ்சுகளேக் காணிக்கையாகக் கொடுத்துத் திரும்ப மீட்டுக் கொண்டார்கள். அப்படியே பரி. கன்னி. அர்ச். மாதாவும், அர்ச். யோசேப் என்கிறவரும் தங்கள் திருக் குமாரனேக் கோவிலியே ஸ்தாபிக்க வேணுமென்று கொண்டுபோனபோது, சர்வேசுரனும் மனுஷனும் ஒன்ருயிருக்கிற பாலனுனவன் மகாத்மாவுமாய் விருத்தனுமாயிருக்கிற சிமியோன் என்கின்றவருக்கும் அந்தக் கோவிலிலே மகாப்பத்தியினுலே விளங்கிக்கொண்டு வருகிற அன்னம்மை என்கிறவளுக்கும் தம்மை லோகத்தை யிரக்ஷிக்கிறவர் என்று அறியப்பண்ணி, அவர்கள் தீர்க்கத்தரிசிகள் மேரையாகச் சொன்ன வார்த்தைகளினுலேயும், அத்தறுவாயிலே சம்பவித்த மற்றக் காரியங்களினுலேயும் தம்முடைய நாமதேயமும் கீர்த்தியும் மெள்ள மெள்ள நாளாவட்டத்திலே மனுஷருக்குள்ளே பரம்பிப் போகத்தக்கதாக உபாயம் பண்ணினுர்.

அதேதென்ருல், உத்தமமானதுமாய் மட்டில்லாததுமாய் இருக்கிற பிரகாரமாக லோகத்தை இரட்சிக்க வந்த இந்தத் திவ்விய பாலனே மனுஷர் தங்களுடைய துர்ப்பெலனுள்ள கண்களினுலே இருந்தாப்போலவே காணமாட்டார்கள். ஆனபடியினுலே, மனுஷர் மெள்ள மெள்ள நாளாவட்டத்தில் அவரை அடுக்கிறது நியாயத்துக்கு ஒத்திருக்கிற மேரையாய் இருந்தது.

இந்தப் பிரகாரமாகச் சருவேசுரனும் மனுஷனும் ஒன்றாயிருக்கிற திவ்விய பாலனை சேசுநாதரை நாற்பதாம் நாள் ஸ்தாபித்து ஆசாரத்தைக் குறையற்ற மேரையாய் நிறைவேற்றின பிற்பாடு பரி. கன்னி. அர்ச். மாதாவும் அர்ச். யோசேப் என்பவரும் தாங்கள் முந்திவாசமாயிருந்த கலிலேயா இராச்சியத்திலுள்ள நசரேத் என்கிற ஊருக்கு எடுத்துக்கொண்டு போய், அங்கே வாசமாயிருந்தார்கள். இப்படி அவர்கள் அந்த ஊரிலே திரும்பிப் போய், வாசமாய் இருந்தது எத்தனை நாளென்றும், எத்தனை மாதமென்றும் நிச்சயமாய்க் கண்டுபிடித்துச் சொல்லக்கூடாது.

[9. எகிப்து தேசத்துக்குப் பிரயாணம்]

அதேதென்றால் ஏரோதை யென்கிற இராசாவானவன் முன் சொல்லப்பட்ட மூன்று இராசாக்கள் தன்னண்டையிலே வராமல் தன்னைப் பரிகாசம் பண்ணிப் போனார்களென்றுஞ், சேசுநாதரைக் கோவிலிலே ஸ்தாபிக்கிறபோது மகாத்துமா வாகிற சிமியோன் என்கிறவரும், அன்னம்மை என்கிறவரும் அவர்பேரிலே பண்ணின ஸ்தோத்திரப் பிரசங்கமானது செருசலேம் என்கிற பட்டணத்திலே பிரசித்தமானதென்றும் கண்டு, இனித் தமது இராசாங்கத்தை சேசுநாதரானவர் கட்டிக்கொள்ளப் போறாரென்றும் பயந்து, அப்படி வராதபடிக்கு அவரைக் கொல்ல வேணுமென்று துணிந்தான். ஆனால் அவர் இன்னவிடத்திலே இருக்கிறாரென்று அறியாதபடியினாலே, அவர் பிறந்த பெத்லேயம் என்கிற ஊரிலேயும் அதுக்கு அடுத்த சுற்றுக் கிராமங்களிலேயும் இருக்கிற குழந்தைகளைக் கொன்று போட்டால் அதிலே சேசுநாதர் அகப்படுவாரென்று விசாரித்து, அவ்விடத்தில் உள்ள இரண்டு வயசுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளை யெல்லாம் கொன்றுபோடச் சொல்லிக் கட்டளை யிட்டான்.

இப்படிக்கொத்த நிஷ்டூரமான துரோகத்தை நினைத்த ஏரோதை என்கிற இராசாவின் கையிலே தமது திருக்குமாரனாகிற சேசுநாதரானவர் அகப்படாதபடிக்கு சருவேசுரனானவர் ஒரு சம்மனசானவரை அனுப்பி, அந்த வர்த்தமானத்தை யோசேப் என்பவரிடம் சொல்ல [அவரும்] திவ்விய பாலனை எடுத்துக்கொண்டு பரி. கன்னி. அர்ச். மாதாவோடே கூட எகிப்து தேசத்துக்குப் பயணமாகப் புறப்பட்டுப் போனார். இந்தப் பிரகாரமாக எல்லாத்துக்கும் சருவேசுரனும் இராசாவுமாய் இருக்கிறவர் நீசனுமாய் நிஷ்டூர இராசாவுமாயிருக்கிற ஒரு மனுஷனுடைய கையிலே அகப்படாத

0984

படிக்குத் தம்முடைய அளவில்லாத பலத்தினாலே நவமான புதுமைகள் பண்ணாமலிருந்தார். அதேதென்றால் இந்தக் காரியத்தைச் சுபாவ மேரையாக நடத்துகிறதினாலே மனுஷன் நினைத்தாப்போலே தாம் புதுமைகளைப் பண்ணிச் சகலமான காரியங்களை நடத்துகிறது தம்முடைய சித்தத்துக்கு ஒத்துவராதென்று காட்டினார். இதல்லாமல் நிஷ்டூரர் பண்ணுகிற கலகத்திலே மகாத்துமாக்களாய் இருக்கிற பேர்கள் அகப்படாதபடிக்கு அப்பாலே போய் ஒதுங்கி அவர்கள் கண்ணிலே சந்தியாதபடிக்குத் தாங்கள் குறித்திருக்கிற பக்குவமான காலம் வருமட்டும் ஒளிந்து பார்த்துக்கொண்டிருக்கிறது தப்பில்லாக் கிரமமுள்ள மேரையாயிருக்குமென்று காட்டினார்.

இப்படிக் காட்டின திவ்விய பாலனான சேசுநாதரானவர் அந்தச் சமயத்திலே எரோதை என்கிற இராசா தம்மைக் கொன்றுபோடாதபடிக்குத் தாம் பிறந்த தேசத்திலே தானே இருந்துகொண்டு வேறே அநேக புதுமைகளை பண்ணினாரென்று சில கிரந்தகர்த்தாக்கள் எழுதிவைத்தார்கள். அந்தப் புதுமைகளுக்குள்ளே சில புதுமைகளை வெளிப்படுத்துகிறோம். ...... அதெப்படியென்றால், பரி. கன்னி. அர்ச். மாதாவானவள் தமது பத்தாவாகிய யோசேப் என்கிறவரோடேகூடத் தம்முடைய திருக்குமாரனை எடுத்துக்கொண்டு எகிப்து தேசத்திலுள்ள எறுமோப்பிலியென்கிற பட்டணத்துக்குப் போனாள். அந்தப் பட்டணத்திலே கோட்டை வாசல் கிட்டே பெரிசி என்கிற பேர் கொண்டிருக்கிற ஒரு பெரிய மரம் இருந்தது. அதிலே பசாசானது குடிகொண்டிருந்து, அவரவர்கள் கேட்ட காரியங்களுக்குப் பிரத்தியுத்தாரங்களைச் சொல்லிக்கொண்டு வரும். அப்படிக்கொத்த மரமானது, எல்லாத்துக்கும் கர்த்தராயிருக்கிற திவ்விய பாலனான சேசுநாதரானவர் கிட்ட வந்தவுடனே, அவரை ஆராதனை பண்ண வேணுமென்று தன் கொப்புகளெல்லாந் தரைமட்டாய் வளைத்தது. இப்படி ஆராதனைப் பண்ணின அந்த மரத்திலேயிருந்த பசாசானது ஓடிப்போனதுமல்லாமல் அந்த மரமானது மகாப் பலன்கொண்டு தனது இலைகளினாலேயும், காய்களினாலேயும், பட்டைகளினாலேயும் சகலமான வியாதிகளுக்கு அவுழ்தமாயிருந்தது.

இந்தடவாகத் திவ்விய பாலனான சேசுநாதரானவர் எகிப்து தேசத்திலே பிரவேசம் பண்ணுகிறபோது அவ்விடத்திலே வாச

மாயிருக்கிற அக்கியானிகளினாலே வணங்கப்படுகிற பசாசுகளுடைய விக்கிரகங்களெல்லாம் விழுந்து உடைந்ததும் அல்லாமல் விசேஷமாய் எறுமொப்புலி என்கிற பட்டணத்திலுள்ள ஒரு கோவிலிலே இருந்த பசாசுகளுடைய விக்கிரகங்களெல்லாம் விழுந்து உடைந்து தகர்ந்து போச்சுது. இந்த வர்த்தமானமானது இப்படிச் சம்பவிக்குமென்று அநேகம் வருஷத்துக்கு முந்தி ஒரு மியசென்கிற (இசையாஸ்?) தீர்க்கதரிசியானவர் திருவுளம் பற்றினார். அதெப்படியென்றால், அப்படித்கொத்த தீர்க்கத்தரிசியானவர் அந்தத் தேசத்திலுள்ள [1]பிராமணரைப் பார்த்து: "ஒரு பரிசுத்த கன்னியாஸ்திரியானவள் தான் பெற்ற பிள்ளையை எடுத்துக்கொண்டு எகிப்து தேசத்துக்கு வருவாள். அவள் வருங்காலத்திலே இந்தத் தேசத்திலே இருக்கிற விக்கிரங்களெல்லாம் விழுந்து உடைந்து தகர்த்து போம்" என்று திருவுளம் பற்றினார்.[2] இது நிமித்தமாக அந்த தேசத்து சனங்கள் சேசுநாதர் பிறந்த பரம இரகசியத்தை அறிகிறதற்கு முந்தி முன்னிட்டியிலே வைக்கோலின் மேலே கிடக்கிற ஒரு பிள்ளையையும் படுக்கையிலே சாய்ந்துகொண்டிருக்கிற பாவனையாக ஒரு கன்னியாஸ்திரியையும் நமஸ்காரம் பண்ணிக்கொண்டு வந்தார்கள்.

இந்தடவாக நமஸ்காரம் பண்ணிக்கொண்டு வந்த எகிப்து தேசத்து சனங்களுக்குள்ளே [3]எலியோப்பிலி யென்கிற பட்டணத்துக்கும் எப்பிலோனியவென்கிற பட்டணத்துக்கும் நடுவாக மத்தறவென்கிற ஸ்தலத்திலே திவ்விய பாலனாகிற சேசுநாதர் பரி: கன்னி. அர்ச். மாதாவோடேயும் அர்ச். யோசேப் என்கிறவரோடேயும் ஏறக்குறைய ஏழு வருஷம் வாசமாய் இருந்தார். இப்படி அவர் வாசமாயிருந்த ஸ்தலத்திலே ஒரு ஊற்றும் ஒரு பாறையும் இருந்தது. அந்த ஊற்றுத் தண்ணீரினாலே பரி. கன்னி. அர்ச். மாதாவானவள் தம்முடைய திருக்குமாரனைக் குளிப்பாட்டி அவருடைய தாரித்திரமாயிருக்கிற வஸ்திரங்களைத் துவைத்து அந்தப்பாறை மேலே காயப்போடுவார். இது நிமித்தமாக அந்த ஊற்றுத் தண்ணீரும், அத்தோடு கலந்திருந்த வேறே தண்ணீரும் அநேகம் புதுமைகளைப் பண்ணிக்கொண்டு வருகிறதினாலே அந்த ஸ்தலத்தை மகாப் பூச்சியமாய் எண்ணிக்கொண்டு, சருவேசுரனும் மனுஷனும் ஒன்றாயிருக்கிற சேசுநாதரானவர் அதிலே சஞ்சாரம் பண்ணினதற்கு அடையாளமாக, எப்போதும் பிரகாசமாய் அணையாமல் இருக்கத்தக்கதாக ஒரு தீபத்தை வைத்தார்கள்.

1. பிற நாட்டு அறிஞரைப் 'பிராமணர்' என்று தத்துவ போதகர் தம் நூலில் அழைக்கிறார்.
2. ? 3. Heliopolis.

[10. மறுபடியும் யூதேயா தேசத்துக்குப் புறப்பட்டுப் போனது.]

அப்படிப்பட்ட ஸ்தலத்திலே திவ்விய பாலனுன சேசுநாதரானவர் தம்முடைய மாதாவாகிற பரிசுத்த கன்னியாஸ்திரியோடேயும், யோசேப் என்கிறவரோடேயும் வாசமாயிருந்த முன் சொல்லப்பட்ட அந்த ஏழு வருஷத்துக்குள்ளே தம்மைக் கொன்றுபோட வேணுமென்று நினைத்துத் தேடின நிஷ்டூரமான ஏரோதை யென்கிறவனும் மற்றப் பாவிகளான பேர்களும் செத்துப்போனுர்கள். இந்த விசேஷத்தை சம்மனசானவர் அர்ச். யோசேப் என்பவருக்குக் காண்பித்து "யூதேயா தேசத்துக்குத் திரும்பப் போ" என்று சொன்னதினுலே அவர் திவ்விய பாலனுகிற சேசுநாதரையும், பரி. கன்னி. அர்ச். மாதாவையுங் கூட்டிக்கொண்டு யூதேயா தேசத்துக்குப் போகவேணுமென்று எகிப்து தேசத்தைவிட்டுப் பயணமாகப் புறப்பட்டுப் போனுர். அப்படி யூதேயா தேசத்துக்குப் போகச்செய்தே, ஏரோதை என்கிறவனுடைய ஸ்தானத்திலே அவனுடைய குமாரனுகிற அற்கலாவு என்கிறவன் ராச்சியபாரம் பண்ணுகிருன் என்று கேட்டு அவ்விடத்திலே போகிறதற்குப் பயந்தார். அப்படிப் பயந்திருந்த அர்ச். யோசேப் என்பவருக்குச் சம்மனசானவர் திரும்பக் காண்பித்து, அந்தச் சம்மனசானவராலே ஏவப்பட்டுக் கலிலேயா இராச்சியத்திலே போய், நசரேத் என்கிற ஊரிலே வாசமாயிருந்தார்.

அப்படியே சருவேசுரனும் மனுஷனும் ஒன்ருயிருக்கிற சேசுநாதரானவரும் அவருடைய மாதாவும், யோசேப் என்கிறவரும் இந்த மூவருமாக நசரேத் என்கிற ஊரிலே வாசமாயிருக்கிறபோது, வருஷத்துக்கு ஒருக்கால் பாஸ்குத் திருநாள் ஆசரிக்க வேணுமென்று செருசலேம் என்கிற பட்டணத்துக்குப் போவார்கள். இராச்சியபாரம் பண்ணுகிற அற்காலாவு என்கிறவன் நிஷ்டூர ராசாவாகிற ஏரோதை என்கிறவனுடைய மகனுயிருக்க கொள்ள, யாதாமொரு நிஷ்டூரம் பண்ணுவானென்றும் அவர்கள் பயப்படுகிறதற்கு அவகாசம் உண்டாயிருந்தாலும், திவ்விய பாலனுன சேசுநாதருக்கு, மனுஷனுகிற மட்டும் அவருடைய மாதாவாயிருக்கிற பரி. கன்னியாஸ்திரியானவளும் அர்ச். யோசேப் என்பவருஞ் சருவேசுரன் கற்பித்த கற்பனைகளின் படியே தப்பில்லாகிரமத்தோடுநடந்துகொண்டு வருவார்கள் என்கிறதினுலே, அந்தத் தூர பயணத்திலே எத்தனை கஸ்தி பிரயாசமுண்டானுலும் அதெல்லாத்தையும் பாராமல் தங்களைக் கைக்

கொண்டிருக்கிற கர்த்தனை நம்பிக்கொண்டு அந்தத் திருநாள் கொண்டாடத் தக்கதாக செருசலேம் என்கிற பட்டணத்துக்குத் திரளாய்ப் போகிற மற்ற சனங்களோடேகூடப் போவார்கள்.

இதிப்படி நடந்து வருகையிலே திவ்விய பாலனாகிற சேசு நாதரானவர் தமக்குப் பன்னிரண்டு வயசுண்டாயிருக்கிறபோது, தம்முடைய அர்ச். மாதாவோடேயும், அர்ச்சியசிஷ்ட யோசேப் என்பவரோடேயும் எப்பவும் போலே பாஸ்குத் திருநாள் கொண்டாடத் தக்கதாக செருசலேம் என்கிற பட்டணத்திற்குப் போனார். அவ்விடத்திலே அர்ச். தேவமாதாவும், அர்ச். யோசெப் என்கிறவரும் அந்தத் திருநாளுக்கடுத்த ஆசாரங்களைக் குறைவில்லாமல் நிறைவேற்றின பிற்பாடு திரும்ப நசரேத் என்கிற ஊருக்குப் போகவேணும் என்று பயணமாகப் புறப்பட்டார்கள்.

[11. வேத சாஸ்திரிகளோடு செய்த சம்பாஷனை]

அப்படியே அவர்கள் பயணமாகப் புறப்படுகிறபோது திவ்விய பாலனாகிற சேசுநாதரானவர் அவர்களிருவருக்கும் அறியாமல், செருசலேம் என்கிற பட்டணத்திலே இருக்கிற கோவிலிலே இருந்துகொண்டார். இப்படித் தங்களோடேகூட வராமல் இருந்துகொண்ட சேசுநாதரானவர் அறிந்தவர்கள் முதலான பந்து சனங்களோடேகூடப் போனாரென்று பரிசுத்த கன்னியாஸ்திரியும், அர்ச். யோசேப் என்கிறவரும் விசாரித்து, ஒரு நாள் பயணம் நடந்ததற்குப் பிறகு அவரைத் தேடிக் காணாமல், மகா அழுகையோடேயும், [சொல்லப்படாத] கஸ்தியோடேயும் மூன்றும் நாட் செருசலேம் என்கிற பட்டணத்திலே இருக்கிற கோவிலிலே திரும்பத் தேடிக்கொண்டு[1] [சாஸ்திரிகளுடைய சபை நடுவிலே பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கிற அவரைக் கண்டார்கள். அந்தப் பிரசங்கத்திலே அவர் திருவுளம் பற்றின வார்த்தைகளைக் கேட்டவர்கள் எல்லோரும் அவருடைய விவேகத்தையும், பிரத்தியுத்தாரத்தையும் கண்டு மிகவும் ஆச்சரியப் பட்டார்கள். பிரசங்கம் முகிந்ததுக்குப் பிறகு அர்ச். மரி. பரி. க. யானவள் தம்முடைய திருக்குமாரனைப் பார்த்து "மகனே! ஏனிப்படிச் செய்தாய்? நாங்களிருவரும் மிகுந்த துக்கத்தோடே உன்னைத் தேடிக்கொண்டு வந்தோம்" என்று சொன்னாள்.

1. இங்கு எழுத்துச் சுவடியில் ஒரு பக்கம் விட்டுப்போயிருக்கிறது. அதற்குப் பதிலாக 26-ம் பிரசங்கங்கள், 14-ம் பிர. பக். 80ல் இருந்து உரிய பகுதியைப் பிறைக்காட்டுக்குள் கொடுத்திருக்கிறோம்.

அதற்கு ஏசுநாதரானவர் சொன்ன பிரத்தியுத்தாரமாவது: "என்னை எதுக்குத் தேடினீர்கள்? என்னுடைய பிதாவுக்கு அடுத்த காரியங்களிலே நானிருக்க வேணுமென்று நீங்கள் அறியாதே போனீர்களோ" என்று திருவுளம் பற்றினர்.

அதுக்குப்பிறகு அவ்விடத்தைவிட்டு அவர்களிருபேரோடே கூட நசரேத் என்கிற ஊருக்குப்போய் அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டு, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து கொண்டு வந்த ஏசுநாதரானவர், தமக்கு இருபத்தொன்பது வயது முடியுமட்டும் தம்முடைய பரிசுத்த மாதாவோடேகூட நசரேத் என்கிற ஊரிலே வாசமாயிருந்தார்.]

அதேனென்றால் தனது ஆங்காரத்தினலே சருவேசுரன் அருளிச்செய்த வார்த்தைகேட்டு, அவருக்குக் கீழ்படியாதே போன மனுஷனை இரக்ஷிக்க வந்த சருவேசுரனும் மனுஷனும் ஒன்றாயிருக்கிற சேசுநாதரானவர், இத்தனை பரம தாழ்ச்சியோடே மனுஷனுடைய வார்த்தைகேட்டு மனுஷருக்குக் கீழ்ப்படிந்து நடந்தது அவருடைய அளவில்லாத தயைக்கு ஒத்திருக்கிற ஒழுங்காயிருந்தது.

இதல்லாமல் பிள்ளைகளாயிருக்கிற பேர்கள் தங்களைப்பெற்ற தாய் தகப்பனுக்குந், தங்களுக்குத் தகப்பன் ஸ்தானத்திலேயிருக்கிற பேர்களுக்குக் கீழ்ப்படிந்து அவர்களுடைய வார்த்தைகளின்படியே நடக்கவேணும் என்கிற படிப்பினை காட்டவேணுமென்கிறதற்கு அடுத்ததாகத், தமக்கு மெய்யான மாதாவாயிருக்கிற பரிசுத்த கன்னியாஸ்திரியுடைய வார்த்தையைக்கேட்டு அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்ததுந்தவிர, தமக்கு மெய்யான தகப்பனாயிராமல் தகப்பன் ஸ்தானத்திலே இருந்த அர்ச். யோசேப் என்கிறவருக்குக் கீழ்ப்படிந்து நடந்தார். இப்படித் தம்முடைய மெய்யான மாதாவாகிற பரிசுத்த கன்னியாஸ்திரியாகிற மாதாவுக்கு உகந்த தகப்பன் ஸ்தானத்திலேயிருக்கிற அர்ச். யோசேப் என்கிறவருக்குங் கீழ்ப்படிந்து நடந்துகொண்டு வந்த சேசுநாதரானவர், நசரேத் என்கிற ஊரிலே தாம் மனுஷவதாரம் பண்ணின கிரகத்திலேதானே அவர்களோடேகூட [அநேக நாள்] வாசமாயிருந்தார்.

[12. நசரேத்தூரில் நடந்த வர்த்தமானம்]

ஆன [திவ்விய கர்த்தரானவர் நசரேத் தென்கிற பட்டணத்திலே அநேக நாள் வாசமாயிருந்த] படியினலே அவருக்கு நச

ரேனு என்கிற பட்டபேர் உண்டாச்சுது. இந்தப் பேருக்கு அர்த்தமேதென்றால், புஷ்பம் நிறைந்திருக்கிறவர் என்றும், அர்ச்சியசிஷ்டர் என்றும்,பிரிந்திருக்கிறவர் என்றும் சொல்லப்படும். அதேதென்றால், சேசுநாதரானவர் மெய்யாகவே யோசேப் என்கிறவருடைய கோத்திரமாகிற கிளையிலே பூத்திருக்கிற பிரிய வாசனையுள்ள புஷ்பமுமாய், தமது உத்தம புண்ணியங்களுடைய வாசனையினாலே லோகமெங்கும் பரிமளித்துச் சகல அர்ச்சியசிஷ்டவர்களுக்குத் தலையான அர்ச்சியசிஷ்டவருமாய்ப் பாவம் என்னப்பட்ட யாவுக்கும் புறத்திப்பட்டுப் பிரிந்திருக்கப்பட்டவருமாய் இருக்கிறார். இப்படிப்பட்ட பரம இரகசியங்களைக் கொண்டிருக்கிற நசரேனுவென்கிற பட்டப்பேரானது சேசுநாதருடைய சிலுவையின் மேலே யூதர்களினாலே பரிகாசமாய் எழுதப்பட்டிருந்தாலும், கிறிஸ்தவர்களாய் இருக்கப்பட்ட பேர்களுக்கு மகாப் பூச்சியமாயிருக்கிறது. இதுநிமித்தமாகப் பூர்வ காலத்திலே கிறிஸ்து என்கிற சேசுநாதருடைய உபதேசத்தைக் கேட்டு ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு கிறிஸ்துவர்கள் என்கிற பேர் நடத்துகிறதற்கு முந்தி, அநேக நாளாய் நசரேனு என்கிற பேர் நடந்து வந்தது.

இப்படிக்கொத்த நசரேனு என்கிற பட்டப்பேர் கொண்டிருக்கிற சேசுநாதரானவர் நசரேத் என்கிற ஊரிலே வாசமாயிருக்கும்போது, தம்முடைய அர்ச். மாதாவோடேயும், அர்ச். யோசேப் என்பரோடேயும் தரித்திரத்தை அனுபவித்துக் கொண்டு வந்ததினாலே அவர்களோடேகூடத் தமது கிரகத்திலே அதுக்கான வேலையைச் செய்துகொண்டு சீவனோபாயம் பண்ணிக் கொண்டு வந்தார். இதல்லாமல், சேசுநாதரானவருக்கு வயசு வர்த்திக்க வர்த்திக்க சருவேசுரனுடைய சந்நிதியிலே சகல புண்ணியங்களுடைய சோபனத்தினாலே அவர் அதிகமதிகமாய் விளங்கி, மனுஷர் கண்டிருக்கையிலே பரம ஞானம் முதலான புண்ணியங்களுடைய அபிவிருத்தியை நாளுக்கு நாள் அதிகமதிகமாக அடைந்துகொண்டு வந்தார். இப்படிச் சகல புண்ணியங்களுடைய மகிமை யடைந்துகொண்டு வந்த சர்வேசுரனுடைய வார்த்தையாகிற சேசுநாதர், அங்கங்கே உபதேசம் சொல்லித் தாம் யாரென்று பிரசித்தம் பண்ணாமல், மௌனமாயிருந்தாப்போலே இருபத்தொன்பதாம் வயசு பரியந்தம் நசரேத் என்கிற ஊரிலே வாசமாயிருந்தார்.

[13. ஞானஸ்நானம் பெற்றது.]

அதுக்குப் பிற்பாடு ஏசுநாதருக்கு, சருவேசுரன் குறித்திருக்கிற பக்குவ காலமாகிற முப்பதாம் வயசு அவருக்கு துவக்கிற போது, அவருக்கு முந்தி மரணத்தை அடைந்திருந்த அர்ச். யோசேப் என்கிறவர் இல்லாதபடியினாலே தம்முடைய அர்ச். மாதாவாகிற பரிசுத்த கன்னியாஸ்திரியை மாத்திரம் அனுப்பிவித்துக்கொண்டு, ஸ்நாபகனென அருளப்பர் கையிலே ஸ்நானம் பண்ணிவித்துக் கொள்ள வேணுமென்று கலிலேயா இராச்சியத்திலுள்ள நசரேத் என்கிற ஊரைவிட்டு, யோர்தான் என்கிற நதியிலே மற்றச் சனங்களுக்கு ஸ்நானம் பண்ணிவித்துக்கொண்டு வருகிற அருளப்பர் அண்டைக்குப் போனார்.

அதேனென்றால், சற்றாகிலும் பாவமில்லாத சேசுநாதரானவர் பாவிகளாயிருக்கிற பேர்களோடே கூடத் தமக்குத் தாசனாயிருக்கிற ஸ்நாபகனென அருளப்பர் கையிலே ஸ்நான ஆசாரத்தைப் பண்ணிக்கொள்ளுகிறதிலே தமது பரம தாழ்ச்சியையும் அந்த ஸ்நான ஆசாரமானது அக்காலத்துக்குப் பிற்பாடு தாம் கற்பிக்கப்போகிற ஞானஸ்நானத்துக்கு அடையாளமாயிருக்கக் கொள்ள, அது நல்ல ஆசாரமென்று காட்டத்தக்கதாகச் சித்தமானார். இதல்லாமல் தமக்கு சாக்ஷியாய் வந்த ஸ்நாபகனென அருளப்பருக்கு நவமான வரங்களைக் கொடுத்து அவர் கையிலே அப்படிக்கொத்த ஸ்நான ஆசாரத்தைப் பண்ணிவித்துக்கொள்ளுகிறபோது, தம்முடைய ஸ்நானத்திலே மனுஷர் சருவேசுரனுக்கு உகந்த பிள்ளையாய் இருக்கிறதற்கு உதவியாயிருக்கப் போகிற தண்ணீரைத் தொட்டுச் சுத்தம் பண்ணவேண்டியிருந்தது. பின்னையும் தம்முடைய திவ்விய உபதேசத்தைச் சொல்லுகிறதற்கு முந்தி சற்குருவாகிற சேசுநாதரானவர் அந்த ஸ்நான ஆசாரத்தைப் பண்ணிவித்துக்கொள்ளுகிறதிலே, உபதேசம் சொல்லுகிற குருக்கள் முதலானபேர்கள் உபதேசம் சொல்லுகிறதற்குப் பாவமென்கிற அழுக்கில்லாமல் சுத்தமுள்ளவர்களாயிருக்க வேணுமென்று படிப்பித்தார்.

இது முதலான நியாயங்களினாலே யோர்தானிய என்கிற நதியிலே ஸ்நாபகனென அருளப்பருடைய கையிலே ஸ்நானம் பண்ணிவித்துக்கொள்ளவேணுமென்று எழுந்தருளின சேசுநாதரானவரை அருளப்பர் கண்டவுடனே, அவருக்கு சர்வேசுரன் இன்னார் என்று அறிவித்ததினாலே, அவரை இன்னாரென்று

அறிந்து மகா ஆச்சரியப்பட்டார். அப்படி ஆச்சரியப்பட்ட ஸ்நாபகனென அர்ச். அருளப்பரானவர் சேசுநாதரைப் பார்த்துச் சொன்னதாவது: "சுவாமி அடியேன் தேவரீர் கையிலே ஸ்நானம் பெறவேண்டி யிருக்கையிலே தேவரீர் அடியேன் கையிலே ஸ்நானம் பண்ணிவித்துக்கொள்ள வேணுமென்று அடியேன் அண்டையிலே வருகிறீரோ?" என்று விண்ணப்பம் செய்ததற்கு சேசுநாதரானவர் "நீ மற்றவர்களிடத்திலே ஸ்நான ஆசாரத்தை நடத்திக்கொண்டு வருகிறப்போலே என்னிடத்தி லேயும் இந்த ஆசாரத்தை நிறைவேற்றுவாயாக. அதேதென்றால் இந்தப் பிரகாரமாக நீதியென்னப்பட்டதெல்லாத்தையும் நாம் பரி பாலனம்பண்ண வேண்டியிருக்கிறது" என்று திருவுளம்பற்றி னார். இப்படித் திருவுளம்பற்றின சேசுநாதருடைய வார்த்தையை ஸ்நாபகனென அருளப்பர் கேட்டு மற்றவர்களிடத்திலே நடத்திக் கொண்டு வருகிற ஸ்நான ஆசாரத்தைத், தனக்கு ஆண்டவரா யிருக்கிற சேசுநாதரிடத்திலே, மிகுந்த தாழ்ச்சி ஒடுக்கவணக் கத்தோடு நிறைவேற்றினார்.

இந்தப் பிரகாரமாகத் தமக்குத் தாசனாயிருக்கிற ஸ்நாபகனென அருளப்பர் கையிலே சருவேசுரனும் மனுஷனும் ஒன்றாயிருக்கிற சேசுநாதரானவர் ஸ்நானம் பண்ணிவித்துக் கொண்டவுடனே, தண்ணீரைவிட்டுக் கரையேறுகிறபோது, அந்தத் தண்ணீரிலே யிருந்து மிகுந்த பிரகாசம் எழும்பி அவரைச் சூழ்ந்துகொண்டது. இதல்லாமல் சோர்தான் என்கிற நதியின் கரையின் மேலே ஏறின சேசுநாதரானவர், மனுஷனாகிய மட்டும் பிதாவாகிய சருவேசுரனைப் பார்த்து செபம் பண்ணிக்கொண்டு வருகையிலே மூன்று அற்புதங்கள் சம்பவித்தது. அதேதென்றால், பரமண் டலமானது நீங்கித் திறக்கப்பட்டதுமல்லாமல் அதில் நின்று "நீ எனக்கு ஒன்றான சுதனாயிருக்கிறாய், நான் உன்னிடத்திலே மிகவும் சந்தோஷமாய் இருக்கிறேன்" என்கிற பிதாவாகிய சருவேசுரனுடைய சத்தமானது கேள்கப்பட்டது. கடைசி யிலே தேவஸ்நேகமாகிற இஸ்பிரித்து சாந்துவானவர் சேசு நாதருடைய தலைமேலே நிர்மலமான புறா ரூபமாக வந்திறங்கி நிலையாக நின்றாரென்று காணப்பட்டது.

இந்தப்பிரகாரமாக அத்தருவாயிலே பிதா, சுதன், இஸ்பி ரீத்து சாந்து என்கிற திரித்துவ ஏகத்துவத்தினுடைய பரம இரகசியமானது லக்ஷணமாக விளங்கினதும் போராமல் பிதா

வாகிய சருவேசுரன், இத்தனை பரம தாழ்ச்சியோடே ஸ்நான ஆசாரத்தைப் பண்ணிவித்துக்கொண்ட சேசுநாதரானவர் தமக்கு மெய்யான சுதன் என்றும், அவர் லோகத்துக்கெல்லாம் சத்தியத்தைக் குறையற்றபிரகாரமாகப் படிப்பிக்க வந்த சற்குருவென்றும், மனுஷனுடைய பாவத்தினாலே அடைக்கப்பட்டிருந்த மோக்ஷத்தினுடைய வாசலானது அவருடைய முகாந்திரமாகத் திறக்கப்பட்டதென்றும் விளங்கப் பண்ணினார்.

இப்படிப் பிதாவாகிய சருவேசுரன் தம்முடைய திருக்குமாரனாகிற சேசுநாதருடைய மகிமையை விளங்கப் பண்ணினதும் போராமல், அவர் ஸ்நானம் பண்ணிவித்துக்கொண்ட [யோர்தானிய நதியின் தண்ணீராலே அத்தை விளங்கப் பண்ணினார். அதெப்படியென்றால், அந்த யோர்த்தானிய வென்கிற நதியிலே சேசுநாதர் ஸ்நானம் பண்ணிவித்துக் கொண்ட] அந்த தலத்திலே குஷ்ட வியாதி முதலான வியாதிகளைக்கொண்டு இருக்கிற பேர்கள் அந்தத் தண்ணீரிலே ஸ்நானம் பண்ணினதினாலே வியாதிகள் நீங்கி ஆரோக்கியத்தை அடைவார்கள். ஆனபடியினாலே கிறிஸ்தவர்களாயிருக்கிற பேர்கள், சேசுநாதரானவர் அந்த நதியிலே ஸ்நானம் பண்ணிவித்துக்கொண்டாரென்றும் அவ்விடத்திலே அத்தனை புதுமை சம்பவித்துக்கொண்டு வருகிறதென்றும் கண்டு அந்த சோர்தான் என்கிற நதியின் தண்ணீரை மகாப் பூச்சியமாகப் பண்ணிக்கொண்டு வருவார்கள். இதினிமித்தமாக மகாத்துமாக்களா யிருக்கிற சில பேர்கள் தங்கள் பத்தியினாலே யோர்தான் என்கிற நதியிலே போய்த் தண்ணீரினாலே ஸ்நானம் பெற்றார்கள்.

[14. நாற்பதுநாள் உபவாசமாயிருந்த ஒழுக்கம்]

அப்படிக்கொத்த சோர்தான் என்கிற நதியிலே முன்சொல்லப்பட்ட பிரகாரமாக சேசுநாதரானவர் ஸ்நானம் பண்ணிவித்துக்கொண்டதற்குப் பிற்பாடு, கிறிஸ்துவனாயிருக்கிறவன் ஞானஸ்நானம் பெற்றவுடனே தபசு பண்ணிக்கொண்டு பசாசோடே யுத்தம் பண்ணத் துவக்கவேணுமென்று காட்டினார். அதெப்படியென்றால், சேசுநாதரானவர் ஸ்நான ஆசாரத்தைப் பண்ணிவித்துக்கொண்டவுடனே, அங்கே தம்முடைய திவ்விய உபதேசத்தைச் சொல்லப் புறப்படாமல் தவசு பண்ண வேணுமென்றும், பசாசினாலே சோதிக்கப்பட்டுப் பசாசோடே யுத்தம்

பண்ணிச் செபிக்க வேணுமென்றும், இஸ்பிரித்துசாந்துவினலே வனத்திலே கூட்டிக்கொண்டு போகப்பட்டார். அப்படியே, சேசுநாதரானவர் வனத்திலே போயிருந்து நாற்பது நாள் இராத்திரியும் பகலும் ஒன்றும் பொசியாமல் இருந்ததற்குப் பிற்பாடு, பாடுபடத் தாம் மெய்யாகவே மனுஷ சுபாவத்தைக் கொண்டிருக்கிருரென்று காட்டுகிறதற்குப் பசித்திருந்தார்.

இப்படிச் சேசுநாதரானவர் பசித்திருந்த நிமித்தமாகப் பசாசானது அவரைச் சோதிக்கத்தக்கதாக அவரண்டையிலே வந்து, முந்த முந்தக் கல்லுகளை அப்பமாகப் பொசிக்கச்சொல்லிற்று. பிறகு செருசலேம் என்கிற பட்டணத்திலே இருக்கிற கோவிலின் உசந்த சிகரத்தின் மேலே இருந்து அவரை விழச்சொல்லிற்று. கடைசியிலே உசந்த பருவதத்தின்மேலே இருந்து லோகத்திலுள்ள சகலமான இராச்சியங்களைக் காட்டி, 'நீ என்னை வணங்கினுயானல் இதெல்லாத்தையும் உனக்குத் தருகிறேன்' என்று இலச்சை இல்லாமல் சொல்லிற்று. இந்தப் பிரகாரமாகப் பசாசானது சோதித்த மூன்று சோதனைகளிலே சேசுநாதரானவர் அகப்படாமல், முந்தின சோதனையிலே "சருவேசுரனுடைய வார்த்தையினலே மனுஷனுக்குப் பிழைப்புண்டாயிருக்குமொழிய அப்பத்தினலே மாத்திரம் பிழைக்கிறதில்லை" யென்றும், இரண்டாஞ் சோதனையிலே "சருவேசுரனை சோதிக்கவேண்டாம்" என்றும், மூன்ருஞ் சோதனையிலே "ஒரு சருவேசுரனை மாத்திரங் கும்பிட்டு அவருக்கு ஊழியம் பண்ண வேணும்" என்றும் திருவுளம்பற்றி பசாசைச் செயித்தார்.

இப்படி சேசுநாதரானவர் பசாசைச்செய்ததினலே மனுஷனவன் அப்படிக்கொத்த சோதனைகளிலே அகப்படாமல், [பிரயாசப்படவேண்டியது]. பசாசை செயித்ததற்குப் பிற்பாடு சம்மனசுக்கள் வந்து அவருக்குச் சில போசனபதார்த்தங்களைப் பரிமாறி ஊழியம் பண்ணினர்கள். இத்தனை கடினமாகச் சேசுநாதரானவர் தவசு பண்ணிப் பாசாசினலே சோதிக்கப்பட்டிருந்த வனமானது செருசலேம் என்கிற பட்டணத்துக்கும் எரிக்கோ என்கிற பட்டணத்துக்கும் நடுவாயிருக்குது. அந்த வனத்துக்கப்பாலே இரண்டு நாழிகை வழி தூரத்திலே சேசுநாதரை பசாசானது மூன்ரும் சோதனை பண்ணின மலையிருக்குது. அந்த மலைக்குப் பசாசுமலை என்கிற பேரிட்டார்கள்.

[15. சீஷர்களைத் தெரிந்து கொண்டது.]

இப்படிக்கொத்த வனத்திலேயும், பருவதத்திலேயும் பசாசைச் செயித்த சேசுநாதரானவர் அந்த வனத்தைவிட்டுப் புறப்பட்டார். அவர் புறப்பட்டவுடனே பாவமென்கிற அந்தகாரத்தினாலே சூழப்பட்டிருக்கிற லோகமெங்கும் தம்முடைய திவ்விய உபதேசத்தின் பிரகாசத்தைப் பரம்பப் பண்ணுகிறதற்கான சீஷர்களைத் தெரிந்துகொண்டார். அப்படி அவர் தெரிந்து கொண்ட சீஷர்களுக்குள்ளே ஏழைகளுமாய்த் தரித்திருமாயிருக்கிற பன்னிரண்டு சீஷர்களைத் தெரிந்துகொண்டு, அவர்களுக்கு 'அனுப்பப்பட்டவர்கள்' என்கிற அர்த்தத்தைக் கொண்டிருக்கிற அப்போஸ்தலர் என்கிற பேரிட்டார். அந்தப் பன்னிரு சீஷர்களாகிற அப்போஸ்தலர் யாரென்றால்: கூடப்பிறந்தவர்களாகிற அர்ச். இராயப்பர், அர்ச். பிலேந்திரர் இருவரும், செப்போதோவு என்கிறவருடைய பிள்ளைகளாயிருக்கிற அர்ச். பெரிய வியாகப்பர், அர்ச். அருளப்பர் இருவரும், அர்ச். பிலிப்பு அர்ச். பார்தலமேவு, அர்ச். மத்தேவு, அர்ச். தோமை, அர்ச் சின்ன வியாகப்பர், [அர்ச். ததேயு] அர்ச். சீமோன், தேவ துரோகியாய்ப்போன யூதாஸ் கரியோத். இப்படிக்கொத்த பேருடைத்தான பன்னிரண்டு சீஷர்களை அப்போஸ்தலரென்று சேசுநாதர் தெரிந்து கொண்டார்.

அவர்களைத் தெரிந்துகொண்ட தலம் ஏதென்றால், கபாற்னவுமென்கிற பட்டணத்துக்கு ஏறக்குறைய மூன்று நாழி வழி தூரமாயிருக்கிற ஒரு மலை மேலே போய் அந்தப் பன்னிரண்டு சீஷர்களோடேகூட இருக்கிறபோது அந்தக் காரியத்துக்காகப் பிதாவாகிய சருவேசுரனை வேண்டிக்கொண்டதற்குப் பிற்பாடு அவர்களைத் தெரிந்துகொண்டார். அந்த மலையிலே சேசுநாதரானவர் தம்முடைய சீஷர்களைத் தெரிந்துகொண்டதினாலேயும், அனேகம் விசைபோய்ச் செபத்தியானம் பண்ணிக்கொண்டு வந்ததினாலேயும், அவ்விடத்திலே ஞானப்பிரசங்கம் பண்ணினதினாலேயும், அந்த மலைக்குச் சேசுநாதருடைய மலையென்று பேரிட்டார்கள். அப்படிக்கொத்த மலையிலே சேசுநாதரானவர் தாம் தெரிந்து கொண்ட பன்னிரண்டு சீஷர்களையும் அங்கங்கே உபதேசம் பண்ணி மோக்ஷத்துக்கு ஆன வழியைச் சொல்லிக் காட்டத்தக்கதாக அனுப்புகிறதுக்கு முந்தித் தாந்தாமே அப்படிப்பட்ட மோக்ஷத்துக்கான வழியை அந்தந்தத் தேசத்திலுள்ள பேர்

களுக்குத் தம்முடைய திருவாக்கினாலே சொல்லிக்காட்டத்தக்க தாகச் [திருவுள] சித்தமானார். இப்படி மனுஷரைக் கரை யேற்றத்தக்கதாகச் சித்தமான சேசுநாதரானவர் தம்முடைய திருவாக்கினாலே அருளிச்செய்த உபதேசம் ஏதென்றால், பராபர வஸ்துவின் பத்திலே அறியவேண்டியன திரித்தவ ஏகத்துவ மாகிற பரம இரகசியத்தை எல்லாரும் முழு விசுவாசத்தோடே கண்டுபிடிக்கிறதற்கு அந்தப் பரம இரகசியத்தை விபரமாக வெளிப்படுத்தினார்.

[16. பிரசங்கித்த சுகிர்த போதகம்]

அப்படியே உலோகம் துவக்கி சேசுநாதரானவர் வந்த பரியந்தம், தீர்க்கதரிசிகள் முதலான மகாத்துமாக்களான பெரியவர்கள் மாத்திரம் அறிந்த இந்தப் பரம இரகசியத்தைத் தேவ குருவாகிற சேசுநாதரானவர், கரையேறத்தக்க அறிக் கையுள்ள சனங்கள் எல்லாருக்கும் அறியப்பண்ணினார். ஆனால் சருவேசுரன் எப்படிக்கொத்தவரென்று அறிகிறதுமாத்திரம் போராமல், அவரைக் குறையற்ற பிரகாரமாக வணங்கி வேண் டிக்கொள்ள வேணுமென்கிறதினாலே சேசுநாதரானவர், சருவே சுரனை வேண்டிக்கொள்ளத்தக்க பழுதற்ற மேரையாய் எல்லா ரும் அறிந்து அவரை வேண்டிக்கொள்ளும்படிக்குப், 'பரமண் டல மந்திரம்' என்கிறதை உண்டாக்கிப் படிப்பித்தார். இப்படி மனுஷர் சருவேசுரனை வேண்டிக்கொள்ளுகிறதுமல்லா மல், மோக்ஷக் கரையேறுகிறதற்கு அவருடைய சித்தத்தின்படி யே நடக்க வேண்டி இருக்கிறது. இது நிமித்தமாகப் பூர்வ காலங்களிலே சருவேசுரன் கற்பித்தருளின பத்துக் கற்பனை களின்படியே நடக்கத்தக்கதாக அதுகளைப் உத்தம பிரகாரமாக வெளிப்படுத்தினார்.

அதெப்படியென்றால், சருவேசுரனுயிராத வஸ்துக்களை வணங்காமலும், அதுகளை உண்டாக்கின சருவேசுரனை மாத்திரம் உத்தம பிரகாரமாக மாத்திரம் வணங்கிக் குறையற்ற கருத்தைக் கொண்டு முழுப் பத்தியோடேயும் முழு மனதோடேயும் எல்லாத்திலும் பார்க்க அவர்பேரிலே எல்லாரும் பத்தியாயிருக்க வும், சரீரமில்லாத அப்படிப்பட்ட சருவேசுரனை வணங்கத்தக்க மேரையை அனுசரித்துக் கொண்டு வரவும் உபதேசித்தருளினார். இது தவிரப் பொய்யான விசேஷங்களைச் சொல்லாமல், தாய் தகப்பன் முதலான பெரியவர்களை எண்ணத்தக்க வகையையும்

அவர்களைப் பார்த்துப் பண்ணத்தக்க வெகுமானத்தையும் அறியப்பண்ணினதுமல்லாமல், கொலைபாதகம் பண்ண வொண்ணாதென்கிற கற்பனையினாலே விதிக்கப்பட்ட தர்ம ஆசாரத்தைக் குறைவில்லாமல் நிறைவேற்றுகிறதற்குச் சத்துருக்கள் பேரிலே சிநேகமாயிருக்கவும் தூஷணம் சொல்லுகிற பேர்களுக்கு சருவேசுரனை வேண்டிக்கொள்ளவும், பொல்லாப்பாகிற அபகாரம் பண்ணுகிறவர்களுக்கு உபகாரம் பண்ணவும் கட்டளையிட்டருளினார். இதன்றியே மோக சம்மந்தமாயிருக்கிற அசுத்த நடக்கை என்னப்பட்டதெல்லாத்தையும் விலக்கினதும் போராமல், இப்படிப்பட்ட தூர்கந்த மோக விசாரங்களுக்கு மனதிலே முதலாய் சம்மதிக்கவொண்ணாதென்று கற்பித்தருளிச் சமுசாரிகளுடைய தர்ம மேரையை இன்னதென்று வெளிப்படுத்தினார். அப்படியே ஒருத்தனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருத்தன் என்று உண்டாயிருக்கிற தர்ம விவாகத்தினுடைய கட்டானது சருவேசுரனாலே கற்பிக்கப்பட்டதா யிருக்கக்கொள்ளூ, நடுவது பாதியிலே மனுஷனாலே அவிழ்க்கக்கூடாதென்றும், மரணபரியந்தம் அந்தக் கட்டானது திடமாயிருக்கிறதென்றும் உபதேசித்தருளினார். இது தவிர, களவு, திருட்டு என்னப்பட்ட தெல்லாத்தையும் முழுதும் தவிர்த்து, வெகுமானம் முதலான நிமித்தங்களினாலே அவனவன் தனக்குண்டான திரவியத்தை இச்சை மேரையாகச் சிலவு பண்ணாமல், பண்ணப்படுகிற தர்ம தானமானது பிரயோசனமா யிருக்கிறதற்குத் தர்மதானம் பண்ணுகிற கிரமமுள்ள மேரையை இன்னதென்று அறியப்பண்ணினார்.

இதல்லாமல் ஆங்காரம் மோகம் லோபமென்கிற இந்த மூன்றாசையினாலே மனுஷன் கெட்டுப்போறானென்று சற்குருவான சேசுநாதரானவர் கண்டு அவனை இரட்சிக்கிறதற்குத் தாழ்ச்சி, விரத்தத்துவம், மனதினாலே வருகிற தாரித்திரம் இந்த மூன்று புண்ணியங்களைப் படிப்பித்து அதிலே சந்நியாசிகள் முதலான தவசிகளுக்கு உண்டான உத்தம நடக்கைகளைக் காட்டினதுமல்லாமல், சமுசாரி முதலான பேர்களுக்கு அதுக்குக் கீழ்த்தரமாயிருக்கிற வேறே வகையுள்ள நடக்கையைக் காட்டினார். அப்படியே எல்லாரையும் இரக்ஷிக்கிறதற்கு வந்த சேசுநாதரானவர், எல்லாரும் கரையேறுகிறதற்கு முன் சொல்லப்பட்ட புண்ணியங்கள் முதலான புண்ணியம் என்னப்பட்டதெல்லாத்தையும் காட்டிக்கொண்டு, பாவமென்னப்பட்ட யாவையும் வெறுத்து நடக்கத்தக்கதாக உபதேசம் பண்ணினதுந் தவிர,

லௌகீக வெகுமான பாக்கியங்களை மனுஷனானவன் சட்டை பண்ணாதபடிக்கு இந்தப் பூலோகத்திலே ஆசைப்படத்தக்க மெய்யான பாக்கியம் எப்படிக்கொத்தது என்று வெளிப்படுத்தினார்.

அவர் இந்தக் காரியம் வெளிப்படுத்தின வகையேதென்றால், 'சருவேசுரன் நிமித்தமாக மனதிலே தாரித்திரமுள்ள பேர்களை மோக்ஷத்துக்குடைய பேர்களாயிருக்கக்கொள்ள பாக்கியவான்களாயிருக்கிறார்கள்' என்றும், 'பாவங்களைப் பண்ணினதினாலே மனஸ்தாபப்பட்டு அழுகிற பேர்கள் பாக்கியவான்களாயிருக்கிறார்கள்' என்றும், 'சுத்தமுள்ள இருதயத்தைக் கொண்டிருக்கிற பேர்கள் பாக்கியவான்களாய் இருக்கிறார்கள்' என்றும், 'சமாதானமுள்ள பேர்கள் பாக்கியவான்களாயிருக்கிறார்கள்' என்றும் 'நீதி நியாயத்தின் முகாந்திரமாக வாதை அனுபவிக்கிற பேர்கள் பாக்கியவான்களா யிருக்கிறார்கள்' என்றும் சற்குருவாகிற சேசுநாதரானவர் திருவுளம்பற்றினார்.

இப்படிக்கொத்த தம்முடைய திவ்விய உபதேசத்தை சேசுநாதர் படிப்பித்த வகையானது மகா உத்தமமாயிருந்தது. அதேதென்றால், தேவகுருவாகிற சேசுநாதரானவர் உபதேசஞ் சொல்லுகிறபோது, எல்லாரும் தம்முடைய உபதேசத்தைக் கண்டுபிடிக்கத் தக்கதாக சில திருஷ்டாந்தர உவமைகளினாலே அத்தை வெளிப்படுத்துவார். இந்தப் பிரகாரமாக சாஸ்திரிகளாயிருக்கிற பேர்களுக்கும் விபரமாய் புத்தி சொல்லி எல்லாரும் மோக்ஷத்தை அடையத்தக்கதாக வழியைக் காட்டுவார். இந்தடவாகச் சற்குருவாகிற சேசுநாதரானவர் உபதேசம் சொல்லிக்கொண்டு வருகிறதிலே விளங்கின மகிமைகளுக்குள்ளே மற்றக் குருக்களுக்கில்லாத ஒரு விசேஷமான மகிமை விளங்கிற்று. அதெப்படியென்றால், மற்றக் குருக்களாயிருக்கிற பேர்கள், சொல்லுகிற உபதேச வார்த்தைகளை அவனவன் காதிலே விழப்பண்ணுவார்களொழியத் தங்களுடைய உபதேசத்தினாலே அவனவனுடைய மனதிலே ஞானத்தெளிவைக் கொடுத்து மனதைத் திருப்பவும், தாங்கள் படிப்பித்த சத்தியத்தின்படியே அவனவன் நடக்கிறதற்குப் பலத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கமாட்டார்கள். தேவகுருவான சேசுநாதரோவென்றால் மனுஷ சுபாவத்தோடே கூடத் தேவ சுபாவத்தைக்கொண்டிருந்து மெய்யான சருவேசுரனாயிருக்கக்கொள்ள, அவனவனுக்கு ஞானத் தெளிவை கொடுத்து மனதைத் திருப்

பவும், தாம் படிப்பித்துக்கொண்டுவருகிற சத்திருத்தின்படியே அவனவன் நடக்கிறதற்குப் பலத்தைக் கொடுக்கவும் வல்லவராய் இருக்கிறார். ஆனபடியினாலே சற்குருவாகிற சேசுநாதரானவர், தாம் படிப்பித்துக்கொண்டு வருகிற உபதேசத்தினாலே அவனவனுடைய மனதிலே ஞானத்தெளிவைக் கொடுத்து மனசுகளைத் திருப்பித் தாம் படிப்பித்தருளிய உபதேசத்தின்படியே நடக்கப் பண்ணுவார்.

இப்படித் தம்முடைய உபதேசத்தினாலே அவனவனுடைய மனதைத் திருப்புகிறதற்குச் சற்குருவாகிற சேசுநாதரானவர் வல்லவராய் இருக்கிறதினாலே, அப்போஸ்தலராயிருக்கிற பேர்கள் அவருடைய வார்த்தை கேட்டவுடனே, தங்களுக்குண்டான எல்லாத்தையும்விட்டு, அவர் பிறகே போனார்கள். கடைசியாய் சேசுநாதருடைய திவ்விய உபதேசத்தை நல்ல மனதோடே உட்கொண்ட பேர்களுக்கு அப்படிப்பட்ட உபதேசமானது, தீர்க்கத்தரிசிகள் எழுதிவைத்த இரகசியமான காரியங்களுடைய ஆசாரம் பொழிகிற பாடமுமாய், வேதத்தினுடைய சங்க்ஷேபமுமாய்த் தம்முடைய ஈடேற்றத்துக்கு அடுத்த, மனோ வாக்குக் கெட்டாத இரகசியங்களைத் திறந்து வெளியாக்கிறதற்கு வீக முத்திரையுமாய்ச், சருவேசுரன் பூர்வ காலத்திலே அடையாளமாக அருளிச்செய்த காரியங்களுக்குண்டான மறைவான அப்பிரகாசத்தைத் தனது பிரகாசத்தினாலே நீக்கின சூரியனுமாய்ச், சருவேசுரனுடைய அளவில்லாத பரம ஞானத்தின் கரைகாணாத சமுத்திரமுமாய், அர்ச்சியசிஷ்ட சபையினுடைய கனமான பொக்கிஷமுமாய், பரமண்டலத்தினுடைய அப்பமுமாய், நித்திய சீவியத்தைக் கொடுக்கிற நிர்மலமான தண்ணீருள்ள ஊற்றானதுமாய் இருக்கிறதல்லாமல், பிரகாசமும் அமிழ்தமும் போசனமும் ஆரோக்கியமும் சஞ்சிவியுமாய் இருக்கும்.

[17. திவ்விய கர்த்தர் செய்த புதுமைகளின் பேரில்]

அப்படிக்கொத்த தம்முடைய திவ்விய உபதேசத்தை சற்குருவான சேசுநாதரானவர் தம்முடைய திருவாக்கினாலே அருளிச்செய்து படிப்பித்ததுமல்லாமல், தமது உத்தம நடக்கையினாலேயும் படிப்பித்துக்கொண்டு வருகிற சற்குருவாகிற சேசுநாதரானவர், தம்முடைய உபதேசத்தினாலே மனுஷர் கரையேறுகிறதற்குத் தாம் காட்டின வழியல்லாமல் வேறே வழி காணமாட்டாதென்று எல்லாரும் ஒப்புக்கொள்ளத்தக்க எண்ணப்படாத புதுமைகளைப்

பண்ணினர். அப்படியே செத்துப்போன அநேகம் பேர்களை எழுப்பினரென்றும், கண்ணில்லார்க்குக் கண் கொடுத்தாரென்றும், லோகத்திலுள்ள அவுழ்தங்களினலே தீராத வியாதிகளை வார்த்தையினலேயாகிலும், தொட்டதினலேயாகிலும் மாத்திரம் ஒரு க்ஷணத்திலே போக்கினரென்றும், தூர ஸ்தலங்களிலே இருக்கிறபேர்களை வாதிக்கிற வியாதிகளையும், பசாசுகளையும் நீக்கி இரக்ஷித்தாரென்றும், அவனவன் மனதிலே இருக்கிறதை வெளிப்படுத்தினரென்றும், வருங்காரியங்களை நிச்சயித்து சுமுத்திரையாக அருளிச்செய்தாரென்றும், இது முதலான வேறே அநேக புதுமைகளைப் பண்ணினரென்றும் வேதப்பிரமாணத்தினலே அறிந்திருக்கிறோம்.

இப்படிக்கொத்த புதுமைகளுக்குள்ளே சேசுநாதரானவர் பண்ணின முந்தின புதுமையேதென்றல்: கலிலேயா இராச்சியத்திலே காணவென்கிற ஊருண்டு. அந்த ஊரிலே ஒரு கலியாணம் உண்டாயிருந்தது. அந்தக் கலியாணத்து விருந்துக்கு சீஷர்களோடே கூடச் சேசுநாதரையும் அவருடைய பரி. கன்னி. அர்ச். மாதாவையும் அழைத்துக்கொண்டு போனர்கள். அப்படிச் சேசுநாதரானவர் மற்ற விருந்தாளிகளோடேகூட இருக்கிறபோது விருந்து அசனம் பரிமாறுகிற சமயத்திலே முந்திரிகைப் பழ இரசம் இல்லாதே போச்சுது. அப்போது அவருடைய பரி. கன்னி. அர்ச். மாதாவானவள் அதைக் கண்டு அந்த விருந்து குறைவில்லாமல் எல்லாருக்கும் சந்தோஷமாய் முகியும்படிக்குத் தம்முடைய திருக்குமாரனகிற சேசுநாதர் அண்டையிலே போய் "முந்திரிகைப்பழ இரசம் இல்லை" என்று காதிலே இரகசியமாய்ச் சொன்னள். இதல்லாமல் அவள் தம்முடைய குமாரனுடைய சித்தத்தை அறிந்தபடியினலே பரிமாறிக்கொண்டுவருகிற பேர்களைப் பார்த்து "என்னுடைய குமாரனனவர் வார்த்தை கேட்டு அவர் சொன்னபடியே எல்லாத்தையும் குறைவில்லாமல் செய்யுங்கோள்" என்று சொன்னள். இந்தப்பிரகாரமாக பரி. கன்னி. அர்ச். மாதாவானவள் சொன்னதற்குப் பிற்பாடு சேசுநாதரானவர் பரிமாறிக்கொண்டுவருகிறவர்களோடே அவ்விடத்திலே இருக்கிற ஆறு பாத்திரங்களிலே தண்ணீரை நிறைய வார்க்கச்சொல்லித் திருவுளம்பற்றினர். இப்படி சேசுநாதரானவர் திருவுளம்பற்றின வார்த்தையின்படியே அவர்கள் அந்த ஆறு பாத்திரங்களிலே நிறைய வார்த்த தண்ணீரெல்லாம் உச்சிதமான முந்திரிகைப்பழத்தின் இரசமாகப்போச்சுது. இப்படிக்கொத்த

புதுமையானது சேசுநாதர் பண்ணின புதுமைகளுக்குள்ளே முந்தின புதுமையாயிருக்கிறதினாலே அதை அறிந்த பேர்களெல்லாரும் மிகவும் ஆச்சரியப்பட்டதல்லாமல், அவருக்குச் சீஷர்களாயிருக்கிறபேர்கள் அவர் பேரிலே அதிகமாய் விசுவாசமாயிருந்தார்கள். ஆனால் சேசுநாதரானவர் தம்முடைய சீஷர்களும் மற்றவர்களெல்லாரும், லோகத்தை இரக்ஷிக்கவந்த சருவேசுரனும் மனுஷனும் ஒன்றாயிருக்கிற தம்மை அறிந்து தம்முடைய பேரிலே குறையற்ற விசுவாசமாயிருக்கிறதற்கு, இந்தப் புதுமை பண்ணுகிறதற்குப் பிற்பாடு முன்சொன்ன பிரகாரமாக எண்ணப்படாத புதுமைகளைப் பண்ணினார்.

[18. எடேசா நகர் அரசன் அப்கார் என்பவன் ஆண்டவரிடம் தூதுவிட்டது.]

அ[சேசுநாதரான]வர் பண்ணின இப்படிக்கொத்த எண்ணப்படாத புதுமைகளானதுகள் அவர் சஞ்சாரம் பண்ணின யூதேயா தேசத்திலே பிறந்ததுமல்லாமல் அதுக்கப்பால் இருக்கிற சீரிய தேசமெங்கும் பிறந்தது. இது நிமித்தமாக அந்தச் சீரிய தேசத்திலுள்ள [1]யேதேசை என்கிற பட்டணத்துக்கு இராசாவாயிருக்கிற [2]அப்கார் என்கிறவன் சேசுநாதர் பண்ணிக்கொண்டு வருகிற புதுமைகளைக்கேட்டுத் தன்னை வாதிச்சுக் கொண்டுவருகிற ஒரு கனமான வியாதியானது சேசுநாதராலே நீங்கவேணுமென்று ஆசையாயிருந்து, சேசுநாதருக்கு ஒரு விண்ணப்ப ஓலையை எழுதி ஒரு ஸ்தானாதிபதி கையிலே கொடுத்து, அந்த ஸ்தானாதிபதியை அவரண்டையிலே அனுப்பினான். அந்த விண்ணப்ப ஓலையிலே எழுதியிருந்த வக்கணையாவது:

“எடேசா என்கிற பட்டணத்துக்கு இராசாவாயிருக்கிற அப்கார் என்கிறவன் செருசலேமேயின் சீர்மையிலே, மனுஷ சுபாவத்தோடே வந்துகாண்பித்துப் பிரசன்னராயிருக்கிறவர்க்கு விண்ணப்பம்: தேவரீர் பண்ணின புதுமைகளும் வியாதிக்காரருடைய வியாதிகளை அவுழ்தமும் மூலிகையும் இல்லாமல் புதுமையாகக் குணமாக்கின வர்த்தமானமும் அடியேனுக்கு வந்து சொன்னார்கள். இதல்லாமல் தேவரீர் கண் தெரியாதவர்களுக்குக் கண் கொடுக்கிறதும், சப்பாணிகளையும் முடவர்களையும் நடக்கப்பண்ணுகிறதும், குஷ்ட வியாதிக்காரருக்கு வியாதிகளை நீக்கி அவர்களை சுத்தம்பண்ணுகிறதும், பசாசுகள் பிடித்த பேர்களுக்குப் பிசாசுகளை ஓட்டுகிறதும் அநேகம் நாளாய்க் கடினமாய் வியாதிகளோடே இருக்கிறபேர்களுக்கு, வியாதிகளைப் போக்

கடித்து ஆரோக்கியத்தைக் கொடுக்கிறதும் செத்துப்போன பேர்களை எழுப்புகிறதும் பிரசித்தமாய் இருக்கிறது. இப்படித் தேவரீர் பண்ணிக்கொண்டு வருகிற புதுமைகளை அடியேன் கேட்டவுடனே ஒன்றில் தேவரீர் பரமண்டலத்திலே இருந்து இறங்கின சருவேசுரனாயிருக்கிறீர் என்றும், ஒன்றில் இப்படிக்கொத்த ஆச்சரியமான புதுமைகளைப் பண்ணுகிற சருவேசுரனுடைய பிள்ளையாய் இருக்கிறீர் என்றும் அடியேன் மனதிலே நிச்சயம் பண்ணினேன். ஆனபடியினாலே அடியேன் அண்டையிலே தேவரீர் எழுந்தருளி அடியேனை வாதிச்சுக்கொண்டு இருக்கிற இந்த வியாதியைப் போக்கடித்து ஆரோக்கியத்தைத் தந்தருள வேணுமென்று முழுமனதோடே தேவரீரை வேண்டிக்கொள்கிறேன். இதல்லாமல் யூதரானபேர்கள் தேவரீர் பேரிலே வர்மமாயிருந்து தேவரீர் நடத்திக்கொண்டுவருகிற காரியங்களைத் [3]தூறுபண்ணி தேவரீரை யாதொரு கடின [4]பாரபத்தியம் பண்ணிக் கெடுக்க வேணுமென்று திரிகிறார்கள் என்கிற வர்த்தமானத்தை அறிந்திருக்கிறேன். ஆகையினாலே அடியேன் இருக்கிற இந்தப் பட்டணம் [5]கொஞ்சப்பட்டணமாயிருந்தாலும் தேவரீர் எழுந்தருளி வருகிறதற்கு யோக்கியமான ஸ்தலமாயிருக்கிறதல்லாமல் இதில் தேவரீருக்கும் அடியேனுக்கும் வேண்டியதெல்லாம் உண்டாயிருக்கும்" என்கிற வக்கணை அந்த ஓலையில் எழுதியிருந்தது.

இப்படி அபாக்கு என்கிற ராசா சேசுநாதருக்கு எழுதி அனுப்பின விண்ணப்ப ஓலைக்குப் பிரத்தியுத்தாரமாக சேசுநாதர் எழுதி அனுப்பின நிருபத்தின் வக்கணையாவது: "அபாக்கு என்கிறவனே, நம்மைக் காணாமல் நம்மை இன்னாரென்று விசுவாசித்ததினாலே பாக்கியவனாயிருக்கிறாய். அதேதெனென்றால் நம்முடைய காரியத்திலே எழுதிவைத்ததின்படியே நம்மைக் கண்டவர்கள் நம்முடைய பேரிலே விசுவாசமாயிருந்து கரையேறுவார்கள். நாம் உன் அண்டையிலே வரவேணுமென்று நமக்கு எழுதி அனுப்பினாயே, அதுக்கு நீ ஒரு விசேஷத்தை அறியவேணும். அந்த விசேஷம் ஏதென்றால் நாம் அனுப்பப்பட்டு வந்த காரியங்கள் எல்லாம் நாம் சஞ்சாரம் பண்ணிக்கொண்டுவருகிற இந்தத் தேசத்திலே நிறைவேறி முகியும். அதுகள் நம்மாலே நிறைவேறி முகிந்ததற்குப் பிற்பாடு நம்மை அனுப்பினவர் அண்டைக்குத் திரும்பிப் போவோம். நாம் போனதற்குப் பிற்பாடு உன்னை

1. Edessa 2. Abgar 3. அவதூறு, பழி 4. விசாரணை 5. சிறிய

வாதிச்சுக்கொண்டு வருகிற அந்தக் கடினமான வியாதியைக் குணமாக்கவும் உன்னையும் உன்னண்டையிலே இருக்கிற மற்ற வர்களையும் பிழைப்பித்து ரக்ஷிக்கவும் நம்முடைய சீஷருக்குள்ளே ஒருத்தனை உன்னண்டைக்கு அனுப்புவோம்" என்கிற வக்கணையை அந்த நிருபத்திலே எழுதி அனுப்பினார்.

இப்படிச் சேசுநாதரானவர் அபாக்கு என்கிறவனுக்கு எழுதி அனுப்பினதுமல்லாமல் புதுமையாகச் சம்மனசுகளினாலே எழுதப்பட்ட தம்முடைய சுரூபத்தை[7] அவனுக்கு அனுப்பினார். அந்தச் சுரூபத்தின் நிமித்தமாக சர்வேசுரன் அனேகம் புதுமை களைப் பண்ணினதும் தவிரக் கிறிஸ்துவர்களாகிற பேர்கள் அக்கி யானிகளோடே யுத்தம் பண்ணுகிறபோது அவர்களை அனேகம் விசை மகாக் கனமான செய்ங்கொண்டார்கள். அப்படிப்பட்ட தம்முடைய சுரூபத்தை அனுப்பின சேசுநாதரானவர் அப்கார் என்கிறவனுக்கு எழுதி அனுப்பின வார்த்தைப்பாட்டைச் செலுத்த வேணுமென்று, தாம் மரணத்தை அடைந்து எழுந் திருந்து பரமண்டலங்களிலே ஏறினதுக்குப் பிற்பாடு தம்முடைய எழுபத்திரண்டு சீஷர்களுக்குள்ளே ததேயு என்கிற ஒரு சீஷனை எடேசா என்கிற பட்டணத்திலே இருக்கிற அப்கார் என்கிறவன் அண்டைக்கு அனுப்பினார். அப்படி சேசுநாதருடைய சீஷனா யிருக்கிற ததேயுவென்கிறவர் எடேசா என்கிற பட்டணத்திலே போய், அப்கார் என்கிறவனுடைய வியாதியையும், அந்தப் பட்டணத்திலேயிருக்கிற மற்ற வியாதிக்காரருடைய வியாதிகளை யும் குணம் பண்ணினதுமல்லாமல், அவ்விடத்திலே வாசமாயிருக் கிற பேர்களுக்கு எல்லாம் உபதேசஞ்சொல்லி, அந்த உபதேசத் தின் நிமித்தமாக சேசுநாதர்பேரிலே அவர்கள் எல்லாரும் விசு வாசமாய் இருந்து, கிறிஸ்துவர்களாகப் போகப்பண்ணினார். இந்த அப்கார் என்கிற இராசாவுக்கடுத்த வர்த்தமானத்தை, சேசு நாதர் பண்ணிக்கொண்டு வருகிற எண்ணப்படாத புதுமைகள் சீரிய தேசமுதலாய்ப் பிறந்ததென்று சொன்னதினாலே, எழுதினோ மொழிய மற்றப்படியல்ல.

[19. யூதர் அநியாயமாய் ஆண்டவரைப் பகைத்த விதம்]

ஆனால் அப்படியே சேசுநாதர் பண்ணிக்கொண்டு வருகிற எண்ணப்படாத புதுமைகளினாலே அவருடைய கீர்த்தியானது எங்கும் பரம்பிப்போய், அதுநிமித்தமாக அக்கியானியாயிருந்த

6. எழுதும் முறை 7. படம்

அப்கார் என்கிற இராசாவானவன் அவரை லோகத்தை இரட்சிக்கவந்த மெய்யான சருவேசுரன் என்று அறிந்து விசுவாசமாயிருந்தாலும் அவர் சஞ்சாரம் பண்ணிக்கொண்டு வருகிற யூதேயா இராச்சியத்திலுள்ள பிராமண[1] சாஸ்திரிகளும், அனேகந் துரைகளும், குருக்களும் அவர் பேரிலே மிகவும் வர்மமாயிருப்பார்கள். அதேதென்றால், அப்படிக்கொத்தவர்கள் மகாப் பாவிகளாயிருந்து பண்ணிக்கொண்டுவருகிற பாவங்களுக்கு சேசுநாதர் அருளிச்செய்து கொண்டு வருகிற உபதேசமானது முழு விரோதமாயிருந்தது. இதல்லாமல் எல்லாரும் சேசுநாதருடைய அமிர்தமான வார்த்தையை முழு விசுவாசத்தோடே கேட்டு அவர் பண்ணிக்கொண்டு வருகிற ஆச்சரியமான புதுமைகளைப் பார்த்து அவரை மற்றக்குருக்களைக் காட்டிலும் கனமாக எண்ணிக்கொண்டு, அவரைவிட்டுப் பிரியாமல் 'செய செய' என்று போற்றிப் பின்சென்று கொண்டு வருவார்கள். இதெல்லாத்தையும் முன்சொல்லப்பட்ட பாவிகளாயிருக்கிற பிராமணர் முதலான பேர்கள் கண்டு அதினிமித்தமாகத் தங்களுக்கு வரத்தக்க வெகுமான முதலான பிரயோசனங்கள் இல்லாதேபோம் என்று பயந்து, மற்ற சனங்கள் எல்லாரும் சேசுநாதர்பேரிலே விசுவாசமாயிருக்கிறதைப் பொறுக்கமாட்டாமல் அவர்பேரிலே பரிபூரண வர்மமும், காய்மகாரமுமாய் இருக்கிறதுந்தவிர, அப்படிக்கொத்த சனங்கள் சேசுநாதர்பேரிலே உட்கொண்டிருக்கிற விசுவாசத்தைவிட்டுத் தாங்கள் சொன்னபடிபோலக் கேட்டு நடக்கிறதற்குச் சகல புண்ணியங்களுக்கு மாதிரிகையாயிருக்கிற சேசுநாதர்பேரிலே அநேகம் தூஷணங்களைச் சொல்லிக்கொண்டு வருவார்கள்.

அதெப்படியென்றால், சேசுநாதரைப் பாவி என்றும், பாவிகள் பேரிலே பக்ஷமாயிருக்கிறாரென்றும், திருநாட்களை ஆசரியாமல் வேதத்தை மீறி நடக்கிறவரென்றுஞ் சரீரசம்மந்தமாயிருக்கிற சுகத்தைத்தேடிக்கொண்டு வருகிறவரென்றும், அவருடைய சீஷர்கள் ஒருசந்தி உபவாசமாயிருக்கவில்லையென்றும், சொன்னதும்போதாமல், அவரை அருவருக்கப்படத்தக்க சமாரித்தானென்றும் பதிதனென்றுஞ் சபிக்கப்பட்டவரென்றும் பசாசுகளைக் கொண்டிருக்கிறானென்றும் சொல்லிக்கொண்டு வருவார்கள்.

1. பிராமணர் என்ற சொல்லுக்கு 'அறிஞர்' என்று பொருள் கொண்டு, அந்தந்த நாட்டிலுள்ள அறிஞரைப் பிராமணர் என்று அழைப்பது தத்துவபோதகர் வழக்கம்.

[20. இரட்சகர்பேரில் குற்றம் சாட்ட யூதர்கள் கொண்ட உபாயங்கள்]

இதல்லாமல் சேசுநாதருடைய உபதேசமானது, சருவேசுரன் அருளிச் செய்த வேதத்துக்கும் பூர்வ காலங்களிலே விளங்கின மோசேயென்கிற தீர்க்கதரிசியும் சாஸ்திரிகளும் சொன்ன உபதேசத்துக்கும், விரோதமாய் இருக்கிறதென்று தூஷணித்துக்கொண்டு வருவார்கள். அப்படியே சேசுநாதர் பண்ணிக்கொண்டு வருகிற கனமான புதுமைகள் எங்கும் பிரசித்தமாய் இருக்கக்கொள்ள, அப்படிக்கொத்த புதுமைகளைத் தங்களாலே மறைக்கக் கூடாதென்று கண்டிருந்தாலும், அதுகளை எந்தடவாகிலும் தூஷணஞ்சொல்ல வேணுமென்கிறதற்காக ஒன்றில் சேசுநாதரைப் பார்த்து "இந்தப் புதுமைகளைப் பார்க்கப் பரமண்டலத்திலே வேறே கனமான புதுமைகளை எங்கள் முன்னே பண்ணிக்காட்டு" என்று சொல்லுவார்கள். ஒன்றில் 'சேசுநாதரானவர் பசாசுக்கு அடிமைப்பட்டு பெல்சுபவென்கிற பிரதான பிசாசின் பலத்தினலே அப்படிக்கொத்த புதுமைகளைப் பண்ணிக்கொண்டு வருகிறார்' என்று சொல்லுவார்கள்.

இதன்றியே யூதசனங்களை ரோமாபுரி இராயனுக்குப் பகுதி கொடுக்க வேண்டாமென்று சேசுநாதர் கலகம் பண்ணிக் கொண்டு வருகிறார் என்று சொல்லுகிறதற்கு அவருடைய வார்த்தையிலே குற்றங் கண்டுபிடிக்க வேணுமென்கிறதற்காக அவரைப் பார்த்து, 'ரோமாபுரி இராயனுக்குப் பகுதி கொடுக்கிறது நீதிக்கொத்திருக்குமோ ஒத்திராதோ?' என்று கட்டாயமாய்க் கேட்டார்கள். பின்னையும் வேறே ஒருவிசை சேசுநாதர் பிரசங்கம் பண்ணுகிற தறுவாயிலே ஏரோதை யென்கிற இராசாவுடைய சேவகரைக்கூட்டிக்கொண்டு வந்து அவர் பண்ணுகிற பிரசங்கத்திலே யாதொரு தப்பு வார்த்தை சொன்னல் அதினிமித்தமாக அவரைப்பிடிக்க வேணுமென்று உத்தியோகமாயிருந்தார்கள். பின்னையும் வேறே ஒருவிசை கனமான பாவத்திலே அகப்பட்ட சமுசாரியாயிருக்கிற ஒரு பெண்பிள்ளையைப் பிடித்துக்கொண்டுவந்து சேசுநாதருடைய சன்னிதியிலே நிறுத்தி அவளுடைய காரியத்தை நடத்தத்தக்க மேரையேதென்று அவரைக் கபடமாகக் கேட்டார்கள். அதேதென்றல் அவளுடைய குற்றத்துக்குத் தக்கது வேதத்திலே கற்பித்திருக்கிறப்போலே 'அவளைக் கல்லாலே எறியுங்கள்' என்று சொன்னல் அவனை மகா நிஷ்டூரமுள்ளவனென்று சொல்லுவோம், அல்லா

மல் ‘ அவனை விட்டுவிடுங்கள் ’ என்று சொன்னால் அவனை வேதத்துக்கு விரோதக்காரன் என்று சொல்லுவோமென்று உத்தியோகமாயிருந்தார்கள்.

இந்தப் பிரகாரமாக அந்தப் பாவிகளான பிராமணர், குருக்கள் முதலான பேர்கள், மற்றச் சனங்கள் எல்லாரும் சேசுநாதருடைய அமிர்தமான வார்த்தைகளையும் உபதேசங்களையும் கேளாமல் அவரைவிட்டுப் பிரிந்து தாங்கள் படிப்பித்துக்கொண்டு வருகிற தப்பறை முதலான பாவத்துக்கடுத்த விசேஷங்களைக் கேட்டுக்கொண்டு நடக்கத்தக்கதாக, மகா ஆங்காரத்தோடே சேசுநாதரைப் பிடித்துத் தூஷணித்துக்கொண்டு வருவார்கள். ஆனால் அவர்கள், தங்களுடைய தூஷண உபாயதந்திரங்களெல்லாம் வியர்த்தமாய்ப் போச்சுதென்றும் எல்லாரும் சேசுநாதருடைய பேரிலே அதிகமதிகமாய் விசுவாசமாய் இருக்கிறார்கள் என்றும் கண்டு, அவரைக் கொன்றுபோட வேணுமென்று துணிந்தார்கள். இந்தக் கனமான பாவத்துக்கு அவர்கள் முழுதுந் துணிந்திருக்கிறதற்கு சேசுநாதரானவர் செத்துப்போன லாசர் என்கிறவரை எழுப்பின கனமும் பராக்கிரமுமான புதுமையானது காரணமாயிருந்தது.

[21. மரித்த லாசரை உயிர்ப்பித்தல்]

அதெப்படியென்றால், பெத்தானிய என்கிற ஊரிலே மார்த்தாள், மரியாள் என்கிற தங்கை தமக்கை இரண்டுபேர் வாசமாயிருந்தார்கள். இவர்களுக்குச் சகோதரமான லாசர் என்கிறவரும் கூட இருந்தார். இவர்கள் மூவரும் குறிக்கப்பட்ட பேர்களுமாய் வெகுமானத்துக்குப் பாத்திரமுமாய் இருக்கக்கொள்ள, அந்தத் தேசத்திலே அவர்களைக் கனமாக எண்ணிக்கொண்டு வருவார்கள். இப்படிக்கொத்தவர்கள், சேசுநாதர்பேரிலே மிகுந்த விசுவாசமும் பத்தியுமாயிருந்து அவரை லோகத்தை இரட்சிக்கவந்த சருவேசுரன் என்று விசுவாசித்துக்கொண்டு வருவார்கள்.

இந்த மூன்று மகாத்துமாக்களுக்குள்ளே லாசர் என்கிறவர் கனமான வியாதியாய் விழுந்தார். அவர் வியாதியாய் விழுந்த வர்த்தமானத்தை வேறே ஊரிலே இருக்கிற சேசுநாதருக்கு விண்ணப்பம் செய்யச்சொல்லித் தங்கைதமக்கை இருவரும் ஆள் அனுப்பினார்கள். அவர்கள் அனுப்பின ஆள் விண்ணப்பம் செய்த விசேஷத்தைச் சேசுநாதர் கேட்டு அவ்விடத்திலே இரண்டு நாள் தாமசமாயிருந்தார். அதுக்குப் பிற்பாடு தம்

முடைய சீஷர்களைப் பார்த்து "நம்முடைய சிநேகிதனயிருக்கிற லாசர் என்கிறவன் நித்திரை போனன்" என்று திருவுளம்பற்றி னதற்கு சீஷர்களான பேர்கள், 'லாசர் என்கிறவன் நித்திரை போகிறது வியாதி போனதற்கு அடையாளமா யிருக்கிறது' என்று சொன்னர்கள். அப்போது சேசுநாதரானவர் லாசர் என்கிறவனுடைய மரணத்தை வெளிப்படுத்தி, "நீங்கள், என்னைப் பிதாவாகிய சருவேசுரன் அனுப்பினர் என்று, விசுவாசமாயிருக்கிறதற்கு அவனை எழுப்பப்போவோம்" என்று திருவுளம்பற்றி லாசர் என்கிறவன் மரணத்தை அடைந்த ஊரிலே சீஷர்களோடே எழுந்தருளினர்.

இப்படி சேசுநாதரானவர் அந்த ஊரிலே எழுந்தருளுகிற போது, லாசர் என்கிறவர் மரணத்தை அடைந்து நாலு நாளாச்சுது. மார்த்தாள் என்கிறவள் சேசுநாதரானவர் எழுந்தருளி வருகிற வர்த்தமானத்தைக் கேட்டவுடனே இன்னும் ஊருக்குப் புறத்தியிலே வருகிறவருக்கு எதிராகப்போய், அழுகையோடே கூட சேசுநாதருடைய பாதத்திலே விழுந்து "சுவாமி தேவரீர் இங்கே இருந்தீரானல் எனக்குச் சகோதரமாயிருக்கிற லாசர் என்கிறவன் சாகாமல் இருப்பான்" என்று விண்ணப்பஞ்செய் தாள். அப்போது சேசுநாதரானவர் அவளைப் பார்த்து "உனக்குச் சகோதரமானவன் எழுந்திருப்பான்" என்று திருவுளம் பற்றினதற்கு மார்த்தாள் என்கிறவள் "லோகம் முகிந்தவுடனே எழுந்திருப்பான் என்று அறியேனே?" என்று சொன்னதற்கு "என் பேரிலே விசுவாசமாயிருக்கிறவன் மரணத்தை அடைய மாட்டான்" என்கிற வார்த்தை முதலான வேறே சில வார்த்தைகளைச் சேசுநாதர் திருவுளம்பற்றினர்.

இந்தப்பிரகாரமாக சேசுநாதரானவர் திருவுளம்பற்றினதை மார்த்தாள் என்கிறவள் கேட்டு அவரைவிட்டுக் கூடப்பிறந்தவள் அண்டையிலே போய்க் குரு வந்தாரென்றும் அவர் இன்ன இடத்திலே இருக்கிறரென்றும் காதிலே சொன்னள். இந்த விசேஷத்தை மரியவென்கிறவள் கேட்டவுடனே எழுந்திருந்து சேசுநாதர் எழுந்தருளியிருக்கிற இடத்திலே போனள். அவள் எழுந்திருந்து போறபோது செருசலேம் என்கிற பட்டணத்திலேயிருந்து இழவுகாண வந்த அனேகம்பேர்கள் அவள் லாசரு என்கிறவருடைய சரீரத்தை வைத்திருக்கிற கல்லறையண்டையிலே போய் அழப்போருளென்று விசாரித்துத் தாங்களும் அவளோடேகூட அழவேணுமென்று அவளைப் பின்சென்றுகொண்டு போனர்கள்.

அவள் அந்தக் கல்லறையிலே போகாமல் ஊருக்குப் புறத்தியிலே சேசுநாதர் எழுந்தருளியிருக்கிற ஸ்தலத்திலே போய் அவரைக் கண்டவுடனே அழுகையோடே அவருடைய பாதத்திலே விழுந்து, மார்த்தாள் என்கிறவள் சொன்னாப்போலே "சுவாமி தேவரீர் இங்கு இருந்தீரானால் எனக்குச் சகோதரமான லாசர் என்கிறவன் சாகமாட்டான்" என்று விண்ணப்பஞ்செய்தாள். சேசுநாதரோவென்றால் அவளும் மற்றவர்களும் கூட அழுகிறதைக்கண்டு மனதிரங்கிக்கூட அழுதார். இப்படி அழுத சேசுநாதருக்கடுத்த ஒரு விசேஷத்தை அறியக்கடவோம். அதேதென்றால், சருவேசுரனும் மனுஷனும் ஒன்றாயிருக்கிற சேசுநாதரானவர் இந்த லோகத்திலே சஞ்சாரம பண்ணின காலத்திலே ஒருக்காலானாலுஞ் சிரித்தார் என்று அறியோம்; அநேகம் விசை அழுதாரென்று அறிந்திருக்கிறோமொழிய மற்றப்படியல்ல. அப்படியே முன்சொல்லப்பட்ட பிரகாரமாக சேசுநாதரானவர் அழுகிறதை அவ்விடத்திலேயிருக்கிற பேர்கள் கண்டு, 'லாசர் என்கிறவன்பேரிலே இத்தனே தயையாயிருக்கிறவர் சிலநாளைக்கு முந்திப் பிறவிக் குருடனுக்குக் கண் கொடுத்தாப்போலே லாசர் என்கிறவன் சாகாதபடிக்குப் பண்ணமாட்டாதே போனாரே?' என்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

சேசுநாதரோவென்றால், 'லாசர் என்கிறவனை அடக்கின இடம் எவ்விடத்திலே?' என்று கேட்டருளினதற்கு, 'வந்து பாரும்' என்று சொல்லி லாசர் என்கிறவனை அடக்கின கல்லறை வாசல் அண்டையிலே சேசுநாதரைக் கூட்டிக்கொண்டு போனார்கள். போனவுடனே அவர்களைப் பார்த்து இந்தக் கல்லறையை மூடியிருக்கிற கல்லை அப்பாலே தள்ளுங்கள் என்று திருவுளம் பற்றினார். அதுக்கு மார்த்தாள் என்கிறவள் "சுவாமி லாசர் என்கிறவனைக் கல்லறையிலே வைத்து நாலு நாளாச்சுதே, இப்போது அவனுடைய சரீரம் அழிந்துபோய் நாற்றமெடுக்குமொழிய மற்றப்படியல்ல" [என்றாள்]. இந்த வார்த்தை சொன்ன மார்த்தா வென்கிறவளை சேசுநாதர் பார்த்து "நீ விசுவாசமாய் இருந்தாயானால் சருவேசுரனுடைய மகிமைகளைக் காண்பாய் என்று உனக்கு நான் சொல்லவில்லையோ?" என்று திருவுளம் பற்றினதை அவர்கள் கேட்டு அந்தக் கல்லறையை மூடியிருக்கிற கல்லை அப்பாலே தள்ளினார்கள்.

அப்போது சேசுநாதரானவர் பரமண்டலத்தைப் பார்த்துப் பிதாவாகிய சருவேசுரனை வேண்டிக்கொண்டதற்குப் பிற்பாடு

"லாசர் என்கிறவனே, புறத்தியிலே வா" என்று உரக்கத் திருவுளம் பற்றினார். அந்த வார்த்தை திருவுளம்பற்றினவுடனே லாசர் என்கிறவர், தம்மைக் கல்லறையிலே வைக்கும்போது காலும் கையுங் கட்டித் துப்பட்டியினாலே மூடியிருக்கிற வேஷத்தோடே புறத்தியிலே வந்த லாசர், என்கிறவனைக் கட்டியிருக்கிற கட்டுக்களை சேசுநாதர் அவிழுங்கோள் என்று அருளிச்செய்தார். அப்படியே லாசர் என்கிறவனைக் கட்டியிருக்கிற கட்டுகளை அவிழ்த்ததற்குப் பிற்பாடு, லாசர் என்கிறவன் எழுந்திருந்ததை எல்லாருங் கண்டு மகா ஆச்சரியப்பட்டார்கள். இப்படிப்பட்ட ஆச்சரியமான புதுமையானது இராசதானியப்பட்டணமாகிற செருசலேம் என்கிற பட்டணத்துக்குச் சமீபமாயிருக்கிற பெத்தானியென்கிற ஊரிலே சம்பவித்ததினாலேயும், இழவுகாணத்தக்கதாக செருசலேம் என்கிற பட்டணத்திலேயிருந்துவந்த யூதர்களுக்குள்ளே அனேகம் பேர்கள் இந்தப் புதுமையைக் கண்டு சேசுநாதர்பேரிலே விசுவாசமாய் இருந்ததினாலேயும், எங்கும் பிரசித்தமுண்டாச்சுது.

[22. இரட்சகரைக் கொல்ல யூதர் செய்த ஆலோசனை]

இது [லாசர் என்பவர் உயிர்த்த விசேஷமானது] நிமித்தமாக செருசலேம் என்கிற பட்டணத்திலேயிருக்கிற பிராமணர், சாஸ்திரிகள், குருக்கள் முதலான பிரபுக்கள் கூட்டங்கூடிக்கொண்டு ஆலோசனை பண்ணுகிறபோது, அவர்களுக்குள்ளே பிரதான குருவாயிருக்கிற கைப்பாஸ் என்கிறவன், 'எல்லாருங் கெட்டுப் போகாதபடிக்குச் சேசுநாதரொருத்தரைக் கொன்று போடவேணும்,' என்று சொன்னதற்கு, மற்றவர்களெல்லாரும் சம்மதித்து, அன்றுமுதலே சேசுநாதரைக் கொன்றுபோடத்தக்கதாகத் துணிந்தார்கள். இப்படித் துணிந்த பிராமணர் சாஸ்திரிகள் முதலான பாவிகள் தங்களுக்கு பிரதான குருவாயிருக்கிற கைப்பாசென்கிறவன் வாயினாலே இஸ்பிரீத்து சாந்துவாகிற சருவேசுரன் சொல்லிவித்த இந்த வார்த்தைகளுக்குண்டான அர்த்தத்தைச் சுத்தமாய்க் கண்டுபிடியாதே போனார்கள். அதேதென்றால், சேசுநாதரானவர் மனுஷன் செய்த பாவத்துக்காக உத்தரிக்க வேணுமென்று பாடுபட்டு மரணத்தை அடைந்ததினாலே அவர்பேரிலே விசுவாசமுள்ள பேர்கள் சருவேசுரனுக்கு உகந்த பிள்ளைகளாய்ப்போய் அவர்களை மோட்சக்கரையேற்றுகிறதற்கு இடமுண்டாச்சுது. ஆனபடியினாலே மனுஷரெல்லாரும் கெட்டுப்போகாதபடிக்குச் சேசுநாதர் ஒருத்தரே பாடுபட்டு மரணத்தை அடையக் கணக்காயிருந்தது.

இதிப்படியிருக்கையிலே, தாம் பாடுபட்டு மரணத்தை அடைந்ததினுலே லோகத்தை இரட்சிக்கிறதற்கு ஸ்தாபித்த சருவேசுரனும் மனுஷனும் ஒன்ருயிருக்கிற சேசுநாதரானவருக்குச் சித்தமில்லாதிருந்தால் அவரைக் கொன்றுபோடவும், அவர் மரணத்தை அடையக் குறித்த நாள் ஒரு க்ஷணமாஞலுங் குறைக்கவும், லோகமும் உலகத்திலுள்ள சகலமான பாவிகளுடைய உபாய தந்திர பிலமும் கூடிஞலும் வல்லதாயிருக்கமாட்டாது. ஆனல் சகலமான காலங்களுக்கு கர்த்தராய் இருக்கிற சேசுநாதரானவர் மனுஷன் செய்த பாவத்துக்காகத் தாம் பாடுபடுகிறதற்குக் குறித்திருக்கிற காலம் கிட்டித்தென்றுகண்டு தம்மை இத்தனை கனமான வர்மத்திஞலே நெருக்கம் பண்ணிக்கொண்டு வருகிற அந்தப் பாவிகளான யூதர்கள் தங்கள் சுவாதந்திரிய மனசின்படி நினைத்த பாவத்தை விலக்காமல் அதின் நிமித்தமாக பாடுபட்டு நம்முடைய ஈடேற்றத்தின் கனமான காரியத்தைத் தமக்குப் பிதாவாகிற சருவேசுரன் கட்டளையிட்டதின்படியே முகிக்கிறதற்கு மிகுந்த ஆசையுள்ள சேசுநாதரானவர், மெய்யான நீதிசூரியனுமாய் லோகத்தினுடைய பிரகாசமுமாய் அந்தத் தேசத்திலேயெங்கும், பட்டணங்கள் சுற்றுக் கிராமங்களிலே சுற்றித் திரிந்து, தம்முடைய திவ்விய உபதேசத்தின் கிரணங்களைப் பரம்பப்பண்ணி, மலைகளிலேயும் கணவாய்களிலேயும் கெட்டுப்போன ஆட்டைத் தேடிக்கொண்டு வருகிற நல்ல இடையன்போலே, பாவத்திஞலே கெட்டுப்போன மனுஷனைத் தேடித் தாரித்திரங் குளிர், வெயில், இளைப்பு, கலகங்கள் விரோதங்கள், தூஷணங்கள் இது முதலான எண்ணப்படாத துரிதங்களை அனுபவித்துப் பகலெல்லாம் தர்ம வழியைப் படிப்பித்துப், இராத்திரி முழுதும் செபத்தியானம் பண்ணி, எப்போதுந் நமக்கு மெய்யான தகப்பனும் இரட்சிக்கிறவருமாய் இருந்து, நம்முடைய ஈடேற்றத்துக்கடுத்த காரியங்களை நடத்திக்கொண்டு, மூன்று வருஷம் சிலவழித்துக்குப் பிற்பாடு தாந்தாமே தம்முடைய சித்தத்தின்படியே பாவிகளாயிருக்கிற யூதர் கையிலே தம்மை ஒப்புக்கொடுத்தார். இதுநிமித்தமாகத் தாம் பாடுபடுகிறதற்குக் குறித்திருக்கிற ஸ்தலமாகிற செருசலேம் என்கிற பட்டணத்திலெழுந்தருளி, அந்தப் பட்டணமானது இராசதானியப் பட்டணமாயிருக்கிறதிஞலேயும், அவ்விடத்திலே பாஸ்குவைத் திருநாளைக் கொண்டாடத் தக்கதாகச் சனந்திரளாய் வந்திருக்கிறதிஞலேயும், மிகுந்த அவமானத்தோடே மரணத்தை அடையத் தக்கதாகச் சித்தமானர்.

[23. எருசலேமில் பிரவேசித்த ஒப்டலோகம்]

ஆனல் சேசுநாதரானவர் தம்முடைய பரம தாழ்ச்சியையும், மனுஷன் செய்த பாவத்துக்காகப் பிதாவாகிய சருவேசுரனுக்குத் தம்மைப் பலியாகக் கொடுக்கப்போற நாள் கிட்டித்தென்று கண்டதினலே அடைந்த சந்தோஷத்தையுங் காட்ட வேணுமென்கிறதற்காக, ஒரு நீச வாகனத்தின் மேலேறிக்கொண்டு செருசலேம் என்கிற பட்டணத்திலே பிரவேசம் பண்ண வேணுமென்று போறபோது, அந்தப் பட்டணத்தைப் பார்த்து "இனி உனக்கு வருகிற ஆக்கினே இன்னதென்று அழுகையோடு திருவுளம் பற்றினர். இப்படியே சேசுநாதரானவர் திருவுளம்பற்றினதற்குப் பிற்பாடு, அந்தப் பட்டணத்திலேயிருந்து சனங்கள் திரளாய் அவர்க்கெதிராக வந்து, சத்துருக்களேச் செயித்து ஒட்டலோகனைகப் போறவனே வெகுமானம்பண்ணுகிற பாவனேயாக அவரை வெகுமானம் பண்ணுகிறதற்குச் சில பேர்கள் ஈச்சங் குருத்துக்களேக் கையிலே பிடிக்கச், சில பேர்கள் மரங்களுடைய கொப்புகளே வெட்டி சேசுநாதர் போற வழியிலே பரப்பிக்கொண்டு போகச் சிலபேர்கள் தங்கள் தங்கள் வஸ்திரங்களே விரித்துக்கொண்டு போக, இந்தப்பிரகாரமாக எல்லாரும் கூடச் சேசுநாதரைச் 'செய செய போற்றி' என்றும், 'தாவீதென்கிற இராசாவுடைய கோத்திரத்திலே எழுந்தருளிவந்த கிறிஸ்து' என்றும், 'சருவேசுரனுலே அனுப்பப்பட்ட இராசா' என்றும், 'சுகத்திலே ஒட்டலோகனுய் வந்தருள்வாயாக' என்றும் இது முதலான மிகுந்த சந்தோஷமுள்ள சத்தங்களோடே இராசாதிராசனுயிருக்கிற சேசுநாதரை மகா ஆரபாரத்தோடே கூட்டிக்கொண்டு போனர்கள். இந்தப்பிரகாரமாக சேசுநாதரானவர் தாம் போகிற ஆரப்பாரத்தோடே அந்தப் பட்டணத்திலே பிரவேசம் பண்ணினவுடனே, அவ்விடத்திலேயிருக்கிற தேவாலயத்திலே போன சேசுநாதரானவர் லோகத்திலே மனுஷராலே எண்ணப்படுகிற வெகுமானங்கள் நில்லாதென்றும் அதுகளே எண்ணவேண்டாமென்றுங் காட்ட வேணுமென்கிறதற்காக அதிலே சாயங்காலம் மட்டும் தாமசமாயிருந்தாலும் அவரை ஆரபாரத்தோடே கூட்டிக்கொண்டபோன சனங்களுக்குள் ஒருத்தனுனலும் அசனத்துக்கு வாருமென்று அழைக்கவில்லே. இதினிமித்தமாக சேசுநாதரானவர் அன்றைக்குப் பட்டினியாயிருந்து பெத்தானியாவென்கிற ஊரிலே வாசமாயிருக்கிற தங்கை தமக்கையாகிற மார்த்தாள் மரியாள் என்கிறவர்களுடைய வீட்டுக்குப் போனர்.

[24. பாஸ்குத்திருநாள் ஆசரிக்கப் போசன அமரிக்கை செய்ய சீஷர்களுக்குக் கட்டளையிட்டதின்பேரில்]

அதுக்குப் பிறபாடு சேசுநாதரானவர் பாஸ்குவைத் திருநாள் கொண்டாடத்தக்கதாக நாள் கிட்டித்தென்று கண்டு தம்முடைய பிரதான சீஷர்களைப் பார்த்து "இரண்டு நாளைக்குப் பிறபாடு பாஸ்குவைத் திருநாளானது ஆசரிக்கத்தக்கதா யிருக்கிறதென்று அறிவீர்களே. அதிலே நான் சிலுவையிலே அறையப்படத்தக்க தாக ஒப்புக்கொடுக்கப்படுவேன்" என்று திருவுளம்பற்றினர்.

இப்படித் திருவுளம்பற்றின சேசுநாதரானர் பாடுபட்டு மரணத்தை அடைவார் என்கிற விசேஷமானது சீஷர்களுக்கு மறைவாயிருக்கிறதினலே அவர் திருவுளம்பற்றின வசனமே தென்று விசாரியாமல் அவரைப் பார்த்து "பாஸ்குவைத் திருநாளை ஆசரிக்கத்தக்கதாக எவ்விடத்திலே அமரிக்கை பண்ணு வோம்?" என்று கேட்டார்கள். அதுக்குச் சேசுநாதரானவர் பிரத்தியுத்தாரஞ் சொல்லவேணுமென்று அர்ச். இராயப்பரை யும் அர்ச். அருளப்பரையும் அழைத்து "நீங்கள் இருவரும் பட்டணததுக்குப் போங்கள். அவ்விடத்திலே கோட்டை வாசல் கிட்டே போகிறபோது, தண்ணீர்க் குடம் சுமந்துபோகிற ஒரு வனைக் காண்பீர்கள். அவனைப் பின்தொடர்ந்து கொண்டுபோய் அவன் நுழைகிற வீட்டிலே நீங்களும்கூடப் புகுந்து அந்த வீட் டக்குடையவனோடே, 'குருவானவர், நம்முடைய காலம் கிட்டினபோலே யாச்சுது, உன்னண்டையிலே வந்து நம் முடைய சீஷர்களோடேகூடவந்து பாஸ்குவைத் திருநாளை ஆசரிக் கிறோம்' என்று சொல்லச் சொன்னர்" என்று சொல்லுங்கள் என்றும் "அவன் உங்களுக்குச் சோடித்திருக்கிற ஒரு பெரிய சாலையைக் காட்டுவான், அதில் நீங்கள் திருநாள் ஆசரிக்கத் தக்க தாக ஆயத்தத்தைப் பண்ணுங்கள்" என்றும் திருவுளம்பற்றினர்.

இப்படிச் சேசுநாதரானவர் திருவுளம்பற்றின தின்படியே அர்ச். இராயப்பரும் அர்ச் அருளப்பரும் பட்டணத்துக்குப் போய் அந்த வீட்டுக்கு உடையவனைக் கண்டு அவனோடே பேசிக்கொண்டு அவன் காட்டின சோடித்திருக்கிற பெரிய சாலை யிலே திருநாள் ஆசரிக்கிறதற்கு ஆன ஆயித்தத்தைப் பண்ணின தற்குப் பிறபாடு, அன்று வியாழக்கிழமை அஸ்தமான காலத்திலே சேசுநாதர் தம்முடைய சீஷர்களோடேகூட ஆயித்தம் பண்ணி யிருக்கிற அந்தப் பெரிய சாலையிலே எழுந்தருளி லோகத்தி னுடைய பாவங்களைப் போக்கிற மெய்யான செம்மறியாட்டுக்

குட்டியாகிற தமக்கு அடையாளமாயிருக்கிற பாஸ்குத் திரு நாளுக்கடுத்த பலியாகிற செம்மறியாட்டுக்குட்டியைத் தம் முடைய சீஷர்களோடேகூடப் பக்ஷித்தார்.

[25. சீஷர்களின் கால் கழுவுதலின் பேரில்]

இந்தப் பிரகாரமாக சேசுநாதரானவர் தம்முடைய சீஷர் களோடேகூடப் பக்ஷித்தப் பிற்பாடு, எழுந்திருந்து மேலே தொட்டுக்கொண்டிருக்கிற சட்டையைக் கழற்றி அப்பாலே வைத்து உள் சட்டையோடே அரையிலே ஒரு சீலையைக் கட்டிக் கொண்டு ஒரு பெரிய கோர்கலத்திலே தண்ணீர் வார்த்து ஒழுங் காக வைத்திருக்கிற பன்னிரண்டு சீஷர்களைக் கால் கழுவி, கழு வின கால்களைத் தாம் அரையிலே கட்டிக்கொண்டிருக்கிற சீலை யினாலே துடைத்துக்கொண்டு வந்தார். இப்படி சேசுநாதரான வர், கால் கழுவப்பட்ட பன்னிரண்டு சீஷர்களுக்குள்ளே தம்மை முப்பது வெள்ளிக் காசுக்கு வித்துப்போட்டு அன்று இராத்திரி துரோகம் பண்ணிக் காட்டிக்கொடுக்கப் போகிற யூதாசுடைய கால்களைக் கழுவினதினாலே, தம்முடைய பரம தாழ்ச்சி பொறுமையினுடைய மகிமையை விளங்கப்பண்ணினார். அப் படியே சேசுநாதரானவர் தம்முடைய சீஷர்களுக்குக் கால் கழுவினதற்குப் பிற்பாடு தாம் செய்துகொண்டு வந்த இப்படிக் கொத்த காரியத்தை அவர்களும் தங்களுக்குள்ளே அன்னிய வொன்னியமாய்ச் செய்துகொண்டு வரவேணும் என்று அவர் களுக்குப் புத்தி திருவுளம் பற்றினார்.

[26. சற்பிரசாதம் உண்டுபண்ணினதின் பேரில்]

அதுக்குப் பிற்பாடு நம்முடையபேரிலே மிகுந்த சிநேக முள்ள சருவேசுரனும் மனுஷனும் ஒன்றாயிருக்கிற சேசுநாதரான வர், நமக்காகப் பாடுபட்டு மரணத்தையடைந்து, மூன்றாம் நாள் எழுந்திருந்து மோக்ஷ ராச்சியத்துக்கு எழுந்தருள வேண்டியிருக் கிறதினாலே, தாம் மனுஷவதாரம்பண்ணி, மனுஷசுபாவத் தோடே எப்போதும் நம்மோடேகூட இருக்கவும், தாம் நமக் காகப் பாடுபட்டதற்கு எப்போதும் நமக்கு நினைவு உண்டாயிருக் கவும், மனோவாக்குக்கெட்டாத இரகசியமாகிற நற்கருணையென் கிற புதுமையுள்ள உபாயத்தைப் பண்ணினார். அதெப்படியென் றால், சேசுநாதரானவர் கோதுமை அப்பத்தைத் தம்முடைய திருக் கையிலே வாங்கி " இது என்னுடைய சரீரமாயிருக்கிறது, இது உங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்படும், இத்தைப் பக்ஷியுங்

கள்" என்று அருளிச்செய்து தம்முடைய வார்த்தைப் பலத்தி னாலே கோதுமை அப்பமெனகிறபொருளை அல்லவென்று, அந்த அப்பத்தினுடைய குணங்களுக்குள்ளே தமது சரீரத்தை யிருக் கப்பண்ணி அதைத் தம்முடைய சீஷர்களுக்குப் பக்ஷணமாகக் கொடுத்தருளினார். இந்தப் பிரகாரமாக முந்திரிகைப்பழ இரசம் வார்த்திருக்கிற பாத்திரத்தைத் தம்முடைய திருக்கையிலே வாங்கி "இது என்னுடைய இரத்தமாய் இருக்கிறது, இந்த இரத்தமானது பாவநிவாரணம் உண்டாகும்படிக்கு உங்களுக்காகவும் அனேகம் பேர்களுக்காகவும் சிந்தப்படும். இத்தைக் குடியுங்கள்" என்று அருளிச்செய்து தம்முடைய வார்த்தைப் பலத்தினாலே முந் திரிகைப்பழத்தின் இரசம் என்கிறபொருளை அல்லவென்று அந்த இரசத்தின் குணங்களுக்குள்ளே தம்முடைய திரு இரத்தத்தை இருக்கப்பண்ணி, அத்தைத் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத் தருளினதற்குப் பிற்பாடு, அவர்களோடே மகா விஸ்தாரமாக அனேக இரகசியங்களைக்கொண்டிருக்கிற ஒரு பிரசங்கம்பண்ணி, பிதாவாகிய சருவேசுரனை ஸ்தோத்திரம் பண்ணினார்.

[27. பூங்காவில் துயர் அடைந்ததின்பேரில்]

இப்படி சேசுநாதரானவர் தமது பிதாவை ஸ்தோத்திரம் பண்ணினதற்குப் பிற்பாடு, அவ்விடத்தைவிட்டு அதுக்குச் சமீப மாயிருக்கிற கேத்சேமனி என்கிற பூங்காவனத்திலே விஸ்தாரச் செபம் பண்ண வேணுமென்று தம்முடைய சீஷர்களோடேகூட எழுந்தருளினார். அவிடத்திலே எழுந்தருளினவுடனே, அந்தப் பூங்காவனத்துக்குப் புறத்தியில் எட்டு சீஷர்களை நிறுத்தி, அர்ச். இராயப்பர், அர்ச். இயாக்கப்பர், அருளப்பர் இந்த மூன்று சீஷர்களைக் கூட்டிக்கொண்டு உள்ளே பிரவேசம் பண்ணினார். அவர் மனது பொருந்தி மகாத் துக்கத்தோடே மனஸ்தாபத்தை யடைந்து தம்முடைய ஆத்துமத்தை வாதிக்கிற அப்படிப்பட்ட கனமான மனஸ்தாபத்தை அந்த மூன்று சீஷர்களுக்குக் காட்ட வேணுமென்று அவர்களைப் பார்த்து "என்னுடைய ஆத்துமமா னது மரணபரியந்தம் மனஸ்தாபத்தையும் துக்கத்தையும் அனுப வித்துக்கொண்டிருக்கிறது" என்று திருவுளம்பற்றினார்.

சேசுநாதரானவர், நாம் கஸ்தி முதலான துரிதங்களை அனு பவிக்கிறபோது சருவேசுரன் வேண்டிக்கொள்ள வேணுமென்று நமக்குப் படிப்பினையாக அந்த மூன்று சீஷர்களைவிட்டு, ஒரு கல்லெறிதூரம் போய், மிகுந்த தாழ்ச்சியோடே முழங்காலில் இருந்து, தம்முடைய திருமுகம் தரையிலேபட மனுஷனாகிய மட்

நூலகம் - சென்னை

டும் பிதாவாகிய சருவேசுரனை வேண்டிக்கொண்ட வார்த்தைகள் ஏதென்றால்: "பிதாவே! தேவரீருக்கு சித்தமுண்டானால் பாடு பட்டு மரணத்தை அடைகிறதென்கிற அந்தப் பாத்திரத்தை நான் குடியாதபடிக்கு பண்ணியருளும். ஆனால் இது என்னுடைய மனதின்படியே ஆகாமல், தேவரீருடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று வேண்டிக்கொண்டார். இந்தப் பிரகாரமாக இரண்டு விசை வேண்டிக்கொண்டு வருகையிலே, மூன்றாம் விசை சேசுநாதரானவர் சொல்லப்படாத துக்கத்தை அடைந்து முந்தின இரண்டு விசை வேண்டிக்கொண்டதைப் பார்க்க, இந்த மூனறும் விசை வேண்டிக்கொள்ளுகிறபோது, அனேகம் நேரமாயிருந்து வேண்டிக்கொண்டார். அந்த சமயத்திலே அவர் அனுபவித்துக்கொண்டு வருகிற துக்கத்தின் நிமித்தமாக அவருடைய திருமேனியானது இரத்த வேர்வையாக வியர்த்து அப்படிப்பட்ட இரதத வேர்வையானது வெகுவாய்ப் புறப்பட்டு வடிந்தோடினதினாலே, அத்தாலே தரை நனைக்கப்பட்டுது.

இத்தறுவாயிலே, சேசுநாதர் அனுபவித்த இத்தனை கனமான துக்கத்துக்குண்டான காரணங்களேதென்றால், சேசுநாதரானவர் தூரதிஷ்டியினாலே பிரத்தியட்சமாய் கண்டிருக்கிற சற்றுப் போதைக்குப் பிற்பாடு தாம் அனுபவிக்கப்போகிற யனோவாக்குக்கெட்டாத அவமானம் கஸ்தி நோவுகளும், கொடிதான மரணமும், தாம் உலோகத்தை இரட்சிக்க இதெல்லாத்தையும் அனுபவிக்கிறதற்குச் சம்மதப்பட்டிருக்கையிலே, மனுஷருக்குள்ளே அனேகம்பேர்கள் வேணுமென்று இன்னும் பாவத்துக்குடன்படுவார்கள் என்றும், தாம் மிகுந்த தயையோடே தெரிந்து கொண்ட பன்னிரண்டு பிரதான சீஷர்களுக்குள்ளே துரோகியாய்ப்போன யூதாஸ் ஒருத்தன் மறுநாள் நான்றுகொண்டு நரகத்திலே விழப்போகிறானென்றும், நிஷ்டூராயிருக்கிற யூதர்கள் கையிலே தாம் அகப்படுகிறபோது தமது சீஷர்கள் தம்மைக் கைவிட்டு ஓடிப்போவார்கள் என்றும், அந்தச் சீஷர்களுக்குள்ளே பிரதான சீஷனாயிருக்கிற அர்ச். இராயப்பர் தம்மை மூன்று விசை அறியேன் என்று மகாபாவத்தைக் கட்டிக்கொள்வாரென்றும், வேறே அனேகம்பேர்கள் தாம் பாடுபடுகிறதைப் பார்த்துத் தம்முடைய பேரிலே உண்டாயிருக்கிற விசுவாசத்தைப் போக்கடிப்பார்களென்றும், தாம் மனுஷவதாரம் பண்ணின கோத்திரத்திலே இருக்கிற யூதசனங்கள் தாம் அவர்களுக்குப் பண்ணின எண்ணப்படாத உபகாரங்களை நன்றி அறியாமல்

தம்மைச் சிலுவையிலே அறைந்து, அதினிமித்தமாகக் கனமான ஆக்கினைக்குப் பாத்திரங்களாய், நரகத்திலே விழப்போறூர்கள் என்றும், தாம் அனுபவித்த எண்ணப்படாத கஸ்தி நோவுகளை மனுஷருக்குள்ளே அனேகம்பேர்கள் சற்றுகிலும் எண்ணும விருக்கிறதினுலே, அவர்களுக்குத் தாம் பாடுபடுகிறது பிரயோசனமாய் இராதென்றும், தாம் பாடுபடுகிறதைப்பார்த்துத் தமக்கு உகந்த மாதாவானவள் மிகுந்த வியாகுலப்படுவாள் என்றும், இது முதலான விசேஷங்களை சேசுநாதரானவர் பிரத்தியட்சமாய்ப் பார்த்துக்கொண்டு இருக்கிறதினுலே, அப்படிக்கொத்த விசேஷங்கள் வரத் தாம் கனமான துக்கத்தை அனுபவிக்கிறதுக்குக் காரணமாயிருந்தது.

இந்தக் காரணங்களினுலே, சேசுநாதரானவர் கரைகாணுத துக்கத்தை அனுபவித்துக்கொண்டிருக்கையிலே, முன் சொன்னுப்போலே, பிதாவாகிய சருவேசுரனை வேண்டிக்கொண்டார். இப்படி அவர் வேண்டிக்கொண்டிருக்கும்போது, "சருவேசுரனுடைய சித்தத்தின்படியே ஆகட்டும்" என்று சொல்லிக்கொண்டு வருகிற மேலாங்கிஷமென்கிற தமது ஞானமுள்ள மனசினுலே கேட்ட மன்ருட்டைப் பிதாவாகிய சருவேசுரன் அவருக்குக் கட்டளையிட்டிருந்தாலும், பாடுபடுகிறதுக்குப் பயந்து பின் வாங்கின கீழாங்கிஷமென்கிற தமது சுபாவ மனதினுலே கேட்ட மன்ருட்டை அவர்க்குக் கட்டளையிடாதே போனுர். இத்தறுவாயிலே, பிதாவாகிய சருவேசுரன் தமக்குக் குமாரனுய் இருக்கிற சேசுநாதரானவர் கேட்ட மன்ருட்டைக் கட்டளையிடாதே போனதை விசாரிக்கும்போது, துர்ப்பலமானதுமாய்க் கிரமமானதுமாயிருக்கிற நம்முடைய மனசின்படியே நாம் சருவேசுரனைக் கேட்ட மன்ருட்டுக்களை அவர் நமக்குக் கட்டளையிடுகிறதைக் காட்டிலும், சிலவிசை அந்த மன்ருட்டுகளைக் கட்டளையிடாமலிருக்கிறது நமக்கு அதிக நன்மையாய் இருக்குமென்று, நாம் வேண்டிக்கொள்ளுகிறபோது சருவேசுரனைக் குறித்து நம்முடைய மன்ருட்டுக்களை அவருடைய சித்தத்தின்படியே அனுகூலமாகும்படிக்கு அவரை வேண்டிக்கொள்ள வேணுமென்று கண்டுபிடிப்போமொழிய மற்றப்படியல்ல.

ஆனுல் சேசுநாதரானவர் அனுபவித்துக்கொண்டிருக்கிற அந்தக் கரை காணுத துக்கத்தை அனுபவியாதபடிக்குப் பிதாவாகிய சர்வேசுரனுக்குச் சித்தமில்லாதிருந்தாலும், அவருக்கு

ஆறுதல் சொல்லத்தக்கதாக ஒரு சம்மனசுவை அனுப்பினர். அந்த சம்மனசானவரோவென்ருல், சில வேதசாஸ்திரிகள் சொன்னதின்படியே காபிரியேலென்கிற சம்மனசானவரென்று சொல்ல வேண்டியிருக்கிறது. இப்படிக்கொத்த காபிரியேல் என்கிற சம்மனசானவர் சேசுநாதருக்குக் காண்பித்து அவரைப் பார்த்துச்சொன்ன ஆறுதலுள்ள வார்த்தைகளாவது: "லோகத்தை இரட்சிக்க வந்தருளின சுவாமியே! தேவரீர் தியானித்த வர்த்தமானத்தை அடியேன் சொல்லப்போறதில்லையே, ஆனுல் தேவரீருடைய சன்னதியிலே ஒரு விண்ணப்பஞ் செய்கிறேன். இந்தச் சமயத்திலே தேவரீர் அனுபவிக்கத்தக்க அவமானம், கஸ்தி, நோவுகளையும் கொடிதான மரணத்தையும் பார்க்கும்போது அதனிமித்தமாக ஒன்ருன சருவேசுரனுக்கு மிகுந்த ஸ்தோத்திரம் உண்டாயிருக்கிறதல்லாமல், லோகமெங்கும் அவருடைய மகிமையை யறிந்து கோடாகோடி மனுஷர் கரையேறுவார்கள். இது தவிர, எங்களுக்குள்ளே அனேகம் பேர்கள் துரோகியாய்ப் போனதினுலே நரகத்திலே விழுந்து அதிலே ஊழியுள்ள காலம் இருப்பார்களே, அவர்கள் மோட்ச ராட்சியத்தை இழந்து போன ஆசனங்களிலே மனுஷர் ஏறியிருப்பார்கள் என்கிறதற்காக மோட்சத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிற அடியேன்கள் உன்னதமாயிருக்கிற சருவேசுரனை ஸ்தோத்திரம் பண்ணவும், மிகுந்த சந்தோஷப்படவும் இடமுண்டாம். தேவரீர் அனுபவிக்கத்தக்க கஸ்தி நோவுகளெல்லாம் சற்று நேரத்துக்குள்ளே முகியும். அதினுலே வருகிற பலனுனது எப்போதும் நிற்கும்" என்கிற வார்த்தைகளையும் இது முதலான ஆறுதலுக்கடுத்த வேறே சில வார்த்தைகளையும் சமமனசானவர் சேசுநாதருக்குச் சொன்னுர் என்று சொல்லக்கடவோம்.

இந்தடவாக சம்மனசானவர் சொன்ன வர்த்தமானம் நாம் கேட்கும்போது நம்மை இரட்சிக்கிறவராயிருக்கிற தயாபரனை சேசுநாதருடைய பரம தாழ்ச்சியை ஆச்சரியப்பட்டு அதைப் பின் சென்று கொண்டு வருகிறதற்குப் பிரத்திக்கினை பண்ண வேணும். அதேதென்ருல், சகல சம்மனசுகளுக்கும் இராசாவுமாய் பிதாப்பிதாவுமாகிற சருவேசுரனுடைய தைரியமுள்ளவருமாய்த் தமது பலத்தினுலே லோகத்தை நடத்திக்கொண்டு வருபவருமாயிருக்கிற சேசுநாதரானவர், சம்மனசுகளுடைய சுபாவத்துக்குக் கீழ்த்தரமாயிருக்கிற மனுஷ சுபாவத்தை எடுத்து அந்த மனுஷ சுபாவத்திலே தமக்கு ஊழியம் பண்ணிக்

கொண்டு வருகிற ஒரு சம்மனசுவினாலே ஆறுதலுள்ள வார்த்தையைக் கேள்கத்தக்கதாகச் சித்தமானார். இப்படி ஆறுதல் சொல்ல, சம்மனசுவுக்கு சேசுநாதரானவர் பிரத்தியுத்தாரம் சொல்லாமல் எழுந்தருளித், தம்முடைய சீஷர்களண்டையிலே போனார். பிதாவாகிய சருவேசுரனை வேண்டிக்கொண்ட அந்த ஸ்தலத்திலே யிருக்கிற ஒரு பாறையிலே தம்முடைய முழங்கால் இரண்டையும் பதியப் பண்ணினார் என்கிறதினாலே அக்காலத்துக்குப் பிற்பாடு அப்படிக்கொத்த புதுமை சம்பவித்த ஸ்தலத்திலே கிறிஸ்துவர்களாயிருக்கிற பேர்கள் ஒரு கோவில் கட்டினார்கள்.

[28. ஆண்டவர் பிடிபட்டதின்பேரில்]

சேசுநாதரானவர் தம்முடைய சீஷர்கள் அண்டையிலே போனவுடனே நித்திரை போறவர்களை எழுப்பி அவர்களைப் பார்த்து "நீங்கள் இளைப்பாறிக்கொண்டு நித்திரை பண்ணினது போதாதோ? பாவிகளுடைய கையிலே நம்மைக் காட்டிக் கொடுக்கிறதற்கு ஆன சமயம் கிட்டிற்று. இதோ நமக்குத் துரோகம் பண்ணிக் காட்டிக் கொடுக்கிறவன் கிட்ட வந்தாற் போலாச்சுது. அவனுக்கு எதிரே போவோம், எழுந்திருந்து வாருங்கள்" என்று அருளிச்செய்திருக்கையிலே, பன்னிரண்டு சீஷர்களில் யூதாஸ் காரியோத் என்கிறவன் தன்னுடைய தேவ குருவாகிற சேசுநாதரைப் பிடிக்கத்தக்கதாக வில்லும், கத்தி முதலான ஆயுதங்களையும் கொண்டு வருகிற தலையாரிகளையும் அனேகஞ் சேவகரையும் கூட்டிக்கொண்டு வந்தான். இப்படிக் கொத்த துரோகியானவன் வருகிறபோது தான் கூட்டிக்கொண்டு வந்த சேவகரைப் பார்த்து, "நீங்கள் என்னுடைய குருவை அறியீர்கள். ஆனபடியினாலே நான் யாதொருத்தனைக் கட்டிக் கொண்டு முத்தி செய்தேனானால் அவர் தானே என்னுடைய குரு. அவரைக் கெட்டியாகப் பிடித்துப் பதலமாகக் கட்டிக்கொண்டு போங்கள்" என்று சொன்னான்.

இப்படிச் சொன்ன துரோகியானவன், சேசுநாதர் தம்முடைய சீஷர்களோடேகூடத் தனக்கு எதிராக வருகிறாரென்று கண்டு, தன்னோடே வருகிற சேவுகரைவிட்டு முந்தி நடந்து தனக்கு எதிராக வருகிற சேசுநாதரைக் கட்டிக்கொண்டு முத்தி செய்து சற்றாகிலும் வெட்கமில்லாமல் 'குருவே, வாழ்க!' என்று சொன்னான். இப்படிச் செய்த துரோகியானவனைச் சேசு

நாதர் பார்த்து, "இஷ்டக்காரா எதுக்கு வந்தாய்? யூதாசென்கிறவனே முத்தி செய்து என்னைக் காட்டிக் கொடுக்கிறாயோ?" என்று திருவுளம்பற்றினதுக்குப் பிற்பாடு வந்திருக்கிற சேவகரைப் பார்த்து, "நீங்கள் யாரைத் தேடி வந்தீர்கள்?" என்று கேட்டருளினார். அதற்கு அவர்கள் "நசரேனுவாகிய சேசுவைத் தேடுகிறோம்" என்று சொன்னார்கள். இப்படி அவர்கள் சொன்னதற்கு "நசரேனுவாகிய சேசுவென்கிறவர் நான் தான்" என்று திருவுளம்பற்றினார். இந்தடவாகச் சேசுநாதர் திருவுளம்பற்றின வார்த்தைகளை அந்த சேவகர்களும் அவர்களோடேகூட இருக்கிற துரோகியானவனும் கேட்டவுடனே பயந்து மல்லாக்காய் விழுந்தார்கள்.

அதேதென்றால், சேசுநாதரானவர் பூங்காவனத்திலே பிதாவாகிய சருவேசுரனை வேண்டிக்கொண்டிருக்கையிலே, அனுபவித்த துக்கத்தின் நிமித்தமாகத் தம்மை மெய்யான மனுஷனென்று காட்டினாப்போலே இந்தச் சமயத்திலே சருவேசுரனுக்கு விசேஷ நாமமாகிற 'நான்தானே' என்று அருளிச்செய்து அவர்களை மல்லாக்காய் விழப்பண்ணினதினாலே தம்மை மெய்யான சருவேசுரன் என்று காட்டினார். அந்த அவசரத்திலே அர்ச் இராயப்பர் தம் கையிலேயிருக்கிற கத்தியை உருவி யூதருக்குப் பிரதான குருவாயிருக்கிறவனுடைய மாலக்கு என்கிற ஊழியக்காரனை வெட்டினார். அந்த வெட்டானது காதிலே பட்டுக் காது அறுந்துவிழுந்தது. அப்போது சேசுநாதரானவர் அர்ச். இராயப்பரைப் பார்த்து "உன்னுடைய கத்தியை உறையிலே போடு, அதேதென்றால் கத்தியினாலே வெட்டுகிறவன் கத்தியினாலே வெட்டுண்டு போவான்" என்று திருவுளம்பற்றினதற்குப் பிற்பாடு, அத்து விழுந்த காதை எடுத்துக் காதறுபட்டுப் போனவனுடைய காதோடே ஒட்டிவித்துப் பழையபடி போல இருக்கப்பண்ணினதுந் தவிரத் திரும்ப அர்ச். இராயப்பரைப் பார்த்து "நான் பிதாவைப் பார்த்து வேண்டிக்கொண்டேனால் அவர் எனக்குச் சகாயமாக அனேகஞ் சம்மனசுகளுடைய சேனைகளை அனுப்புவார் என்று அறியாதே இருக்கிறாயோ! ஆனால் பூர்வ காலத்திலே தீர்க்கதரிசிகள் எழுதிவைத்ததின்படியே நாம் செய்யவேண்டாமோ?" என்று திருவுளம்பற்றினார்.

அதுக்குப் பிற்பாடு சேசுநாதரானவர் தம்மைப் பிடிக்கவந்த சேவகரைப் பார்த்து "நீங்கள் யாரைத்தேடுகிறீர்கள்?" என்று திரும்பக் கேட்டருளினார். "நசரேனுவாகிய சேசுவைத் தேடு

கிறோம்” என்று சொன்னார்கள். அதற்கு சேசுநாதரானவர், “கத்தி முதலான ஆயுதங்களோடேகூட ஒரு கள்ளனைப் பிடிக்கிறதுபோலே என்னைப் பிடிக்க வந்தீர்களோ? கரையேறத்தக்கதாக உங்களுக்கு வழிகாட்டும்போது நான் தினந்தினம் தேவாலயத்திலே உங்களோடேகூட இருந்தேனே. அப்போது என்னைப் பிடியாதே போனீர்களே ஆனால் இப்போது உங்களுக்கான காலமும் அந்தகாரத்தினுடைய பலமுமாச்சுதே, சேசு என்கிறவர் நாம்தாமே என்று உங்களுக்குச் சொன்னோமே. என்னைப்பிடிக்க வேணுமானால் பிடியுங்கள். என்னுடைய சீஷர்கள் வழி போகவேண்டாம்” என்று திருவுளம்பற்றினார்.

இப்படித் திருவுளம்பற்றின சேசுநாதரானவர் தம்மைப் பிடிக்கிறதற்கு விலகாமல் இருந்தார் என்கிறதற்குச் சந்தேகமில்லை. ஆனபடியினாலே சேசுநாதரைப் பிடிக்கத்தக்கதாக வந்திருக்கிற சேவகர் அவர் திருவுளம்பற்றின வார்த்தையைக் கேட்டவுடனே பசித்திருக்கிற ஓநாய்களானதுகள் செம்மறியாட்டுக்குட்டிகள் பேரிலே வந்து விழுந்து கடிக்கிறதுபோலே, லோகத்தினுடைய பாவங்களைப் போக்குகிற சாதுவுள்ள செம்மறியாட்டுக்குட்டியாகிற அவர்பேரிலே வந்து விழுந்து, அவரைப் பிடித்து இழுத்து, பின்கட்டு முறையாகக் கட்டி முகத்திலேயும் துப்பித் தரையிலே விழப்பண்ணிக் காலாலே உதைத்து, இது முதலான அவமானங்களைப் பண்ணுகிறபோது, சீஷர்கள் எல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்.

[29. கைப்பாஸ் என்பவன் வீட்டிலே]

இந்தப் பிரகாரமாகக் கட்டப்பட்டிருக்கிற சேசுநாதரை நிஷ்டூரமுள்ள பாவிகள் மகா ஆரவாரத்தோடே கொக்கரித்துக் கொண்டு, தங்களுக்குப் பிரதான குருவாயிருக்கிற கைப்பாஸ் என்கிறவனுக்குப் பெண் கொடுத்த மாமனாகிற அன்னாஸ் என்கிறவன் அண்டையிலே முந்த முந்தக் கூட்டிக்கொண்டு போனார்கள். அப்போது அன்னாசென்கிறவன் தன்னண்டையிலே கூட்டிக்கொண்டு வந்த சேசுநாதரைக் கட்டோடே தானே தனது மருமகனாகிற கைப்பாஸ் என்கிறவன் அண்டையிலே கூட்டிக்கொண்டு போகச் சொன்னான். அவன் சொற்படியே அந்த நிஷ்டூரரான பாவிகள் சேசுநாதரைக் கைப்பாஸென்கிறவன் அண்டையிலே கூட்டிக்கொண்டு போனார்கள்.

அந்தச்சமயத்திலே சேசுநாதர் பேரிலே பகையுள்ள குருக்கள் முதலான அனேகம் பேர்கள் பிரதான குருவாகிற கைப்பாஸென்கிறவனோடே கூட இருந்தார்கள். அவர்கள் எல்லாரும் அப்படிக் கூடவிருக்கிறபோது, கைப்பாஸென்கிறவன் தன்னுடைய ஆசனத்திலே யிருந்துகொண்டு, தன் முன்பாகபின் கட்டுமுறையாகக் கட்டப்பட்டு நிற்கிற சேசுநாதரைப் பார்த்து "நீ எந்த நியாயத்தை உபதேசித்து சீஷர்களைக் கூட்டுகிறாய்?" என்று மிகுந்த ஆங்காரத்துடனே கேட்டான். அதுக்குச் சேசுநாதரானவர் மிகுந்த தாழ்ச்சியோடே அருளிச் செய்த பிரத்தியுத்தாரமாவது: "எல்லாரும் அறிய லோகத்திலே பிரசங்கம் பண்ணினேன். யூதர்களெல்லாம் கூடுகிற ஸ்தலமாகிற தேவாலயத்திலேயும், செபம் முதலானதுகளுக்குச் சபை கூட்டுகிற மண்டபத்திலேயும் எப்போதும் உபதேசத்தைப் படிப்பித்துக் கொண்டு வந்தேனேயல்லாமல், நான் ஏகாந்தமாகிய உபதேசத்தைப் படிப்பித்துக்கொண்டு வந்தவனல்ல. ஆனபடியினாலே நீ இந்த விசேஷத்தைக் கேட்பானேன்? நான் பிரசங்கம், பண்ணினதைக் கேட்டிருக்கிற பேர்கள் இதோ இருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு நான் சொன்ன விசேஷங்களை அறிவார்களே, அவர்களைக் கேட்டாயானால் அவர்கள் தானே சொல்லுவார்கள்" என்று சேசுநாதர் திருவுளம்பற்றினார். இப்படிப்பட்ட தப்பில்லாததுமாய், ஞானமுள்ளதுமாயிருக்கிற பிரத்தியுத்தாரத்தைக் கைப்பாஸ் என்கிறவனுடைய ஊழியக்காரனானவன் கேட்டு சேசுநாதரைப் பார்த்து "பிரதான குருவுக்கு இப்படிப் பிரத்தியுத்தாரத்தைச் சொல்லுகிறாயோ" என்று சொல்லி அவரைக் கன்னத்திலே அடித்தான். இந்த அவமானத்தோடே கன்னத்திலே அடிபட்ட சேசுநாதரானவர் அந்த ஊழியக்காரனைப் பார்த்து "நான் அக்கிரமமான வார்த்தை சொன்னேனானால் எதிலே அக்கிரமமான வார்த்தை சொன்னேன் என்று காட்டு. அல்லது கிரமமான வார்த்தை சொன்னேனானால் என்னை ஏன் அடிக்கிறாய்?" என்று திருவுளம்பற்றினார்.

இப்படித் திருவுளம்பற்றின சேசுநாதரானவர் கன்னத்திலே அடிபட்டதற்குப் பிற்பாடு, அவர் பேரிலே பல பல தூஷணங்களையும் குற்றங்களையும் அநியாயமாகச் சுமத்தி அதுகளை ஒப்புவிக்கிறதற்கு ஆன வகையையும் நியாயத்தையுங் காணாதே போனார்கள். ஆனபடியினாலே; [பிரதான] குரு முதலான பேர்கள் முன்பாக இரண்டு தப்பறை சாக்ஷிகள் வந்து இவன்

நாங்கள் கேட்டிருக்கையிலே தேவாலயத்தை இடிப்பேனென்றும், அதை மூன்று நாளைக்குள்ளே திரும்பக் கட்டுவேன்'' என்றும் சொன்னானென்கிற சாக்ஷி சொன்னார்கள். அப்படிக்கொத்த தப்பறை சாக்ஷிகளுக்குச் சேசுநாதரானவர் ஒரு வார்த்தையும் சொல்லாதிருந்தார். அப்படியே அந்தப் பாவிகளான பேர்கள், லவலேசமானாலுங் குற்றம் இல்லாத சேசுநாதர் பேரிலே பல பல குற்றங்களைச் சுமத்தத்தக்கதாகப் பிரயாசைப்பட்டாலும் அதுகளை ஒப்பிக்கக்கூடாதே போச்சுது. ஆனபடியினாலே பிரதான குருவாகிற கைப்பாஸ் என்கிறவன் சேசுநாதருடைய வார்த்தையிலேதானே குற்றம் பிடிக்க வேணுமென்று சேசுநாதரைப் பார்த்து, "உன் பேரிலே இத்தனை குற்றங்களைச் சுமத்திக்கொண்டு வருகிறார்களே, அதுகளுக்கு என்ன பிரத்தியுத்தாரம் சொல்லாமலிருக்கிறாய்?'' என்று கேட்டதற்கு சேசுநாதரானவர் ஒரு வார்த்தையானாலுஞ் சொல்லவில்லையென்று அந்தப் பாவியான கைப்பாஸ் என்கிறவன் கண்டு, திரும்ப அவரைப் பார்த்துச் "சகல தோத்திரங்களுக்குப் பாத்திரமாயிருக்கிற ஒன்றான சருவேசுரனுடைய சுதனாகிய கிறிஸ்துவென்கிறவர் நீயோ அல்லவோ என்று மெய்யான சருவேசுரன் ஆணைப்படி எங்களுக்குச் சொல்'' என்று கேட்டான். அப்படியே அவன் ஆணையிட்டுக் கேட்டதற்குச் சத்திய சொரூபியாய் இருக்கிற சேசுநாதரானவர் அருளிச்செய்த பிரத்தியுத்தாரமாவது: "சருவேசுரனுடைய சுதனாகிய கிறிஸ்துவென்கிறவர் நாம்தானே. பூலோகத்துக்கு நடுத்தீர்க்கத் தக்கதாக வரப்போகிறஎன்னைக் காணப்போகிறீர்கள்'' என்கிற சத்திய விசேஷத்தை அருளிச் செய்தார்.

இப்படிக்கொத்த சத்திய விசேஷத்தை மகாப்பாவியாயிருக்கிற கைப்பாசென்கிறவன் மேற்கொள்ளாமல், சேசுநாதர் சருவேசுரனுக்குத் தூஷண வார்த்தை சொன்னாரென்று சொல்லி மிகவும் துக்கப்படுகிறவன்போல் துக்கத்துக்கு அடையாளமாகத் தனது சட்டையைக் கிழித்துப்போட்டு அவிடத்திலேயிருக்கிற பேர்கள் எல்லாரையும் பார்த்து "இவன் சொன்ன தூஷண வார்த்தையைக் கேட்டீர்களோ, இதுக்கு இன்னும் வேறே சாக்ஷிகள் வேணுமோ, இதிலே உங்களுக்குத் தோன்றின காரியம் ஏதென்று சொல்லுங்கள் என்று கேட்டான். அதுக்கு அவர்களும் அத்தறுவாயிலே தங்களுடைய சட்டைகளைக் கிழித்துப்போட்டு "இவன் சாவுக்குப் பாத்திரவனாயிருக்கிறான். ஆன

படியினாலே இவன் அவசியமாய்ச் சாகவேணும்" என்று பிரத்தியுத்தாரஞ் சொன்னார்கள். இப்படிக்கொத்த ஆலோசனையைக் கைப்பாஸ் என்கிறவனோடேகூடப் பண்ணின பேர்கள் இருபது பேர்களென்றும் அந்த இருபது பேரிலே பதினஞ்சு பேர் சேசுநாதரைக் கொல்லவேணுமென்றும், மற்ற அஞ்சுபேர் அவரைக் கொல்லவொண்ணாதென்றும் சொன்னார்கள் என்றும் சில கிரந்தகர்த்தாக்கள் எழுதி வைத்தார்கள்.

[30. கைப்பாஸ் வீட்டில் அனுபவித்த நிந்தை அவமானங்கள்]

இந்தப் பிரகாரமாக கைப்பாஸ் என்கிறவனும் மற்றப் பாவிகளான பேர்களும் சேசுநாதரைக் கொல்லவேணுமென்று தீர்வையிட்டதற்குப் பிற்பாடு, அவரை மிகவும் அவமானம் பண்ணவேணுமென்று சில நிஷ்டூரரான சேவகர்கள் கையிலே ஒப்புக்கொடுத்துப் பலபல கஸ்தி வாதைகளைப்படுத்தச் சொன்னார்கள். அப்படியே அந்த சேவகர், சேசுநாதரை மிகுந்த நிஷ்டூரத்தோடே ஒரு தூணிலே கட்டிக் கண்மறைய முகத்திலே ஒரு சீலையுங் கட்டிக் கன்னத்திலே அடித்துக் "கிறிஸ்துவென்கிறவன் நீயல்லவோ, உன்னை அடித்தவன் யார் என்று கண்டுபிடித்து எங்களுக்குச் சொல்" என்று பரிகாசமாகக் கேட்டதும் அல்லாமல், அவருடைய திருமுகத்திலே துப்பித் தலைமயிரைப் பிடித்துப் போட்டுத் தாடி மயிரை இழுத்துப் பிடுங்கிக் காலாலே உதைத்தது, இது முதலான எண்ணப்படாத அவமானங் கஸ்தி நோவுகளை வியாழக்கிழமை இராத்திரி முழுதும் இப்படிப்பட்ட நிஷ்டூரர் கையிலே சேசுநாதரானவர் அனுபவித்த உபத்திரவங்கள் எல்லாம் இப்போதைக்கு மனோ வாக்குக்கெட்டாததாய் இருக்கிறதினாலே, அதுகளை அவர் நடுத்தீர்க்கிற நாளையிலே அறியப்பண்ணுகிறபோது அறிவோமொழிய மற்றப்படியல்ல

ஆனால் சேசுநாதரானவர் அன்று இராத்திரி அனுபவித்த சகலமான கஸ்திகளைக் காட்டிலும், அர்ச். இராயப்பர் தம்மை அறியேன் என்று சொன்னதின் நிமித்தமாகக் கட்டிக்கொண்ட பாவத்தின் நிமித்தமாக அதிகமான கஸ்தியை அனுபவித்தார். அதேதென்றால், சேசுநாதரானவர் நிஷ்டூரர் கையிலே அகப்படுகிறபோது மற்ற சீஷர்களைப்போலே ஓடிப்போனாலும், பாவிகளானபேர்கள் தம்முடைய தெய்வ குருவானவரை என்ன செய்கிறார்களோ என்று பார்க்கத்தக்கதாகத் தூரத்திலே நின்று மெள்ளமெள்ளப் பின்தொடர்ந்துகொண்டு பிரதான குருவாகிற கைப்பாசென்கிறவனுடைய அரண்மனை வாசல்மட்டும் போனார்.

அப்படியே அர்ச். இராயப்பர் அந்த அரண்மனையிலே போய் இருக்கிறபோது, வாசல் காத்துக்கொண்டிருக்கிற வெள்ளாட்டி ஒருத்தி அவரைக் கண்டு "பிடிபட்டு வந்திருக்கிற இவனுடைய சீஷர்களில் நீ ஒருத்தன் அல்லவோ?'' என்று சொன்னதற்கு அர்ச். இராயப்பர் தமக்கு வந்த பயத்தின் கலக்கத்தினாலே ஆயுத [1]சவரணையுடனே இருக்கிற சேவகருக்குப் பயப்படுகிறதைக் காட்டிலும் எறிந்துபோட்டவளாயிருக்கிற ஒரு வெள்ளாட்டி சொன்ன வார்த்தைக்குப் பயந்துத் தத்தளித்துப் "பெண்ணாய் பிறந்தவளே என்ன சொல்லுகிறாய்? நான் அப்படிப்பட்டவனுடைய சீஷன் அல்ல, அவனை நான் அறிந்தவனும் அல்ல" என்று சொன்னார். இந்த வார்த்தையை அவர் சொல்லுகிற போது ஒருமுறை சேவல் கூவிற்று. அதுக்குப் பிறபாடு அந்த வெள்ளாட்டியானவள் அர்ச். இராயப்பரை அறியாமல் வாசல் விட்டதினாலே அவர் அந்த அரண்மனைக்குள்ளே போய் முற்றத்திலே குளிர் காய்ந்துகொண்டிருக்கிற சேவகரோடேகூட அறியாதவன்போலே குளிர் காய்ந்துகொண்டிருந்தார்.

அத்தறுவாயிலே, அர்ச். இராயப்பர் அந்தச் சேவகரோடே பிரசங்கம் பண்ணிக்கொண்டு வருகையிலே அவர்களுக்குள்ளே ஒருத்தன் அவரைப் பார்த்து "மெய்யாகவே நீ பிடிபட்டு வந்திருக்கிற சேசுவினுடைய சீஷனாய் இருக்கிறாய், அதேதென்றால், உன்னுடைய பாஷைதானே உன்னை இன்னானென்று வெளிப்படுத்தினாப்போலே யாச்சுது" என்கிற வார்த்தையை அர்ச். இராயப்பர் கேட்டு மிகவும் பயந்து "நான் அப்படிக்கொத்தவனுடைய சீஷனல்ல" வென்று ஆணையிட்டுச் சொன்னார். இப்படி அவர் சொன்ன சற்றுப்போதைக்குப் பிறபாடு காதற்று விழ வெட்டுண்ட ஊழியக்காரனுடைய பெந்துவாயிருக்கிற ஒருத்தன் அர்ச். இராயப்பரைப் பார்த்து "நீ சேசுவென்கிறவனுடைய சீஷன் தானே? தோட்டத்திலே அவனோடேகூட இருக்கிற போது உன்னை நான் காணவில்லையோ?'' என்று சொன்னதற்கு, அர்ச். இராயப்பர் மிகவும் பயந்து "நான் அவனுடைய சீஷனல்ல'' வென்று ஆணையிட்டதுமல்லாமல் 'நான் அப்படிக்கொத்தவனுடைய சீஷனானால் எனக்கு இந்தப் பொல்லாப்பு வரக்கடவது' என்று பலபல பாஷை கூறிக்கொண்டார். இப்படிப் பல பாஷை சொன்னவுடனே இரண்டாம்முறை சேவல் கூவிற்று. இந்த இரண்டு விசை சேவல் கூவினதை அர்ச். இராயப்பர் கேட்டு "இரண்டு முறை சேவல் கூவுகிறதற்கு முந்தி மூன்று

1. தயாரிப்பு

விசை அறியேன் என்பாய்'' என்று சேசுநாதர் திருவுளம்பற்றி னதை நினைத்தார். அந்தச் சமயத்திலே தெய்வ குருவாகிற சேசு நாதரானவர் அர்ச். இராயப்பரைக் கிருபாகடாக்ஷமாகத் திரும்பிப் பார்த்தார். ஆனபடியினலே அர்ச். இராயப்பர் தாம் பண்ணின பாவத்தின் நிமித்தமாக மிகவும் மனஸ்தாபப்பட்டு அந்த அரண் மனையிலே நின்று புறப்பட்டுக் கோவென்று அழுதுகொண்டு போனர்.

[31. இரட்சகர் பிலாத்து அரண்மனையிலே]

இந்தப் பிரகாரமாக அன்று இராத்திரி கைப்பாசென்கிற வனுடைய அரண்மனையிலே நடந்தது. விடிகிறநேரத்திலே வெள்ளிக்கிழமை நாள் கைப்பாஸ் என்கிறவனும் மற்ற குருக்கள் முதலான வித்தியாபாரகரும் கூட்டங்கூடிக்கொண்டு சேசு நாதரை அழைப்பித்து அவரை முந்திக்கேட்டாப்போலே "நீ சருவேசுரனுடைய சுதனே அல்லவோ?'' என்று கேட்டதற்கு சேசுநாதர் 'ஆம்' என்று திருவுளம்பற்றினதற்குச் செருசலேம் என்கிற பட்டணத்துக்கு துரையாயிருக்கிற போஞ்சியு பிலாத் தின் கையிலே அவரைக் கொல்லுகிறதற்கு ஒப்புக்கொடுக்க வேணுமென்று தங்களுக்குள்ளே ஆலோசனை பண்ணி ஸ்தாபித் தார்கள். அப்படி ஸ்தாபித்த அந்தக் குருக்கள் முதலான பாவி கள் சேசுநாதரைப் பின்கட்டு முறையாகக் கட்டித் தாங்கள் எல்லாரும் கூடிப் போஞ்சிப் பிலாத்தின் கையிலே ஒப்புக் கொடுக்கக் கூட்டிக்கொண்டு போனர்கள்.

இந்த விசேஷத்தை சேசுநாதரைக் காட்டிக்கொடுத்த துரோகியாகிற யூதாஸ் என்கிறவன் அறிந்து, நான் பண்ணின துரோகத்தைத் தயாபரனை கர்த்தரானவர் பொறுக்கமாட்டா ரென்று தன் மனதிலே கெட்டியாக வைத்துக்கொண்டு மனஸ் தாபத்தோடே தேவாலயத்திலே போய் அவிடத்திலே இருக்கிற பாவிகளான குருக்கள் முன்பாகத் தான் வாங்கின முப்பது வெள்ளிக்காசை எறிந்து போட்டுக் குற்றமில்லாதவருடைய இரத்தத்தைச் சிந்திப்போடுகிறதற்கு மகாத்துரோகம் பண்ணி னேன் என்று சொன்னன். அதற்கு அந்தக் குருக்களான பேர்கள், 'நீ பாவம் பண்ணினயானல் எங்களுக்கென்ன? நீதானே அந்தப் பாவத்துக்கான பலனை அனுபவிப்பாய்' என்று சொன்னதைத் துரோகியான யூதாஸ் கேட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டுப் போய் நான்றுகொண்டு செத்து நரகத்துக்குப் போனன்.

இப்படிக்கொத்த துரோகியானவன் நான்றுகொண்டதன் நிமித்தமாக வயிறு வெடித்து வயிற்றிலே உண்டான ஈரல், குடல் முதலானதுகளெல்லாம் தரையிலே விழுந்துபோச்சுது. அத்தறு வாயிலே யூதரென்னப்பட்ட பாவிகளான குருக்கள் முதலான பேர்கள் சேசுநாதரைப் போஞ்சியுப் பிலாத்தின் கையிலே ஒப்புக்கொடுக்கிறபோது, போஞ்சியு பிலாத்தென்கிறவன், 'இவனை என் வசத்திலே ஒப்புக்கொடுக்கிறீர்களே, இவன் பேரிலே குற்றம் எது?' என்று கேட்டான். அதற்கவர்கள், 'இவன் மகாப்பொல்லாதவன் ஆகாதிருந்தால் இவனை உன் கையிலே காட்டிக் கொடுப்போமோ?' என்று சொன்னார்கள். இப்படி அவர்கள் சொன்ன வார்த்தையைப் போஞ்சியு பிலாத் தென்கிறவன் கேட்டு, 'நீங்கள் தானே இவனை ஒப்புக்கொண்டு உங்கள் வேதத்தின்படியே தீர்வை சொல்லி ஆக்கினை இடுங்கள்' என்று சொல்லியதுக்கு அவர்கள், 'அவனைச் சிலுவையிலே அறைந்து கொல்லுகிறது எங்களாலே ஆகாதென்கிறதினாலே இந்தப் பாவியை உன் கையிலே காட்டிக்கொடுத்தோம்' என்று சொன்னார்கள். ஆனால் தாங்கள் சேசுநாதர்பேரிலே அதுக்கான குற்றத்தைச் சுமத்தாதிருந்தால் போஞ்சியு பிலாத்தென்கிறவன் அவரை ஆக்கினையிடமாட்டானென்று அறிந்து போஞ்சியு பிலாத்தென்கிறவனைப் பார்த்து, 'இவன் சனங்களை மோசம் போக்கிக்கொண்டு வருகிறான். ரோமாபுரி இராயனுக்குப் பகுதி கொடுக்கவேண்டாம் என்று விலக்கிறான். இதல்லாமல் தன்னைத் தான் கிறிஸ்து என்கிற இராசாவென்று சொல்லிக்கொண்டு வருகிறான் என்று கண்டுபிடித்தோம்' என்கிற மூன்று குற்றங்களை சேசுநாதர் பேரிலே சொன்னார்கள்.

இப்படிச்சொன்ன குற்றங்களைப் போஞ்சியு பிலாத்தென் கிறவன் கேட்டவுடனே சேசுநாதரை மகாத்துமாவென்றும் அவரை வர்மத்தினாலே தன் கையிலே காட்டிக்கொடுக்கிறார் களென்றும் அறிந்து அவர்கள் சொன்ன அந்த மூன்று குற்றங் களுக்குள்ளே சேசுநாதரானவர் தம்மை இராசாவென்று சொல்லுகிற காரியமானது அந்த ராச்சியத்துக்குக் கர்த்தனா யிருக்கிற தனது ரோமாபுரி இராயனுக்கு விரோதமாயிருக்கக் கொள்ள அப்படிக்கொத்த காரியத்தை மாத்திரம் மனதிலே கண்டுகொண்டு அதை வெளியாக்க வேணுமென்று சேசு நாதரைப் பார்த்து 'நீ யூதர்களுக்கு இராசாவோ?' என்று கேட்டான். அப்போ சேசுநாதரானவர் போஞ்சியு பிலாத்-

தென்கிறவனைப் பார்த்து 'இந்த விசேஷத்தை நீயாகச் சொல்லு கிறாயோ, நம்முடையபேரிலே அவர்கள் சொன்னதைக் கேட்டுச் சொல்லுகிறாயோ?' என்று திருவுளம்பற்றினதற்குப் போஞ்சியு பிலாத்தென்கிறவன், 'கிறிஸ்துவாகிற இராசா வருவாரென்று பார்த்துக்கொண்டிருக்கிற யூதர்களுக்குள்ளே நானும் யூதனா யிருக்கிறேனோ? உன்னுடைய சனங்களும் குருக்களும் உன்னை என் கையிலே ஒப்புக்கொடுத்தார்கள். நீ செய்தது ஏது?' என்று சேசுநாதரைப் பார்த்துக் கேட்டான்.

அப்படி அவன் கேட்டதற்கு சேசுநாதரானவர் திருவுளம் பற்றினதாவது: 'என்னுடைய இராச்சியமானது இந்த லோக சம்மந்தமாயிருக்கிற இராச்சியமல்ல, அதேதென்றால், என் னுடைய இராச்சியம் லௌகீக ராச்சியமாயிருந்தால் நான் யூதர்கள் கையிலே ஒப்புக்கொடாதபடிக்கு என்னுடைய சேவகர் யுத்தம் பண்ணுவார்கள். ஆனபடியினாலே என்னுடைய இராச்சியமானது இவ்வுலகத்துக்கடுத்த இராச்சியமாயிருக்க வில்லை' என்று திருவுளம்பற்றினார். இப்படித் திருவுளம்பற்றின சேசுநாதரை போஞ்சிப் பிலாத்தென்கிறவன் பார்த்து, 'எப்படி யாகிலும் நீ இராசாவாயிருக்கிறாயோ?' என்று திரும்பக்கேட்ட தற்கு சேசுநாதரானவர், 'நாம் இராசாவாயிருக்கிறேன் என்று நீதானே சொல்லுகிறாய். சத்தியத்துக்குச் சாட்சி மேரையாகச் சத்தியம் இன்னதென்று காட்டுகிறதற்கு நான் லோகத்திலே வந்து பிறந்தேன். சத்தியத்தின்பேரிலே மனசாயிருக்கிறவன் என்னுடைய வார்த்தையைக் கேட்பான்' என்று அருளிச் செய்தார்.

இந்த வார்த்தையைப் போஞ்சிப் பிலாத்தென்கிறவன் கேட்டு 'சத்தியமாவது ஏது?' என்று சொல்லி அரண்மனைக்குப் புறத்தியிலே இருக்கிற யூதர்களண்டையிலே போய் அவர்களைப் பார்த்து, 'இந்த மனுஷன் சனங்களை ஏசிக்கொண்டு திரிகிறான் என்று என் கையிலே காட்டிக்கொடுத்தீர்களே. இதோ நீங்கள் பார்த்துக்கொண்டு இருக்கையிலே இத்தையும் அத்தையுங் கேட்டு விசாரிக்குமிடத்தில் இவனிடத்திலே ஒரு குற்றங்காணேன்' என்று போஞ்சிப் பிலாத்து சொல்லுகிறபோது, தோஷத் துரோகத்துக்குப் பின்வாங்காத யூதர்களானபேர்கள், சேசு நாதர்பேரிலே பலபல குற்றங்களைச் சுமத்திக் கூப்பிட்டுக்கொண் டிருந்தார்கள். அதுக்குச் சேசுநாதரானவர் வாய் திறந்து பேசாமல் ஒரு வார்த்தையாகிலும் சொல்லாமலிருந்தார்.

அப்படியே சேசுநாதரானவர் வாய்திறந்து பேசாமல் மௌன மாயிருக்கிறதைக் கண்டு, போஞ்சிப் பிலாத்தென்கிறவன் சேசு நாதரைப் பார்த்து 'இத்தனை குற்றங்களை உன்பேரிலே சுமத்திக் கொண்டு வருகிருர்களே, அதுகளுக்கு ஒன்றுஞ்சொல்லாமலிருக் கிருயோ?' என்று சொன்னதற்கு சேசுநாதரானவர் ஒன்றும் சொல்லாதிருந்ததினுலே மிகவும் ஆச்சரியப்பட்டான்.

[32. ஏரோதன் அரண்மனையிலே பையித்தியக்காரனுக நிந்திக்கப்பட்டது.]

அப்போது துரோகிகளான யூதர்கள் சேசுநாதரை ஆக்கினைபிடத்தக்கதாக போஞ்சிப் பிலாத்துவுக்கு மனசில்லை யென்று கண்டு திரும்ப ஒரு குற்றத்தைச் சேசுநாதர் பேரிலே அநியாயமாய் சுமத்தினுர்கள். அதேதென்ருல், 'இவன் கலிலேயா இராச்சியத்திலே துவக்கி இந்த யூதேயா இராச்சியம் மட்டும் உண்டான குளங்களைத் தாறுமாருன புத்திகளைச் சொல்லி எங்கும் கலகம் பண்ணிக்கொண்டு வருகிருன்' என்று சொன்னுர்கள். இந்த வார்த்தையைப் போஞ்சியுப் பிலாத்தென் கிறவன் கேட்டவுடனே சேசுநாதரானவர் கலிலேயா இராச் சியத்துக்காரனுயிருக்கிருன் என்று அறிந்து, கலிலேயா இராச் சியத்தை ஆண்டுகொண்டு வருகிறவனுமாய், அந்தத் தறுவா யிலே பாஸ்குத்திருநாள் நிமித்தமாக செருசலேம் என்கிற பட் டணத்திலே வந்திருக்கிறவனுமாயிருக்கிற ஏரோதை என்கிற இராசாவண்டைக்கு அவரை அனுப்பினுன்.

அந்த மகாப்பாவியான ஏரோதை என்கிற இராசாவான வன் சேசுநாதர் பண்ணிக்கொண்டு வந்த புதுமைகளைக்கேட்டு அவரைக் காணவேணுமென்று அனேகநாள் ஆசையாயிருந் தான். ஆனபடியினுலே போஞ்சிப் பிலாத்தென்கிறவனுல் தன் னண்டைக்கு அனுப்பப்பட்ட சேசுநாதரைக் கண்டவுடனே சந்தோஷப்பட்டு அவரைப் பலபல வியர்த்தமான வார்த்தை களைக் கேட்டான். அந்த சமயத்திலே சேசுநாதானவர் அப் படிக்கொத்த வியர்த்தமான காரியங்களைக் கேட்ட ஏரோதை என்கிற இராசாவுக்கும் தம்முடைய பேரிலே அனேகங் குற்றங் களைச் சுமத்திக்கொண்டு வந்த துரோகிகளான யூதர்களுக்கும் ஒரு வார்த்தையாலும் பிரத்தியுத்தாரம் சொல்லாமல் மௌன மாயிருந்தார். அப்படி சேசுநாதரானவர் மௌனமாயிருக் கிறதை மகாப்பாவியான ஏரோதை என்கிறவன் கண்டு அவனைப்

பைபித்தியங் கொண்டவனென்று விசாரித்து தனது ஊழியக்காரர் முதலான இராணுவத்தாரோடேகூட அவரை நிந்தினை பண்ணினதுமல்லாமல் அவரை முழுதும் பயித்தியக்காரன் என்று காட்டவேணுமென்கிறதற்காகப் பரிகாசமாய் ஒரு வெள்ளையான சட்டையைத் தொடுவித்துத் திரும்பப் போஞ்சியுப் பிலாத்து அண்டையிலே அனுப்பினன்.

இந்தப்பிரகாரமாகப் பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் கர்த்தனுமாய் அனந்த ஞான சொரூபியுமாயிருக்கிற சேசுநாதரானவர் கெட்ட லோகத்தினுடைய வார்த்தைகளை நாம் சட்டை பண்ணுமல் மிகுந்த பொறுமையோடேயிருந்து சகல நிந்தை அவமானங்களை அனுபவிக்கிறதிலே காண்பித்துக் கொள்ள வொண்ணுதென்று காட்டவேணும் என்கிறதற்காகத் தம்மை அனேகம் விசை பாவியென்றும், கலகக்காரனென்றும், போசனப்பிரியன் என்றும், பிசாசைக் கொண்டு இருக்கிறவனென்றும், இது முதலான பலபல அவமானங்களையும் நிந்தைகளையுஞ் சொல்லப்படாத பொறுமையோடே அனுபவித்தது மல்லாமல், இத்தறுவாயிலே தம்மைப் பைத்தியங்கொண்டவனென்று மகாப்பாவியான ஏரோதை என்கிற இராசாவானவன் விசாரித்து அப்பயித்தியக்காரனுக்கு லாஞ்சினையாக வெள்ளைச் சட்டையைத் தொடுவித்துத் திரும்பப் போஞ்சியுப் பிலாத்துவின் அண்டைக்கு அனுப்பினதற்குச் சற்றுகிலும் காண்பிச்சுக் கொள்ளாமல் எல்லாத்தையும் பரம பொறுமையோடே அனுபவித்துக்கொண்டிருந்தார். இத்தனை பொறுமையுடனே அப்படிக்கொத்த அவமானத்தை அனுபவித்துகொண்டிருந்த சேசுநாதரானவர் முகாந்திரமாகப் போஞ்சியுப் பிலாத்தென்கிறவனுக்கும் ஏரோதை என்கிறவனுக்கும் ஒரு நன்மையுண்டாச்சுது. இதெப்படியென்ருல், அவர்கள் இருவரும் அந்நாள் வரைக்கும் பரிபூரண வர்மமாயிருந்தார்கள்; இப்படி வர்மமாயிருந்த போஞ்சிப் பிலாத்தென்கிறவனும் ஏரோதை என்கிறவனும் தங்களுக்குள்ளே அன்னியவொன்னியமாய் அவன் இங்கேயும், இவன் அங்கேயும் சேசுநாதரை அனுப்பினதினலே பகை தீர்ந்து சமாதானமும் சிநேகமுமாய் இருந்தார்கள்.

[33. கற்றூணியில் கட்டுண்டு அடிப்பட்டது.]

அப்படியே போஞ்சிப் பிலாத்தென்கிறவன் தன்னண்டைக்கு ஏரோதை என்கிற இராசா திரும்ப சேசுநாதரை அனுப்பினனென்று கண்டு அவரைக் கூட்டிக்கொண்டு வந்த

பாவிகளான யூதர்களைப் பார்த்து "இந்த மனுஷனை இந்தத் தேசத்திலுள்ள சனங்களைக் கெடுக்கிறவனென்று என் கையிலே காட்டிக் கொடுத்தீர்களே, இவன்பேரிலே இதோ நீங்கள் சுமத்தின குற்றங்களுக்குள்ளே உங்கள் முன்பாக நான் இவனைக் கே[க்]கும்போது இவனிடத்திலே ஒரு குற்றமாகிலும் காணாதேபோனேனே. அப்படியும் இவனை உங்கள் கையிலே ஒப்புக் கொடுத்து எரோதை என்கிற இராசாவின் அண்டையிலே கூட்டிக்கொண்டு போகச் சொல்லி அனுப்பினேன். அனுப்பினவிடத்திலே அந்த எரோதையென்கிற இராசாவும் இவனைக் கொல்லுகிறதற்கு இவன்பேரிலே குற்றமும் காணாதபடியினாலே திரும்ப என்னண்டைக்கு அனுப்பினான்" என்று சொன்னான்.

இந்த வார்த்தை சொன்ன போஞ்சிப் பிலாத்தென்கிறவன் சேசுநாதரை விடத்தக்கதாக மனதைக் காட்டினதுமல்லாமல் அதுக்கான உபாயம் பண்ணினான். அதெப்படியென்றால், யூத சனங்கள் வருஷந்தோறும் பாஸ்குத்திருநாள் கொண்டாடுகிறபோது சிறையிலே இருக்கிற பேர்களுக்குள்ளே தங்களாலே குறிக்கப்பட்ட ஒருத்தனை விட்டுவிடவேணும் என்று துரையண்டையிலே வந்து உத்தாரங்கேட்டு விடுவிப்பார்கள் என்கிற ஆசாரத்தின்படியே, இத்தறுவாயிலே செருசலேம் என்கிற பட்டணத்திலே பாஸ்குத்திருநாளைக் கொண்டாடத்தக்கதாகக் கூடியிருக்கிற யூத சனங்களுக்குச் சிறைச்சாலையிலே இருக்கிற ஒருத்தனை துரையாகிற போஞ்சிப் பிலாததென்கிறவன் விடவேண்டியிருந்தது. அந்நாளையிலே கொலைபாதகனுமாய் அந்தப் பட்டணத்திலே ஒரு கனமான கலகம் பண்ணினவனுமாயிருக்கிற மகாப்பாவியான பராப்பை என்கிறவன் சிறைச்சாலையிலே விலங்கிலே கிடக்கிறான். இப்படி விலங்கிலே கிடக்கிற மகாப் பாவியான பராப்பை என்கிறவன்பேரிலே அந்தப் பட்டணத்திலுள்ள யூத சனங்கள் மகா வர்மமாயிருக்கிறதனாலே அவனை விட்டுவிடுகிறதற்குச் சம்மதப்படாமல் குற்றமில்லாத சேசுநாதரை விடுகிறதற்கு சம்மதிப்பார்களென்று போஞ்சிப் பிலாத்தென்கிறவன் விசாரித்துக் கூட்டமாய் வந்திருக்கிற யூத சனங்களைப் பார்த்து "உங்கள் ஆசாரத்தின்படியே இந்தப் பாஸ்குத் திருநாளிலே சிறைச்சாலையிலே இருக்கிறவர்களுக்குள்ளே ஒருத்தனை விடவேணுமே, ஆனபடியினாலே உங்களுக்கு பராப்பாவை என்கிறவனை விடுவேனோ, கிறிஸ்துவென்கிற சேசுவை விடுவேனோ" என்று கேட்டான். அப்போது சகல தோஷதுரோ

களுக்குப் பயப்படாத அந்தக்குருக்கள், கூடியிருக்கிற மற்ற யூத சனங்களோடே, 'பராப்பை என்கிறவனை விட்டுவிட்டுக் கிறிஸ்து என்கிற சேசுவை சிலுவையிலே அறைய வேணும் என்று சொல்லுங்கள்' என்று சொன்னதினாலே அந்த மதிகெட்ட சனங்கள் அவர்களுடைய துர்ப்புத்தியைக் கேட்டுக்கொண்டு போஞ்சியுப் பிலாத்தைப் பார்த்து 'எங்களுக்குப் பராப்பை என்கிறவனைவிட்டுக் கிறிஸ்து என்கிற சேசுவை சிலுவையிலே அறைந்து ஆக்கினையிட வேணும்' என்று கூப்பிட்டுச் சொன்னார்கள். அதுக்குப் போஞ்சுப் பிலாத்தென்கிறவன், 'இந்தக் கிறிஸ்துவென்கிற சேசுவை சிலுவையிலே அறைந்து ஆக்கினையிடுகிறதுக்கு அவன் செய்த குற்றமேது?' என்று கேட்டான். அப்போது அவர்கள் வேறே ஒரு பிரத்தியுத்தாரமும் சொல்லாமல் 'இவனைச் சிலுவையில் அறைந்து ஆக்கினை இடும், சிலுவையிலே அறைந்து ஆக்கினை இடும்' என்று திரும்பத்திரும்ப அதிக அதிகமாய்க் கூப்பிட்டுச் சொல்லிக்கொண்டு வந்தார்கள்.

இந்தப் பிரகாரமாகக் கூப்பிட்டுச் சொல்லிக்கொண்டு வந்த யூத சனங்கள் தங்களுக்குள்ளே அதிகமதிகமாய்க் கலகம் பண்ணிக்கொண்டு வருகிறார்களென்றும் தான் முந்தி நினைத்த உபாயம் வியர்த்தமாய்ப் போச்சுதென்றும் போஞ்சுப்பிலாத்தென்கிறவன் கண்டு, அவர்களுடைய கோபத்தை அமர்த்தவேணுமென்று அவர்களுக்குப் பராப்பை என்கிற கள்ளனை விட்டதுமல்லாமல், சேசுநாதரைத் தனது சேவகர் கையிலே ஒப்புக்கொடுத்து அடிக்கக் கட்டளையிட்டான். அப்படியே அந்த சேவகரான பேர்கள் பசாசினாலேயும் பசாசுக்கு அடிமையாயிருக்கிற யூதர்களினாலேயும் ஏவப்பட்டுக் கள்ளரை அடிக்கிற ஸ்தலத்திலே குற்றமில்லாத சேசுநாதரைக் கள்ளரைத் தள்ளுகிறாப்போலே கொண்டுபோய் அவருடைய சட்டைகளைக் கழற்றிப்போட்டு ஒரு தூணிலே இறுகக்கட்டி மகா நிஷ்டூரமாக அடிக்கத் துவக்கினார்கள். அப்படியே அவரை அடிக்கிறபோது அடிக்கிற சேவகர் தங்களுக்குள்ளே இரண்டு இரண்டு பேர் சோடாகத் தங்களுடைய கை சளிக்குமளவும் இருப்புச் சங்கிலிகளினாலேயும் வாருகளினாலேயும் முள்ளுப் பிரம்புகளினாலேயும் அடித்தார்கள் இந்தப் பிரகாரமாக ஐயாயிரத்துச்சில்லான அடிகளை சேசுநாதரை அடித்ததினாலே அவருடைய திருமேனியானது எலும்பு தெரிய, மாங்கிஷம் துண்டுதுண்டாய் அங்கங்கே தொங்கியிருந்ததுமல்லாமல், அதினின்று திரளாய்ப் புறப்பட்ட

இரத்ததிறைலே தரையானது மிகவும் நனைந்துபோச்சுது. இத்தனை நிஷ்டூரமாக சேசுநாதர் அடிபடுகிறபோது சொல்லப்படாத பொறுமையோடே பிதாவாகிய சருவேசுரனைப் பார்த்து, 'இத்தனை அடிகளைப்பட்டு மனுஷன் செய்த பாவத்துக்காக உத்தரிக்கிறேன். பாவத்தின் நிமித்தமாகப் பசாசுக்கு அடிமைப்பட்டிருக்கிற மனுஷனை மீட்க வேணுமென்று நான் அடிமைபோலே அடிமைப்பட்டு என்னுடைய காயங்களில் நின்று ஓடுகிற இந்த இரத்ததை விலையாகக் கொடுக்கிறேன்' என்று சொன்னுரென்கிறது ஒப்புக்கொள்ளத்தக்க விசேஷமாகும்.

[34. முள்முடி சூட்டப்பட்டது.]

இந்தடவாக நிஷ்டூரமுள்ள சேவகர் சொல்லப்பட்ட பிரகாரமாக சேசுநாதரை அடித்துத் தவித்துப்போனதற்குப் பிற்பாடு, தூணிலே கட்டப்பட்டிருக்கிறவரை அவிழ்த்தார்கள். ஆனபடியினுலே சேசுநாதரானவர் அந்த சேவகர் கழற்றிப் போட்ட தம்முடைய சட்டைகளைத் திரும்பத் தொட்டுக்கொண்டார். இப்படித் தமது சட்டைகளைத் தொட்டுக்கொண்ட சேசுநாதரை நிஷ்டூரரான சேவகர் அடிகள் நிமித்தமாகப் படுத்தின கஸ்தி நோவுகளை போராதென்று விசாரித்து, இன்னும் அவமானத்தோடே கஸ்தி நோவுகளைப் படுத்த வேணுமென்று துணிந்து அவர் தொட்டுக்கொண்ட சட்டையைத் திரும்பக் கழற்றி அவரை யூதர்களுக்கு இராசாவென்று பரிகாசமாகச் சொல்லி மிகுந்த அவமானத்தோடே அவரை பரிகாசம் பண்ணவேணுமென்கிறதற்காக ஒரு இடத்திலே இருக்கப்பண்ணி அந்தத் தேசத்து இராசாக்களுக்கு லாஞ்சனையாக இருக்கிற ஒருவகையுள்ள சிவப்புச் சால்வையை அவர்மேலே போர்த்தினதற்குப் பிற்பாடு, மிகவும் கூர்மையுள்ள முள்ளுகளினுலே ஒரு முடி பின்னி அவருடைய திருத்தலையிலே வைத்து அழுத்தினதினுலே பலபல முள்ளுகள் பதியத் தைத்து எண்ணப்படாத கஸ்தி நோவுகளோடேகூடத் தைத்திருக்கிற துவாரங்களில் நின்று இரத்தமானது திரளாய் வடிந்து விழுந்தது.

இராசாவுக்கு உண்டான செங்கோலுக்கு அடையாளமாக ஒரு மூங்கில் தடியை அவருடைய வலதுகையிலே கொடுத்தார்கள். இந்தப்பிரகாரமாக இராசாவுக்கு லாஞ்சனையாகிற சிவப்புச் சால்வையும் முடியும் செங்கோலும் கொண்டிருக்கிற சேசுநாதரை அந்தப் பாவிகளான சேவகர் பலபல விதமுள்ள

அவமானங்களோடே பரிகாசம் பண்ணிக்கொண்டு வந்தார்களே. அதெப்படியென்றால், அந்த சேவகருக்குள்ளே சிலர் ஒரு காலினாலே மாத்திரம் முழங்காலிலேயிருந்து சேசுநாதரைப் பார்த்து "யூதர்களுக்கு இராசாவே, நமஸ்காரம்" என்று சொல்லி அவரைக் கன்னத்திலே அடிப்பார்கள். சிலர் "யூதர்களுக்கு இராசாவே, வாழ்க" என்று பரிகாசமாகச் சொல்லி அவருடைய திருமுகத்திலே துப்புவார்கள். சிலர் கையிலே இருக்கிற மூங்கில் தடியை வாங்கி அத்தாலே அவருடைய திருத்தலையிலே அடிப்பார்கள். இது முதலான அவமானங்களையும் கஸ்தி நோவுகளையுஞ் சேசுநாதரைப் படுத்தினார்கள். இப்படிக்கொத்த அவமானங்களையுங் கஸ்தி நோவுகளையும் அனுபவிக்கிற போது சற்றாகிலும் ஐயோவென்று சொல்லாமல், மனுஷருக்கு ஈடேற்றமுண்டாகும்படிக்கு அந்த அவமானங்களையும், கஸ்தி நோவுகளை யெல்லாம் பிதாவாகிய சருவேசுரனுடைய சந்நதியிலே ஒப்புக்கொடுத்தார். ஆனால் இத்தனை அடிகளையும், அவமானம் கஸ்தி நோவுகளையும் அனுபவித்த சேசுநாதருடைய அழகுள்ள வடிவானது மிகவும் பேதிக்கப்பட்டது. அதெப்படியென்றால், சேசுநாதருடைய திருமுகமானது தலையின் நின்று வடிந்து விழுந்த இரத்தத்தினாலே சிவந்து, அடிகள் பட்டதினாலே வீங்கியும் உமிழ் நீர்களினாலே அழுக்கடைசி வேற்றுமுகமாகக் காண்பித்திருந்தது. இப்படிக்கொத்த சுரூபத்தைக் கொண்டிருக்கிற சேசுநாதரை அந்த நிஷ்டூரமான சேவகர் போஞ்சியு பிலாத்தண்டையிலே கூட்டிக்கொண்டு போய் விட்டார்கள்.

[35. பிலாத்தென்பவன் இட்ட அநியாயமான தீர்வை]

அப்போது போஞ்சிப் பிலாத்தென்கிறவன் சேசுநாதரைப் பார்த்து மனதிரங்கி, யூதர்களும் சேசுநாதர்பேரிலே இரக்கமாயிருந்து அவரை ஆக்கினையிடுகிறதற்குச் சம்மதப்படமாட்டார்களென்று விசாரித்து, அந்த யூதர்களெல்லாரும் கூடியிருக்கிற தனது அரண்மனைக்குப் புறத்தியில் அவர்கள் காண அடிபட்டவருமாய், முள்முடி அறையப்பட்டவருமாய், சிவப்புப்பட்டுச் சால்வை போர்த்திருக்கிறவருமாயிருக்கிற சேசுநாதரைக் கூட்டிக்கொண்டு போய் அவர்களைப் பார்த்து "நான் இவனை ஆக்கினையிடுகிறதுக்கு இவ்விடத்திலே ஒரு குற்றமும் காணேன். இதை நீங்கள் அறியவேணும் என்கிறதற்காக இதோ இவனை உங்கள் அண்டையிலே கூட்டிக்கொண்டு வந்தேன்" என்று அந்த வேஷத்தோடேயிருக்கிற சேசுநாதரைக் காண்பித்து,

'இதோ மனுஷன்' என்று சொன்னான். இப்படிக்கொத்த வார்த்தைகளைப் பொல்லாதகுருக்கள் முதலான யூதர்கள் கேட்டதினாலேயும் மகா இரக்கமுள்ள வேஷத்தோடே யிருக்கிற சேசுநாதரைப் பார்த்ததினாலேயுஞ் சற்றாகிலும் இரக்கமாயிராமல், மிகுந்த வர்மத்தோடே போஞ்சிப் பிலாத்தென்கிறவனைப் பார்த்து "இவன் இவ்வுலகத்திலே இராதபடிக்கு இவனைச் சிலுவையிலே அறைந்து ஆக்கினை இடும்" என்று திரும்பத் திரும்ப வெகுவாய்க் கூப்பிட்டுச் சொன்னார்கள். அதுக்குப் போஞ்சிப்பிலாத்தென்கிறவன், 'இப்படி ஆக்கினை இடுகிறதற்கு இவனபேரிலே குற்றமேது' என்று கேள்கக் கேள்கத் தோஷத் துரோகத்துக்குப் பயப்படாத அந்தப் பொல்லாத யூதர்கள், 'இவனை சிலுவையிலே அறைய வேணும்' என்று அதிகமதிகமாகக் கூப்பிட்டுச் சொல்லிக்கொண்டு வந்தார்கள்.

அப்படிக்கொத்த பாவிகளுடைய வர்மமுள்ள சத்தத்தைப் போஞ்சிப் பிலாத்தென்கிறவன மனசிலே கண்டு யூதர்களைப் பார்த்து நீங்கள்தானே இவனை ஒப்புக்கொண்டு சிலுவையிலே அறையுங்கள் என்று மனஸ்தாபத்தோடே சொன்னான். அதுக்குப் பாவிகளான குருக்கள் முதலான யூதர்கள், 'எங்களுக்கு வேதம் உண்டு, அந்த வேத கற்பனையின்படியே இவன் சாகவேணும், அதேனென்றால், தன்னைச் சருவேசுரனுடைய சுதனென்று சொல்லிக்கொண்டு வந்தான்' என்று சொன்னார்கள். அந்த விசேஷத்தை போஞ்சிப் பிலாத்தென்கிறவன் கேட்டு மிகவும் பயந்தான். ஆனபடியினாலே திரும்பத் தனது அரண்மனைக்குள்ளே போய்த தன் அண்டையிலே சேசுநாதரை அழைத்து "நீ எங்கித்தியான்?" என்று கேட்டான். அதுக்குச் சேசுநாதரானவர் பிரத்தியுத்தாரம் சொல்லாமலிருந்தார். இப்படிப் பிரத்தியுத்தாரஞ் சொல்லாமலிருந்த சேசுநாதரைப் பார்த்து போஞ்சிப்பிலாத்து 'நான் கேட்டதற்கு நீ மறுவுத்தாரஞ் சொல்லாமலிருக்கிறாயோ, உன்னை நான் சிலுவையிலே அறைகிறதற்கும், ஆக்கினைபண்ணாமல் விடுகிறதற்கும் நான் வல்லவனாய் இருக்கிறேன் என்று நீ அறியாயோ என்று சொன்னான். அதுக்குச் சேசுநாதரானவர்' நான் பாடுபடுகிறதற்கு மேலான திருவுளத்துக்கு ஒததிருக்கக்கொள்ள, என்னைக் கஸ்திப்படுத்த உனக்குக் கூடுமொழிய மற்றப்படியல்ல. ஆனால் என்னை உன் கையிலே காட்டிக்கொடுத்த பேர்களுடைய பாவமானது உன்னுடைய பாவத்தைக் காட்டிலும் கனமான பாவமாய் இருக்கிறதென்று அருளிச்செய்தார்.

இப்படி சேசுநாதரானவர் அருளிச்செய்ததைப் போஞ்சியுப் பிலாத்து என்கிறவன் கேட்டு அவரை விடத்தக்கதாகப் பார்த்தான். அப்போது அந்தப் பொல்லாத பாவிகளான யூதர்கள் போஞ்சிப் பிலாத்தென்கிறவன் நினைத்த காரியத்தை அறிந்ததினுலே, அவனைப்பார்த்து, 'இயாதொருத்தன் தன்னை இராசாவென்று சொன்னுல் அவன் சேசாரென்கிற ரோமாபுரி இராயனுக்கு விரோதியா யிருக்கிறுன் என்கிறதற்குச் சந்தேகமில்லையே. ஆனபடியினுலே நீ அவனை விட்டாயானுல், ரோமாபுரி இராயன் பேரிலே விசுவாச பத்தியுள்ளவனு யிருக்கமாட்டாய்' என்று சொன்னுர்கள். இந்த விசேஷத்தைப் போஞ்சிப் பிலாதென்கிறவன் கேட்டு சேசுநாதரைக் கொன்றுபோடாதிருந்தால் இதின் நிமித்தமாகத் தனத் துரைத்தனம் முதலான ஐசுவரிய வெகுமானங்களெல்லாம் போமென்று பயந்து, பாவிகளான யூதர்களுடைய மனதின்படியே சேசுநாதரைச் சிலுவையிலே அறைந்து கொல்லத்தக்கதாகத் தீர்வை சொல்லத் துணிந்தான்.

இப்படிப் போஞ்சிப் பிலாத்தென்கிறவன் துணிந்திருக்கிற சமயததிலே அவனுடைய ஸ்திரியானவள் அவன் அண்டைக்கு ஒரு ஆள்விட்டுச் சொல்லியனுப்பின விசேஷமாவது: 'குற்றமில்லாமலிருக்கிற இப்படிப்பட்ட மகாத்துமாவுக்கும் உமக்கும் காரியமேது? இவரை ஆக்கினை இடுகிறதுக்கு நீர் சம்மதப்படவேண்டாம். அதேதென்றுல் இவருடைய நிமித்தம இன்று இராத்திரி சொப்பனத்திலே மகாமகாப்பட்ட கஸ்தி வாதைகளை அனுபவித்தேன்" என்று சொல்லியனுப்பினுன். இந்தப்பிரகாரமாகத் தன்னுடைய ஸ்திரியானவள் சொல்லியனுப்பின இந்த விசேஷததை போஞ்சிப் பிலாத்தென்கிறவன கேட்டதினுலே பயந்திருந்தாலும் அதைக்காட்டிலும் அநதப்பாவிகளான யூதர்களுக்குப் பயந்து குற்றமில்லாத சேசுநாதர்பேரிலே அனேகங் குற்றங்களைச் சுமத்தி அவரைச் சிலுவையிலே அறையத்தக்கதாக அவன் அநியாயமான தீர்வையிட்டான்.

ஆனுல் போஞ்சிப் பிலாத்தென்கிறவன் தான் இட்ட இப்படிக்கொத்த தீர்வையானது மகா அநியாயமான தீர்வையாயிருக்கிறதென்று சொல்லி, யூதர்கள் எல்லாரும் கேட்டுக்கொண்டிருக்கையிலே, 'பாவமில்லாத இந்த மனுஷனுடைய இரத்தமானது சிந்துகிறதற்கு என் பேரிலே குற்றமில்லை' என்று கை கழுவினுன். இப்படிப் போஞ்சிப் பிலாத்தென்கிறவன் சொன்

னதற்கு அந்தத்துரோகிகளான குருக்கள் முதலான யூதர்கள் எல்லாரும், 'இவனுடைய இரத்தத்தின் பழியானது எங்கள் பேரிலேயும் எங்கள் பிள்ளைகள் பேரிலேயும் சுமக்கக்கடவது' என்று சொன்னார்கள். அவர்கள் இப்படிச் சொன்னதற்குப் பிற்பாடு சேசுநாதரைச் சிலுவையிலே அறைந்து ஆக்கினை இடத்தக்கதாக அவர்கள் கையிலே ஒப்புக்கொடுத்துப்போனான்.

[36 சிலுவை சுமந்ததின் பேரில்]

அப்படியே அந்தப்பொல்லாத குருக்கள் முதலான யூதர்கள் சேசுநாதரைத் தங்கள் வசமாக ஒப்புக்கொண்டு எல்லாரும் இவரை இன்னாரென்று கண்டுபிடிக்க வேணுமென்கிறதற்காக அவர்பேரிலே போர்த்தியிருக்கிற சிவப்புப்பட்டுச் சால்வையை வாங்கிப்போட்டு, அவர் எப்போதும் தொட்டுக்கொண்டிருந்த சட்டைகளைத் திரும்பத் தொடுவிச்சு, லோகத்தினுடைய சகலமான பாவங்களாகிற பாரத்தைக்கொண்டிருக்கிற சிலுவை மரத்தைப் பலபல காயங்களினாலே நொந்திருக்கிற அவருடைய திருத்தோளின்மேலே ஏற்றிச் சுமக்கப்பண்ணினார்கள். இந்தப் பிரகாரமாகச் சேசுநாதரானவர் தமது திருத்தலையிலே அறைந்திருக்கிற முள்முடியோடேகூடத் தமது தோளின்மேலே ஏற்றியிருக்கிற சிலுவை மரத்தைச் சுமந்துகொண்டு கபால மலைக்குப் போற வழியிலே நடந்தார். அப்படி நடந்துபோற சேசுநாதரைத் தலையாரி முதலான சேவகர் சூழ்ந்துகொண்டுபோக, 'இவன் ரோமாபுரி இராயனுக்குத் துரோகியாயிருக்கிறதினாலே இவனைச் சிலுவையிலே அறையக் கூட்டிக்கொண்டுபோகிறோம்' என்று ஒருத்தன் தாரை ஊதிக்கொண்டு சொல்லி முந்திப்போக, அந்த துரோகிகளான யூதர்கள் சந்தோஷமாய்க் கொக்கரித்துக்கொண்டு சேசுநாதருக்கு முன்னும் பின்னுமாய் நடந்துகொண்டு போக, இந்தப்பிரகாரமாக சேசுநாதரானவர் பலியாகப் போகிற செம்மறியாட்டுக்குட்டியைப்போலவே வாய் திறவாமல் சிலுவை சுமந்துகொண்டு போகிற சமயத்திலே, சில பெண்பிள்ளைகள் அவரை அநியாயமாய் பாடுபடுத்தி ஆக்கினை இடப்போறதைப் பார்த்து மனதிரங்கி அழுதுகொண்டு அவர் பிறகே போனார்கள். இப்படி அவர்கள் அழுதுகொண்டு போகச்செய்தே, சேசுநாதர் அவர்களைப் பார்த்து 'செருசலேம் என்கிற பட்டணத்திலுள்ள ஸ்திரிசனங்களே, எனக்காக அழவேண்டாம். உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்: அதேதென்றால், பிள்ளையில்லாத மலடிகளும் பிள்ளை பெறாமல் இருக்கிற ஸ்திரி

களும் பாக்கியவதிகள் என்று சொல்லத்தக்க நாள் வரும். அந்த நாளையிலே மலைகளையும் கரடுகளையும் பார்த்து 'மலைகளே எங்கள் பேரிலே விழுங்கள்' என்றும், 'கறடுகளே எங்களை மூடுங்கள்' என்றும் சொல்லத் துவக்குவார்கள். அதேனென்றால், பச்சை மரத்திலே இதுகளைச் செய்கிறார்களேயானால், பட்டமரத்திலே என்ன செய்யப்படும்?" என்று திருவுளம்பற்றினார். இப்படிக் கொத்த வசனத்தை சேசுநாதரானவர் திருவுளம்பற்றினதற்குப் பிற்பாடு சுமந்துகொண்டு போற சிலுவையினுடைய பாரத்தினாலே அடிக்கடி விழுந்தும் எழுந்திருந்தும் வருகிறாரென்று நிஷ்டூரமான யூதர்கள் கண்டு சேசுநாதர் வழியிலே மரணத்தை அடைந்தால் இவரைச் சிலுவையிலே அறையக்கூடாதென்று சந்தேகப்பட்டுப் பட்டிக்காட்டிலேயிருந்து எதிராக வந்த சீமோன் சிரிநோ என்கிற பேருள்ள ஒருத்தனைப் பிடித்து அவருடைய தோளின்மேலே இருக்கிற சிலுவையை அவன் சுமந்துகொண்டு போகப்பண்ணினார்கள்.

இத்தருவாயிலே, சேசுநாதர் பிறகே அழுதுகொண்டு போன முன் சொல்லப்பட்ட ஸ்திரி சனங்களுக்குள்ளே வீரோனிக்கவென்கிற பேருள்ள ஒரு புண்ணியவதி சேசுநாதர் மகா இளைப்போடே போறதைக்கண்டு தனது தலைமேலே முக்காடுபோட்டுக்கொண்டிருக்கிற சீலையை வாங்கி அவருடைய திருமுகத்திலே ஓடுகிற இரத்தத்தையும், வேர்வையையும் துடைக்கத்தக்கதாக அவர் கையிலே கொடுத்தாள். அப்படியே சேசுநாதரானவர் அந்தச் சீலையைக்கொண்டு தம்முடைய திருமுகத்தைத் துடைத்து, ஓடுகிற இரத்தத்தினாலேயும் வேர்வையினாலேயும் தம்முடைய திருமுகத்தின் சுரூபத்தை அச்சிலே பதித்தாற்போலே அந்தச் சீலையிலே பதியப்பண்ணி, அதை அவள் கையிலே திரும்பக்கொடுத்தார். அப்படியே சேசுநாதருடைய திருமுகத்தின் சுரூபத்தைக் கொண்டிருக்கிற அந்தச் சீலையானது இந்நாள் வரைக்கும் உரோமாபுரியிலே அர்ச். இராயப்பர் கோவிலிலே பதனம்பண்ணிக்கொண்டு வந்து அக்கோவிலிலே பார்க்க வருகிற சனங்களுக்கு மகாப் பூச்சியமாகக் காட்டுவார்கள்.

அத்தருவாயிலே, பரி. கன்னி. அர்ச். மரியவென்கிறவள் தம்முடைய திருக்குமாரன் அத்தனை அவமானத்தோடே சிலுவையிலே அறைந்து ஆக்கினை இடத்தக்கதாக அந்தப் பாவி

களான யூதர்கள் இழுத்துக்கொண்டு போகுறார்கள் என்கிற விசேஷத்தைக் கேட்டதினாலே சொல்லப்படாத வியாகுலத்தை அனுபவித்துக்கொண்டு இருந்தாள். ஆனால் அவர் மரணத்தை அடைகிறதற்கு முந்தி அவரைப் பார்க்கவேணுமென்று மகா ஆசையாயிருந்து புறப்பட்டு அவருடைய திருஇரத்தமானது அங்கங்கே சிந்தின அடையாளத்தைப் பார்த்து, அவரை இழுத்துக்கொண்டுபோற அந்தப் பாவிகளுடைய ஆரபாரமான சததங்களையும் கேட்டு, அவரைப் பின்தொடர்ந்துகொண்டு போனாள். இத்தனை வியாகுலத்தோடே தம்முடைய திருக்குமாரனைப் பின்தொடர்ந்துகொண்டுபோன பரி. கன்னி. அர்ச். மாதாவானவள் கடைசியாய் அவரைக் கண்டாள். கண்டவுடனே அவள் அனுபவித்த வாதை நோவுகளினாலேயும் அவருடைய திருமுகத்திலே ஓடுகிற இரத்தத்தினாலேயும் வேர்வையினாலேயும் அவருடைய சௌந்தரியமானது பேதிக்கப்பட்டு முகம் வேற்றுமுகமா யிருக்கக்கொள்ள அதிகமான வியாகுலப்பட்டதின் நிமித்தமாகத் தம்முடைய வாக்கினாலே அவரோடே பேசமாட்டாமல், மனதினாலே மாத்திரம் பேசினாள். இப்படியே பேசின தம்முடைய அர்ச். மாதாவினுடைய பார்வையினாலே நவமான கஸ்தி வாதைகளை அனுபவித்த சேசுநாதரை அந்தப் பாவிகளான யூதர்கள் கபாலமலையிலே கூட்டிக்கொண்டு போய் அந்த மலையிலே அவரைச் சிலுவையிலே அறைய வேணுமென்று ஆயத்தப்பட்டார்கள்.

அந்தக் கபாலமலைக்கும் சேசுநாதர் சிலுவை சுமந்துகொண்டு புறப்பட்ட போஞ்சிப்பிலாத்துவின் அரண்மனைக்கும் எத்தனைத் தூரமென்றால் அது தப்படிக் கணக்கிலே[1] ஆயிரத்திருபது தப்படியும் அடிக் கணக்கிலே மூவாயிரத்து முந்நூற்று மூன்றடியும் உண்டாயிருந்ததென்று கண்டதினாலே எழுதி வைத்தார்கள். இத்தனை தூரஞ் சொல்லப்பட்ட கஸ்தி வாதைகளோடே நடந்த சேசுநாதரை, இரக்கமில்லாத அந்தத் துரோகி யூதர்கள் சிலுவையிலே அறைகிறதற்கு முந்தி அவர் பேரிலே தங்களுக்குண்டான வர்மத்தை அதிகமாகக் காட்ட வேணுமென்று சிலுவையிலே அறையுண்டு ஆக்கினை அனுபவிக்கிற பேர்களுக்கு ஆறுதல் உண்டாகும்படிக்குச் செய்யும் முறையாக மீறையோடே கலந்திருக்கிற முந்திரிகைப் பழத்தின் இரசத்தைக் குடிக்கக்கொடாமல் மீறையோடே கலந்திருக்கிற

[1] தப்படி: தாண்டல், ஐந்தடி.

முந்திரிகைப் பழத்தின் ரசத்திலே பிச்சுக் கலந்து அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள். அப்போது நமக்காகப் பாடுபடுகிற தற்கு மாத்திரம் ஆசையுள்ள சேசுநாதரானவர் அந்த இரசத்தைக் குடியாமல் அத்தோடே பிச்சினுடையக சப்பினாலே தம்முடைய அர்ச்சியசிஷ்ட வாய்க்கு வாதை உண்டாகு மென்கிறதற்கு மாத்திரம் ருசி பார்க்கிற மேரையாக அந்த இரசத்திலே கொஞ்சம் உட்கொண்டு மற்றதை வேண்டா மென்று திருவுளம்பற்றினர்.

இதற்குப் பிற்பாடு நிஷ்டுரமுள்ள அந்தப் பாவிகள் சேசு நாதருடைய தலையிலே அறைந்திருக்கிற முள்முடியை வாங்கி அவருடைய தலையிலே வைத்து அமுக்கினார்கள். இதினிமித்த மாக சேசுநாதருக்கு அதிகமான கஸ்தி நோவுகள் வந்தது. அதெப்படி யென்றால், சேசுநாதருடைய தலையிலே அறைந் திருக்கிற முள்முடியை வாங்கித் திரும்ப வைத்து அமுக்கின தினாலேயும், அவருடைய திருமேனியிலே முந்திப் பட்ட காயங் களோடே தொட்டிருந்த சட்டைகளைக் கழற்றினதினாலேயும் அவருடைய திருத்தலையிலேயும் சரீரத்திலேயும் நவமான காயங் கள் உண்டாய் அதுகளிலே நின்று நதி போலே இரத்தம் ஓடத் துவக்கிற்றது. இதெல்லாத்தையுந் துக்கத்திலே அமிழ்திருக்கிற அர்ச். தேவமாதாவானவள் பார்த்துக் கரைகாணாத சமுத்திரத் துக்குச் சரியாயிருக்கிற அப்படிக்கொத்த துக்கத்தை அனுபவித் தாலும் மிகுந்த பொறுமையோடே சகித்துக்கொண்டு பிதா வாகிய சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தாள்.

[37. சிலுவையில் அறைந்ததும் திருமரணமும்]

இத்தனை காயங்களினாலே மிகவும் நொந்திருக்கிற சேசு நாதரானவர் தரையிலே போட்டிருக்கிற சிலுவை மரத்திலே மனுஷனுக்காக அறையப்படுகிறதற்கு அதின் மேலே முழுமன தோடே படுத்துக்கொண்டதற்குப் பிற்பாடு, அந்த நிஷ்டூரமுள்ள சேவகர் கை கால்களிலே கூர்மையுள்ள பெரிய ஆணிகளை அறைந்தார்கள். இப்படியே நிஷ்டூரமுள்ள அந்தப் பொல்லாத பாவிகள் தம்மைச் சிலுவையிலே அறைகிற போது அனேகம் பேர் கேட்டுக்கொண்டிருக்கையிலே பிதாவாகிய சருவேசுரனைப் பார்த்து சேசுநாதரானவர் திருவுளம்பற்றின வசனமாவது: "பிதாவே இவர்கள் தாங்கள் செய்கிறதை இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள் என்கிறதினாலே இவர்களுடைய

பாவத்தைப் பொறும்" என்று சொல்லித் தம்மைச் சிலுவையிலே அறைந்த பேர்கள் முதலான சத்துருக்களுக்காக வேண்டிக் கொண்டார்.

இப்படித் தம்முடைய சத்துருக்களுக்காக வேண்டிக் கொண்ட சேசுநாதரானவர் வெள்ளிக்கிழமைநாள் ஏறக்குறைய மத்தியானத்திலே சிலுவையிலே அறையத் துவக்கினவுடனே சூரியனுக்குப் பிரகாசம் இல்லாமல் உடனே பூலோகம் எங்கும் இருட்டாயிருந்தது. இப்படிக்கொத்த சூரிய கிரணமானது சுபாவமாய் அமாவாசை நாளிலே வருமென்கிறதினாலே பௌர்ணமி நாளாயிருக்கிற அந்த வெள்ளிக்கிழமையிலே கிரணம் வந்ததினாலே மகாக்கனமான புதுமையாயிருந்தது. இது நிமித்தமாக அந்த சமயத்திலே எகிப்து தேசத்திலே அக்கியானியாயிருக்கிற மகா வித்தியாபாரகனாகிற [1]அறையோப்பசித் தீயோநிசியு வென்கிறவன் அப்படிக்கொத்த அந்தகாரத்தைக் கண்டதினாலே சொன்ன வார்த்தையானது: "ஒன்றில் சகலத்துக்கும் ஆதிகாரணமான கர்த்தரானவர் பாடுபடவேணும், ஒன்றில் உலோகமென்னப்பட்டதெல்லாம் கெட வேணும்" என்று சொன்னான். அப்படிக்கொத்த புதுமையான கிராணந் துவக்கினதற்குப் பிற்பாடு அந்தப் பாவிகளான சேவகர் சேசுநாதர் அறையுண்டிருக்கிற சிலுவை மரத்தைக் கெல்லியிருக்கிற குழியிலே விட்டு நிறுத்தி நாட்டினார்கள். அப்படி அந்த சிலுவை மரத்தைக் குழியிலே விடுகிற போது, அதினுடைய அசைவினாலே அதிலே தொங்கியிருக்கிற சேசுநாதருடைய சரீரத்துக்கு வந்த கஸ்தி நோவுகள் சொல்லக்கூடாது.

இந்தப்பிரகாரமாக சேசுநாதர் அறையுண்டிருக்கிற சிலுவை மரத்தை நாட்டினதற்குப் பிற்பாடு, போஞ்சிப் பிலாத்தென்கிறவன் தான் சேசுநாதரை ஆக்கினையிட்டதற்குக் காரணத்தை எல்லாரும் அறியவேணும் என்கிறதற்காக எபிரேய பாஷையிலேயும், கிரேக்க பாஷையிலேயும், லத்தீன் பாஷையிலேயும் இந்த மூன்று வகைப் பாஷையிலேயும் "**நசரேனு சேசு, யூதர்களுக்கு இராசா**" என்கிற வாசகத்தை ஒரு பலகையிலே எழுதி அந்த சிலுவை மரத்தின் தலைப்பிலே வைப்பித்தான். இந்த வாசகத்தைப்[2]... பாவிகளுக்குத் தலையான பாவியாயிருக்கிறார் என்று காட்டவேணுமென்கிறதற்காகச் சிலுவையிலே அறை

[1]Dionysius the Areopagite [2]ஏதோ விடுபட்டிருக்கிறது

யுண்டிருக்கிற அவருடைய வலது பக்கத்திலேயும், இடது பக்கத்திலேயும் இரண்டு கள்ளரைச் சிலுவையிலே அறையப்பண்ணி நாட்டினார்கள். அந்த சமயத்திலே சேசுநாதரைச் சிலுவையிலே அறைந்த நாலு சேவகர் அவருடைய சட்டைகளைத் தங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ள வேணுமென்று இருந்தார்கள். அப்படியே சேசுநாதர் தொட்டுக்கொண்டிருந்த இரண்டு சட்டைகளின் மேல்சட்டையை நாலு பங்காய்ப் பிரித்து அந்த நாலுபேரும் எடுத்துக்கொண்டார்கள். மற்ற உள்சட்டையானது தையல் இல்லாமல் நெய்த சட்டையாயிருந்தபடியினாலே அதைக் கிழிக்க வொண்ணாதென்று அந்த நாலுபேரும் தங்களுக்குள்ளே பேசிக்கொண்டு அது யாருக்கு வருமென்று பாச்சிக்கை[1] போடச் சம்மதித்தார்கள். இந்தப் பிரகாரமாகப் பாச்சிக்கை போட்டுச் செயித்தவன் அந்தச் சட்டையை எடுத்துக்கொண்டான்.

மற்றப் பாவிகளான யூதர்களோவென்றால், அவர்களுக்குள்ளே சிலர் இரண்டு கள்ளருக்கு நடுவிலே சிலுவையிலே அறையுண்டிருக்கிற சேசுநாதருக்கு எதிராக நின்று தலையை அசைத்துக்கொண்டு அவரைப் பார்த்து "அடா, சருவேசுரனுடைய கோவிலை இடித்து மூன்று நாளைக்குள்ளே திரும்பக் கட்டுவேன் என்று சொன்னாயே, அப்படிச்சொன்ன நீ, சிலுவையை விட்டிறங்கி உன்னை இரட்சித்துக்கொள்" என்று சொல்லுவார்கள். தங்களுக்குள்ளே ஒருத்தன் ஒருத்தனைப் பார்த்து, "இவன் அவனவனை இரட்சித்துக்கொண்டு வந்தானே, இப்போது தன்னை ரட்சித்துக்கொள்ள மாட்டாதே போனான். பின்னையும் தன்னை சருவேசுரனுடைய சுதனாயிருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு வந்தானே, இவனுக்குப் பிதாவாகிய சருவேசுரன் இவனை இரட்சிக்கவில்லை. நாம் பார்த்துக் கொண்டிருக்கையிலே இப்போச் சிலுவையிலே இருந்து இறங்கினால் இவனை சருவேசுரனுடைய சுதனாகிய கிறிஸ்துவென்று விசுவாசிப்போம்" என்று சொன்னார்கள்.

இது முதலான அனேகந் தூஷணங்களைச் சொல்ல, [[2]சேசுநாதருடைய இரண்டு பாரிசத்திலேயும் அறையுண்டிருக்கிற கள்ளர் கேட்கும்போது இடது பாரிசத்தில் உள்ள கள்ளனைவன் கர்த்தரை வைய] வேணுமென்று அவரைப் பார்த்து "நீ

[1] சூதாடு கருவி [2] IIIம் காண்டம்' 23ம் பாடத்திலிருந்து

மெய்யாகவே கிறிஸ்துவாயிருந்தாயானால் உன்னையும் எங்களையும் இரக்ஷித்துகொள்" என்று சொன்னான். இந்த தூஷணத்தை வலது பக்கத்திலே சிலுவையிலே அறையுண்டிருக்கிற கள்ளன் கேட்டுச் "சிலுவையிலே அறையுண்டு ஆக்கினையை அனுப வித்துக்கொண்டிருக்கிற நீ முதலாய் சருவேசுரனுக்குப் பயப் படாமல் இருக்கிறாயோ? நாம் இரண்டுபேரும் செய்த பாவங் களுக்குத்தக்க ஆக்கினையை அனுபவிக்கிறதற்குச் சந்தேகமில்லை. ஆனால் இவர் ஒரு குற்றமானாலுஞ் செய்யவில்லையே" என்று சொன்னதற்குப் பிற்பாடு சேசுநாதரைப் பார்த்து "சுவாமி தேவரீர் உம்முடைய இராச்சியத்திலே எழுந்தருளுகிறபோது என்னை நினைத்தருளும்" என்று விண்ணப்பஞ் செய்தான். அப்படி விண்ணப்பஞ் செய்த இந்த நல்ல கள்ளனைச் சேசுநாதர் பார்த்து "உனக்கு மெய்யாகவே சொல்லுகிறேன், இன்று தானே நம்மோடேகூட மோட்சத்திலே இருப்பாய்" என்று அருளிச் செய்தார்.

இந்தப் பிரகாரத்திலே சேசுநாதருடைய திருவரப்பிரசாதத் தைக்கொண்டிருக்கிற பாக்கியமுள்ள கள்ளனானவன் அவர் பேரிலே பூரண விசுவாசமாய் இருந்து அவரை மெய்யான சருவேசுரன் என்று சொல்லிக் காட்டுகிறபோது, சேசுநாதரை அறிந்த பேர்கள் முதலான பெந்துசனங்கள் மிகுந்த பயத் தோடே தூரத்திலே அவருக்கு எதிராக அவரைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் இப்படித் தூரத்திலே நின்று பார்த்துக்கொண்டிருக்கையிலே கரை காணாத சமுத் திரத்துக்குச் சரியான துக்கத்திலே அமிழ்ந்தியிருக்கிற அர்ச். மாதாவானவளும், சலோமை மரியவென்கிறவளும் சேசு நாதருக்குப் பிரிய சீஷனாயிருக்கிற அருளப்பரென்கிறவரும் சேசுநாதர் அறையுண்டிருக்கிற சிலுவையின்கிட்ட நின்றார்கள்.

இப்படி நிற்கிறபோது பரி. கன்னி. அர்ச். மாதாவானவள் தம்முடைய திருக்குமாரனான சேசுநாதர் தம்மைச் சிலுவையிலே அறைந்தபேர்கள் முதலான சத்துருக்களுக்காகப் பிதாவாகிய சருவேசுரனை வேண்டிக்கொண்டதையும், பாக்கியமுள்ள கள்ளனுக்கு அருளிச்செய்த வார்த்தைகளையும் கேட்டு மிகவும் நொந்திருக்கிற மனசுள்ள தமக்கு அவர் ஒரு வார்த்தை சொல்ல வேணுமென்று ஆசையாயிருந்து சொரிந்து விழுகிற கண்ணீர்களுடைய இரண்டூற்றுகளாகிற தம்முடைய கண் களினாலே அவரை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருப்பாள்.

இந்தப்பிரகாரமாகத் தம்மைப்பார்த்துக் கொண்டிருக்கிற தம்முடைய பரிசுத்த மாதாவின் சொல்லப்படாத துக்கத்தை நன்ருய் அறிந்திருக்கிற சேசுநாதரானவர் அத்தறுவாயிலே அவளுக்குண்டான ஆசையைப்பார்த்து ஆறுதலான வார்த்தைச் சொல்லத் திருவுளமானுர். ஆனுல் அவளைப்பார்த்துத் தாய் என்று சொன்னுல் அவளுக்கதிகமான துக்கம் வருமென்று [நினைத்து] அவளைத் தாயென்று அழைக்காமல், தம்முடைய பிரிய சீஷன் கிட்ட இருக்கையிலே அவளைப்பார்த்து "பெண்ணுய் பிறந்தவளே, இதோ உன்னுடைய குமாரன்" என்றும், அந்தப் பிரிய சீஷனைப்பார்த்து "இதோ உன்னுடைய மாதா" என்றும் திருவுளம்பற்றினுர்.

இப்படித் திருவுளம்பற்றின சேசுநாதரானவர் அத்தறுவாயிலே மிகவும் நொந்திருக்கிற தம்முடைய பரிசுத்த மாதாவுக்குக்கூடினமாத்திரம் ஆறுதல் சொன்னதற்குப் பிற்பாடு தாம் தேவ சுபாவத்தையும் மனுஷ சுபாவத்தையும் கொண்டிருந்து தம்முடைய மனுஷ சுபாவத்திலே அனுபவித்துக் கொண்டுவருகிற கஸ்தி நோவுகள் காண்பியாதபடிக்கு தேவ சுபாவமானது சற்ருகிலும் உதவி செய்யாமலிருந்ததென்றும், அப்படிக்கொத்த கஸ்தி நோவுகளுடைய கடினமானது மனோவாக்குக் கெட்டாத கடினமாயிருந்ததென்றும் காட்டவேணுமென்கிறதற்காக அனேகம்பேர் கேட்டுக்கொண்டிருக்கையிலே சருவேசுரனைப் பார்த்து, "சருவேசுரா, சருவேசுரா என்னைக் கைவிடுவானேன்?" என்று திருவுளம்பற்றினுர். அப்படியே அத்தனை கடின கஸ்திநோவுகளை அனுபவிக்கிறதிலே சற்ருகிலும் ஆறுதலில்லாமல் சருவேசுரனுலே கைவிடப்பட்டவராயிருக்கிற சேசுநாதரானவர் தம்முடைய திருமேனியிலே உண்டான இரத்தந் திரளாய்ப் புறப்பட்டுச் சிந்தினதினுலே [1]நஞ்சுலர்ந்து மிகவுந் தாகமாயிருந்தார். இதின் நிமித்தமாக "எனக்குத் தாகம் உண்டு" என்று திருவுளம்பற்றினுர். இப்படிக்கொத்த சுபாவமான தாகமானது அத்தறுவாயிலே சேசுநாதருக்கு உண்டாயிருந்தாலும், மனுஷன் ஈடேற்றம் உண்டாகும்படிக்கு இன்னும் நிர்ப்பந்தங்களை அனுபவிக்க வேணுமென்று அவருக்கு அதிகமான தாகமுண்டாயிருந்தது. இருந்தாலும் அந்தப் பாவிகளான சேவகர் அவருடைய தாகத்துக்கு ஒரு கலம் தண்ணீரைக் கொடாமல் அவருக்கு அதிகமான வாதை வருத்திவிக்க வேணுமென்று ஒரு நிஷ்டூரம பண்ணினுர்கள்.

[1]நைந்து உலர்ந்து

அதெப்படியென்ருல், சிலுவையிலே அறையுண்டிருக்கிற பேர்களுடைய காயங்களில் நின்ருேடுகிற இரத்தத்தை மறிக்கிற தற்கு அவடத்திலே முந்திரிகை பழத்தின் புளித்த இரசம் வைத் திருந்தது. அப்போது அந்தச் சேவகருக்குள்ளே ஒரு சேவகன் அந்தப் புளித்த ரசத்திலே சீலைபோலேயிருக்கிற ஒரு வஸ்துவைத் தோய்த்து ஒரு மூங்கிற்கழியிலே கட்டிச் சேசுநாதருடைய திருவாய் அண்டையிலே நீட்டிக் குடிக்கக் கொடுத்தான். அப் படியே சேசுநாதரானவர் பூர்வகாலத்திலே தாவீதென்கிற தீர்க் கத்தரிசியானவர் எழுதிவைத்ததை நிறைவேற்றுகிறதற்கு அந்த முந்திரிகைப்பழத்தின் புளித்த இரசத்தை உட்கொண்டார். அதுக்குப்பிற்பாடு சேசுநாதரானவர் மரணம் தமக்குக் கிட்டி யிருக்கிறபோது, சருவேசுரனுடைய் கட்டளேப்படியே அந்தத் தீர்க்கத்தரிசிகள் தம்முடையபேரிலே எழுதிவைத்த சகல விசேஷங்களேயும் மனுஷனுடைய ஈடேற்றத்துக்கு அடுத்த வர்த்தமானத்தையும் தாம் நிறைவேற்றினரென்றும் தாம் பூலோகத்திலே இருக்கத்தக்க நாள் நிறைவேறிற்றென்றும் கண்டு "முகிந்தது" என்கிற வார்த்தையைத் திருவுளம்பற்றினர்.

அந்த வார்த்தை சேசுநாதரானவர் திருவுளம்பற்றினதற் குப் பிற்பாடு, தாம் மரணத்தை அடையத்தக்கதாக சமயமாச்சு தென்று அறிந்து பிதாவாகிய சருவேசுரனேப் பார்த்து "பிதாவே உம்முடைய கையிலே என்னுடைய ஆத்துமத்தை ஒப்புக்கொடுக் கிறேன்" என்று வலுவாய்க் கூப்பிட்டுச் சொன்னவுடனே மனுஷனுகியமட்டுந் தலேகுனிந்து மரணத்தை அடைந்தார். இந் தப்பிரகாரமாக சேசுநாதரானவர் மரணத்தை அடைகிறபோது கூப்பிட்ட சத்தமானது மனுஷ சுபாவமாகப் புறப்பட்ட சத்தமாய் இராமல், மேலான பலத்தினலே உண்டாக்கப் பட்ட சத்தம் [என்று ...... அந்தச்] சத்தத்தைக்கேட்டு [1][அத்தறுவாயிலே காத்திருந்த சேர்வைக்காரன் ஒருத்தன்] இவர் மெய்யாகவே சருவேசுரனுடைய சுதனுயிருக்கிருரென்று மிகவும் ஆச்சரியமுள்ள விசுவாசத்தோடே சொன்னுன்.

[38. இரட்சகர் மரித்தபின் நடந்தது]

அப்படியே எசுநாதரானவர் மரணத்தை அடைந்தவுடனே பலபல அற்புதங்கள் சம்பவித்தது. அதெப்படியென்ருல், அத் தறுவாயிலே பூலோகமெல்லாம் மிகவுங் கடினமான அதிர்ச்சி

1 3ம் காண்டம் 23ம் பாடம்

யினாலே அதிர்ந்து நடுங்கிற்று. இந்த அதிர்ச்சியினாலே கற்பாறையாயிருக்கிற கபால மலையானது சேசுநாதருக்கு இடதுபக்கத்திலே பாவியான கள்ளன் அறையுண்டிருக்கிற சிலுவை யோரத்திலே ஓர் பாதாளமாய்ப் பிளந்து போச்சுது. இதல்லாமல் ஆசிய தேசத்திலே சில இடங்களிலே அனேகமான மனைகளுஞ் சில பட்டணங்களும் தரைமட்டாய் விழுந்தது. பின்னையும் இந்தத் தேசத்திலே இரண்டு இடங்களிலே இரண்டு மலைகள் பிளந்து போச்சுது. இந்தப் பிரகாரமாக அங்கங்கே மலைகளும், கல்லுகளும் பிளந்து போனதுமல்லாமல், செருசலேம் என்கிற பட்டணத்திலேயிருக்கிற தேவாலயத்தின் உள் அங்கணத்திலே கட்டியிருக்கிற திரைச்சீலையானது மேலே இருந்து கீழ்மட்டும் இரண்டு பங்காய்த் தெறிச்சுப் போச்சுது. இது தவிர அனேகங் கல்லறைகள் திறக்கப்பட்டது. அதுகளிலே அடக்கப்பட்ட பேர்கள் சரீரத்தோடேகூட எழுந்திருந்து செருசலேம் என்கிற பட்டணத்திலேயிருக்கிற அனேகம் பேர்களுக்குக் காண்பித்தார்கள். இத்தொகைப்பட்ட புதுமைகள் சேசுநாதர் பாடுபட்டு மரணத்தை அடைந்த சமயத்திலே சம்பவித்ததை அவ்விடத்திலேயிருந்த சேவகர் முதலான சனங்கள் கண்டதினாலே மிகவும் பயந்து மனஸ்தாபப்பட்டு அந்த மனஸ்தாபத்துக்கு அடையாளமாகக் கையினாலே தங்களுடைய மார்பைக் குத்திக்கொண்டு புறப்பட்டுப் போனார்கள்.

இது இப்படிச் சம்பவித்ததுக்குப் பிற்பாடு யூதர்க்குப் பிரதான குருக்கள் முதலான சிலபேர்கள் மறுநாள் சனிக்கிழமையிலே தாங்கள் பாஸ்குத் திருநாளை சந்தோஷமாகக் கொண்டாடத் தக்கதாகத் தங்களுக்கு நடந்து வருகிற ஆசாரத்தின்படியே சிலுவையிலே அறையுண்டிருக்கிற சேசுநாதரும் ஆக்கினைப்பட்ட மற்ற இரண்டு கள்ளரும் சிலுவையிலே இருக்கவொண்ணாதென்று சொல்லி அன்று வெள்ளிக்கிழமையிலே தானே அவர்கள் மூன்று பேரையும் கால்முறிய அடித்துக் கொன்று போட்டுச் சிலுவையிலே இருந்து இறக்கத் தக்கதாகப் போஞ்சிப்பிலாத்து அண்டையிலே போய் உத்தாரம் பண்ணிக்கொண்டு, சேவகரை அனுப்பினார்கள். அப்படியே அந்தச் சேவகர்போய் சேசுநாதருடைய வலதுபக்கத்திலேயும் இடதுபக்கத்திலேயும் சிலுவையிலே அறையுண்டிருக்கிற இரண்டு கள்ளரையும் கால் முறிய அடித்துக் கொன்றுபோட்டு சேசு

நாதரையுங் கால் முறிய அடித்துக் கொன்றுபோடவேணு மென்று வருகிறபோது அவர் மரணத்தை அடைந்தாரென்று கண்டு அவரைக் கால் முறிய அடியாமல் இருந்தார்கள்.

ஆனால் அந்த சேவகருக்குள்ளே ஒருத்தன் தன் ஈட்டியினாலே சேசுநாதரை விலாவிலே நிஷ்டூரமாகக் குத்தினவுடனே அவடத்திலே இருக்கிற பேர்கள் பார்த்துக்கொண்டிருக்கையிலே அப்படிப்பட்ட காயத்தில் நின்று இரத்தமும் தண்ணீரும் அற்புதமாகப் புறப்பட்டது. இந்தப்பிரகாரமாக மகாமரணத்தை அடைந்த சேசுநாதரானவர் அந்த நிஷ்டூரமுள்ள சேவகனுடைய ஈட்டியினாலே விலாவிலே குத்தப்பட்டதினாலே கஸ்தி நோவுகளை அனுபவியாதிருந்தாலும், அதைப் பார்த்துக் கொண்டிருந்த அவருடைய பரிசுத்த மாதாவானவள் தம்முடைய இருதயத்திலே அந்த ஈட்டியினாலே குத்தப்பட்டாப்போலே மிகுந்த வியாகுலத்தோடே நொந்திருந்து, அவருடைய விலாவிலே இருந்து புறப்பட்டு வடிந்துவிழுந்த இரத்தத்திலேயுந் தண்ணீரிலேயுங் கூடினமாத்திரம் எடுத்துக்கொண்டு பூச்சியமாய்ப் பதலம் பண்ணினாள்.

[39. கல்லறையில் அடக்கப்பட்டது]

இப்படி மிகவும் வியாகுலப்பட்டுத் தமது திருக்குமாரனுடைய விலாவில் நின்று வடிந்துவிழுந்த இரத்தத்தையும் தண்ணீரையும் பதலம் பண்ணின பரிசுத்த மாதாவானவள் அவருடைய திருச்சரீரத்தைச் சிலுவையில் நின்றிறக்கி மரணத்தை அடைந்த பேர்களுக்குச் செய்யத்தக்க ஆசாரத்தை அந்தத் திருச்சரீரத்துக்குச் செய்ய வேணுமென்று பிதாவாகிய சருவேசுரனை வேண்டிக்கொண்டாள். அவள் இந்தப்பிரகாரமாக வேண்டிக்கொள்ளுகிறபோது, சேசுநாதருக்கு இரகசியமாய் சீஷனாயிருக்கிற யோசேப் என்கிற துரை பயமில்லாமல் மிகுந்த தைரியமுள்ள துணிவோடே போஞ்சிப் பிலாத்தண்டையிலே போய், சிலுவையிலே அறையுண்டு மரணத்தை அடைந்த சேசுநாதருடைய சரீரத்தைச் சிலுவையிலே நின்றிறக்கிக் கல்லறையிலே வைக்கிறதற்கு உத்தாரங்கேட்டான். அப்போது போஞ்சிப் பிலாத்தென்கிறவன் சேசுநாதர் அப்போதே மரணத்தை அடைந்தார் என்று ஆச்சரியப்பட்டுச் சிலுவையண்டையிலே காவலாய்க் காத்துக்கொண்டிருக்கிற சேர்வைக்காரனை அழைப்பித்து சேசுநாதர் மரணத்தை அடைந்த வர்த்த

மானத்தைக் கேட்டான். அப்போது சேர்வைக்காரன் சேசுநாதர் மரணத்தை அடைந்தாரென்று சொன்னதிலே, போஞ்சிப் பிலாத்தென்கிறவன் சேசுநாதருடைய சரீரத்தைச் சிலுவையிலே நின்று இறக்கிக் கல்லறையிலே வைக்கத்தக்கதாக யோசேப் என்கிற துரைக்கு உத்தாரங்கொடுத்தான். அப்படியே அந்தத் துரையான யோசேப் என்பவர் அநேகம் பரிமள வர்க்கங்களைக் கொண்டு கபாலமலைக்குப் போறபோது, சேசுநாதருக்குச் சீஷனுயிருக்கிற நீக்குதேமுசென்கிற வேறே ஒரு துரையானவர் அனேகம் பரிமள வர்க்கங்களைச் சவதரித்து யோசேப் பென்கிற வரோடே கூடிக்கொண்டு இருவரும் தங்கள் ஊழியக்காரரோடேகூடக் கபாலமலைக்குப் போனூர்கள்.

அவடத்திலே மிகுந்த துக்கத்தை அனுபவித்திருக்கிற பரி. கன்னி. அர்ச். மாதாவை இருவருங் கண்டு அவளுக்கு அதுக்கான ஆசார உபசார வார்த்தைகளைச் சொன்னதற்குப் பிறபாடு, மிகுந்த பத்தியுள்ள தாழ்ச்சியோடேயுஞ் துக்கதோடேயுஞ் சேசுநாதருடைய திருச்சரீரத்தை சிலுவையிலே நின்று இறக்கினூர்கள். இப்படி இறக்கின அந்தத் திருச்சரீரத்தை துக்கத்திலே அமிழ்ந்தி இருக்கிற அர்ச். மாதாவானவள் வாங்கி மடியிலே வைத்துக்கொண்டு மிகுந்த பத்தியுள்ள தாழ்ச்சியோடே அந்தக் காயங்களைக் கண்ணிலே ஒத்திக்கொண்டு வணங்கித் திரளாய் ஓடுகிற கண்ணீர்களினலே குளிப்பாட்டினள். அதற்குப் பிறபாடு அந்த இரண்டு துரைகளையும் பார்த்து மரித்தவர்களுக்குச் செய்யத்தக்க ஆசாரத்தைத் தமதுத் திருக்குமாரனிடத்திலே நிறைவேற்றத்தக்கதாக அதுக்கான வார்த்தைகளைச் சொன்னுள். அப்படியே அவடத்திலே அர்ச். மாதாவோடேகூட இருக்கிற அர்ச். அருளப்பரும் மரிய மகதலேனூள் முதலான வேறே சில புண்ணியவதிகளும் திரளாய் அழுதுகொண்டு இருக்கையிலே, அவர்கள் இருவரும் அர்ச். மாதாவின் மடியிலே வைத்து அந்தச் திருச்சரீரத்திலே அனேகம் பரிமள வர்க்கங்களைப் பூசி அதுக்கான பிரகாரமாகக் கல்லறையிலே வைத்தார்கள்.

அந்தக் கல்லறையானது எப்படிக்கொத்ததென்றால்: கபால மலைக்குச் சமீபத்திலே ஒரு தோட்டமுண்டாயிருந்தது. அவ்விடத்திலே யோசேப் என்கிற துரையானவர் தாம் மரணத்தை அடைந்ததிற்குப் பிறபாடு தம்முடைய சரீரத்தை அடக்கிறதற்கு ஒரு கல்பாறையிலே வெட்டடி திகளமாக ஒரு அறையைப்

பண்ணிவித்தார். அப்படிப்பட்ட கல்லறையிலே அந்த நாள் வரைக்கும் ஒரு பிரேதத்தையானாலும் அடக்காமலிருந்த படியினாலே அது சேசுநாதருடைய சரீரத்தை வைக்கிறதற்கு யோக்கியமான கல்லறையாய் இருந்தது. ஆனபடியினாலே சேசுநாதருடைய சரீரத்தை அதிலே வைத்து அந்தக்கல்லறை வாசலை ஒரு பெரிய கல்லினாலே மூடிப்போட்டுப் போனார்கள்.

[40. ஆண்டவர் மரித்தபின் சம்பவித்த பல விசேஷ வர்த்தமானங்கள்]

மறுநாள் சனிக்கிழமையிலே யூதர்களுடைய குருக்கள் முதலான துரோகிகள் போஞ்சிப் பிலாதநின் அண்டையிலே போய் அவனைப் பார்த்து, "இவ்வுலகத்திலே எல்லாரையும் ஏச்சுக் கொண்டு திரிந்தவனைச் சிலுவையிலே அறைந்து கொல்லத்தக்கதாக உத்தாரம் கட்டளையிட்டீரே. அவன் உயிரோடே இருக்கிறபோது, தான் மரணத்தை அடைந்த மூன்றாம் நாள் எழுந்திருப்பேன் என்று பலநாளும் சொல்லிக்கொண்டு வந்தானே. இது இப்படியிருக்கையிலே, அவனை அடக்கின கல்லறையை மூன்று நாள் மட்டும் காவல் காத்துக்கொண்டிருக்க ஆன சேவகரைக் கட்டளை இடவேணும், இப்படி செய்யாதிருந்தால் அவனுடைய சீஷர்களான பேர்கள் அவனுடைய சரீரத்தைக் களவாண்டு அவன் எழுந்திருந்தானென்கிற வார்த்தையை எங்கும் பரம்பப் பண்ணுவார்கள். இதினிமித்தமாக முந்தி வந்த கலகத்தைக் காட்டிலும் அதிகமான கலகம் வரும் என்கிறதற்குச் சந்தேகமில்லை" என்று சொன்னார்கள்.

அதுக்குப் போஞ்சிப்பிலாத்தென்கிறவன் அவர்களைப் பார்த்து, 'உங்களுக்குச் சேவகர்கள் இருக்கிறார்களே, அந்தச் சேவகரை அந்தக் கல்லறையைக் காக்கத்தக்கதாகக் காவலாய் வையுங்கோள்' என்று சொன்னான். அப்படியே போஞ்சிப் பிலாத்தென்கிறவன் அந்தப்பாவிகளான யூதர்களுக்கு உத்தாரம் கொடுத்ததற்குப் பிற்பாடு, அவர்கள் அனேகஞ் சேவகரை அவ்விடத்திலே காவலாய் நிறுத்தத் தங்களுடைய சேவகரைக் கூட்டிக்கொண்டு சேசுநாதருடைய சரீரத்தை அடக்கியிருக்கிற கல்லறை யண்டையிலே போய் அதைக் காக்கத்தக்கதாக அனேகஞ் சேவகரை நிறுத்தி, அந்தக் கல்லறை வாசலை மூடியிருக்கிற கல்லிலே முத்திரைபோட்டுத் திரும்பப் போனார்கள்.

இந்தப் பிரகாரமாகக் கல்லறையிலே வைக்கப்பட்ட சேசுநாதருடைய திருச் சரீரத்தை, அவருடைய ஆத்துமமானது, மரணத்தின் நிமித்தமாகச் சிலுவையிலே விட்டுப்பிரிந்தவுடனே தேவ சுபாவத்தைவிட்டுப் பிரியாமல் அத்தோடேகூட பிதாபிதாக்களுடைய ஸ்தலத்திலே இறங்கிற்று. அதேதென்றால், சேசுநாதரானவர் சிலுவையிலே மரணத்தை அடைந்ததினாலே அவருடைய ஆத்துமத்துக்குஞ் சரீரத்துக்கும் உண்டான கட்டு மேரையுள்ள ஐக்கியமானது விட்டுப்போய் இருந்தாலும், தேவ சுபாவத்துக்குஞ் சேசுநாதருடைய ஆத்துமமுஞ் சரீரமும் என்கிற மனுஷ சுபாவத்துக்குமுண்டான கட்டானது ஒருக்காலும் போகவில்லை என்கிறதினாலே பிதாபிதாக்களுடைய ஸ்தலத்திலே இறங்கினவருடைய ஆத்துமத்துடனேயுங் கல்லறையிலே வைத்திருக்கிறவருடைய சரீரத்தோடேயும் தேவ சுபாவமானது அப்படிப்பட்ட கட்டின் நிமித்தமாகக் கூடியிருந்ததென்கிறதற்குச் சந்தேகமில்லை. இப்படித் தேவ சுபாவத்தோடே எப்போதும் கூடியிருக்கிற அப்படிப்பட்ட ஆத்துமமுஞ் சரீரமுமென்கிற மனுஷ சுபாவத்திலே பாடுபட்ட சேசுநாதரானவர், தமக்கு முப்பத்துமூன்று வயதும் மூன்று மாசமும் சென்றிருக்கிறபோது, பைங்குனி மாதம் இருபத்தைந்தாம் திகதி வெள்ளிக்கிழமை நாள் ஏறக்குறைய மத்தியானத்திலே சிலுவையிலே அறையுண்டு அபிரான காலத்திலே (?) இருபத்திரண்டரை நாழிகையளவிலே மரணத்தை அடைந்தார். [நாழி : 24 நிமி. ஆகவே 9 மணி : மாலை 3 மணி]

[41. திவ்விய கர்த்தருடைய உயிர்த்தல், மோட்ச ஆரோகணம்]

இந்தடவாகச் சேசுநாதரானவர் சிலுவையிலே அறையுண்டு மரணத்தை அடைந்தார் என்கிறதினாலே பாவம், பிசாசு, லோகம் என்கிற மூன்று சத்துருக்களைச் செயித்தார். ஆனபடியினாலே அவர் பாடுபட்ட சிலுவையானது அவருடைய அடையாளமென்றும், வெற்றிக்கொடியென்றும் சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. அப்படிப்பட்ட சேசுநாதருடைய சிலுவைக்குண்டான அளவு எம்மாத்திரமென்றால், நடுச்சட்டம் பதினைந்தடியும், குறுக்குச்சட்டம் எட்டடியும் அளவாயிருந்தது. இத்தனை நிகளமுள்ள சிலுவையிலே சேசுநாதரானவர் மரணத்தை அடைந்தவுடனே, பிதாபிதாக்களுடைய ஸ்தலத்திலே இறங்கின அவருடைய ஆத்துமமானது கல்லறையிலே வைத்திருக்கிற அவருடைய சரீரத்தோடே மூன்றாம் நாள் திரும்பக்கூட மரணத்தையும் பிசாசையும் செயித்து, மிகுந்த பிரதாபத்தோடே ஒட்டலோகராய் எழுந்திருந்தார்.

இப்படி சேசுநாதரானவர் கல்லறையிலேயிருந்து எழுந்ததற்குப் பிற்பாடு, அவருடைய சரீரத்தை மூடியிருந்த துப்பட்டியும், திருமுகத்தை மூடியிருந்த வஸ்திரமும் அந்தக் கல்லறையிலே தானே வைத்திருந்தது. அப்படிக் கொத்த துப்பட்டியிலே சேசுநாதருடைய ரூபமானது முழுதும் பதிந்திருக்கிறதினாலே இந்நாள் வரைக்கும் [1]சபோய்வென்கிற சீர்மையிலே [2]துரினுவென்கிற பட்டணத்திலுள்ள கோவிலிலே அத்தைப் பதனம் பண்ணிக்கொண்டு, மகாப் பூச்சியமாய்ப் பார்க்க வருகிற பேர்களுக்கு அதுக்கான சமயத்திலே காட்டுவார்கள். அப்படியே சேசுநாதருடைய திருமுகத்தை மூடியிருந்த வஸ்திரத்தைப் பதனம் பண்ணி வைத்திருந்த இடத்திலே நெருப்புப் பத்திக்கொண்டது. ஆனால் அந்த வஸ்திரமானது புதுமையாக நெருப்பிலே வேகாமல் இருந்தது. அப்படிக்கொத்த வஸ்திரத்தைக் கொண்டு சேசுநாதருடைய திருமுகத்தை மூடத்தக்கதாக அர்ச். மாதாவானவள் யோசேப் என்கிற துரையினுடைய கையில் கொடுத்தாள் என்று [3]மெத்தப்பிருஸ் சிமேயோன் என்கிறவர் எழுதி வைத்தார்.

இப்படித் தம்முடைய திருச்சரீரத்தையுந் திருமுகத்தையும் மூடியிருந்த துப்பட்டியையும் வஸ்திரத்தையுங் கல்லறையிலே வைத்து சேசுநாதரானவர் எழுந்திருந்தவுடனே, எண்ணப்படாத துக்கத்திலே அமிழ்ந்தியிருக்கிற தம்முடைய மாதாவுக்கு முந்த முந்தக் காண்பித்ததற்குப் பிற்பாடு மதலமரிய முதலான புண்ணியவதிகளுக்கும், அப்போஸ்தலர் முதலான சீஷர்களுக்கும் [தம்மைக் காண்பித்தார். நாற்பது நாளைக்குப் பிறகு மாதாவும் சீஷர்களும்] ஒலிவெத்தி என்கிற மலையிலே கூடிப்பார்த்துக்கொண்டிருக்கையிலே பரமண்டலங்களிலே ஏறிச் சகலமான சம்மனசுக்களுடைய மிகுந்த சந்தோஷத்தோடே அவருடைய இராசபிரதாபத்துக்கும் மகிமைக்கும் யோக்கியமான பத்திராசனமாகிற பிதாவாகிற சருவேசுரனுடைய வலதுபாரிசத்திலே ஸ்தாபிக்கப்பட்டார். இத்தனை மகிமை பிரதாபத்தோடே பிதாவாகிய சருவேசுரனுடைய வலதுபாரிசத்திலே எழுந்தருளியிருக்கிற சேசுநாதரானவர், தம்முடைய பிரதான சீஷர்கள் உலோகமெங்கும் போய் அக்கியானமென்கிற அந்தகாரத்திலே அமிழ்ந்தியிருக்கிற மனுஷர் இருதயங்களிலே சத்தியமென்கிற பிரகாசமானது உதயமுண்டாகும்படிக்கு அதுக்கான உபதேசத்தைச் சொல்லிக்கொண்டு வரத்தக்கதாக, இஸ்பிரீத்துசாந்துவாகிய சருவேசுரனுடைய வரப்பிரசாதங்களால் அலங்கரித்தார்.

(1) Savoy (2) Turin (3) Simeon Metaphres?

அதெப்படியென்ருல், சேசுநாதரானவர் பரமண்டலங் களிலே ஏறின பதினோராம்நாள் ஞாயிற்றுக்கிழமை சூரியன் உதித்து ஒருசாமமாகிறபோது அர்ச். மாதாவோடேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலர் முதலான சீஷர்கள் மிகுந்த பக்தி யோடே செபம் பண்ணிக்கொண்டிருக்கிற சமயத்திலே, ஒவ்வொருத்தர் தலைமேலே ஒவ்வொரு அக்கினி நாக்கு ரூபமாக இஸ்பிரீத்துசாந்துவாகிய சருவேசுரனை இறங்கப்பண்ணி, அப்படிக்கொத்த அக்கினி நாக்குகளினலே அடையாளமாய்க் காட்டப்பட்ட பத்தி முதலான வரப்பிரசாதங்கள் அவர்களுக்கு வரப்பண்ணினர். இந்தப் பிரகாரமாக தம்முடைய சீஷர்கள் பேரிலே இஸ்பிரீத்துசாந்துவாகிய சருவேசுரனை இறங்கப் பண்ணினர்.

சேசுநாதரானவர் பிதாவாகிய சருவேசுரனுடைய வலது பாரிசத்திலேயிருந்துகொண்டு, தம்முடைய கை கால் விலாவிலே இருக்கிற அஞ்சு காயங்களுடைய அடையாளங்களை அவருக்குக் காட்டி, மனுஷனுக்காக மத்தியஸ்தனாய் மன்ருடிக்கொண்டு வருகிறர் பின்னையும் சேசுநாதரானவர் இப்படியிருக்கையிலே தானே தம்முடைய அர்ச். சபையை நடத்தி அந்தச் சபைக்குத் தம்முடைய இஷ்டப்பிரசாதங்களையுங் கொடுத்தருளித் தாம் முந்தித் திருவுளம்பற்றினப்போலே, லோகம் முகியும் மட்டுங் கூடத் துணையாயிருக்கிருர்.

கடைசியிலே, லோகம் முகிகிற நாளையிலே சேசுநாதரானவர் மிகுந்த மகிமைப்பிரதாப சோபனத்தோடே பிதாவாகிய சருவேசுரனுடைய வலதுபாரிசத்திலேயிருந்து இறங்கிச் சீவியர் களுக்கும் மரித்தவர்களுக்கும் நடுத்தீர்வை சொல்லித், தாம் நடந்த நடத்தைகளைப் பார்த்து நடவாமலும் தாம் பாடுபட்ட மரணத்தைப் பார்த்து நன்றியிலாமலும் இருந்த பாவிகளைச் சாபமிட்டு, என்றென்றைக்கும் நரகத்தினுடைய வேதனையை அனுபவிக்கத்தக்கதாகத் தம்முடைய சன்னதியிலே நின்று தள்ளினதற்குப் பிற்பாடு, தம்முடைய விலைமதியாத இரத்தத்தின் பலன்களை நல்ல நடக்கைகளினலே அடைந்த நல்லவர்களுக்கு ஆசீர்வாதம் கொடுத்து, சருவேசுரனுடைய பிரத்தியக்ஷத் தெரிசனமாகிற மோக்ஷானந்தத்தை ஊழியுள்ள காலம் அனுப விக்கும்படிக்கு அவர்களைத் தம்மோடேகூடப் பரமண்டலத்திலே கூட்டிக்கொண்டு போவார். இப்படிப்பட்ட தயாபரனன சேசு

நாதரோடேகூட நாமும் மோக்ஷத்திலே பிரதாபித்துக்கொண்டு இருக்கத்தக்கதாக அவர் இந்த லோகத்திலே யிருக்கிறநாள் மட்டுந் தம்முடைய [வார்த்தையினாலேயும்] நடக்கைகளினாலே யும், நமக்குப் படிப்பித்த தாழ்ச்சி, பொறுமை முதலான புண் ணியங்களுடைய வழியிலே நடக்க அவருடைய ஒத்தாசையினாலே கூடினமாத்திரம் பிரயாசப்படக்கடவோம் — ஆமென்சேசு.

[இப்படிச் "சேசுநாதருடைய சரித்திரம்" முற்றுமென்று சொல்ல வொண்ணாதென்றாலும் எவ்வளவாகிலும் சுவாமியுடைய சரித்திரத்தை ஆதியோடாரப்பியமாக அறிந்தோமென்று மனசினுடைய ஆசை நிலைக்கப்படவேண்டியவாதலான் சரித்திர மென்றும் பேரிட்டு முற்றுமென்கிற பேரும் அத்துகையே(?) பண்ணினர் ஆதலால் முற்றுமென்றது.]

முற்றிற்று.

திருநெல்வேலி டயோசிசன் பிரஸ், பாளையங்கோட்டை — P. 452

Ribadineira's Life of Christ

Section 3

But the sovereign creator of all things, by lowering himself to his fallen creature, found it advisable to operate marvellous works, which could in all places give an inkling of his excellence and grandeur. That is why we shall be satisfied with relating that long before the birth of Jesus Christ the predictions of the Sibyls, looked upon as the prohetesses of the gentiles, highly spoke of his birth, of his life and death; and when he had been born the famous Apollo of Delphi renowned throughout the earth, and whom the devil made use of to deceive and bewitch men, no longer pronounced his oracles. It was known that the presence of the saviour condemned him to silence, for that is what he declared himself by leave of God to Caesar Augustus, who had come to consult him with great pomp, after having built him a magnificent temple. 'A Hebrew Child, who came down from heaven', he had said, 'was taking away from him the power he had had over the world and cast him back to hell'. But it was not only the Apollo of Delphi that kept silent after the birth of the saviour; all the other demons were equally enchained and dumb, so much so that after a few years, Plutarch the philosopher wrote a treatise in which he wondered with amazement how the word of the gods was no longer to be heard. And history teaches us also that Augustus returning to Rome was struck with stupor after the event we have just recalled and hastened to build a sumptuous altar in the Capitol with this inscription: **To the eldest son of God**......This sanctuary, a thing worthy of holding our attention, would have been kept up to the time of Constantine; and this emperor would have had the glory to dig there the foundations of the holy Basilica which he dedicated to the mother of Jesus, and which still today bears the name of Ara Coeli, the altar of heaven, the care of which is entrusted to the Friars Minor of the Observance of Saint Francis.

But to resume our narrative which these diverse consideration have caused us to interrupt, Jesus manifested himself

to men at the time when the world enjoyed a great peace; and because he was from heaven, as the Holy Books say and as he wanted to detach our hearts from all the satisfactions of earth and of the senses, he came to us in the rough season of winter and in the month of December, ordinarily the hardest of all.

Section 16 (end)

To conclude in a word, the doctrine of Jesus Christ was the epitome of all the prophecies, the key to Holy Scriptures and to all the mysteries of the Redemption. It is a divine sun the precious rays of which have dispelled our darkness and the shadows of the law; it is like an ocean of wisdom and power of God, it is the manna fallen from heaven, the spring of living waters, the cherished treasure of the Church, the remedy, the nourishment, the light and the salvation of the world.

அரும்பதம்

சவதரி — சம்பாதி
கொஞ்ச ஊர் — சிறிய ஊர்
நிச்சிதம் — தகாத
பரிச்சேதம் — தீர்ப்பு
தரித்தல் — வாசம் பண்ணுதல்
முகிவு — முடிவு
பகுதி — கப்பம்
பிராமணர் — அறிஞர்
சம்மந்தம் — சம்பந்தம்
பாரபத்தியம் — மேற் பார்வை
தூறு — அவதூறு
வக்கணை — எழுதும் முறை
இஷ்டகாரன் — நண்பன்

புறத்தியிலே — வெளியே
அடக்கின — அடக்கம் செய்த
மேலாங்கிஷம் — புத்தி, மனம், நினைவு
கீழாங்கிஷம் — ஐம்பொறிகள்
வெள்ளாட்டி — பணிப்பெண்
சற்றுப்போது — கொஞ்ச நேரம்
சில்வானம் — சொச்சம் (மிச்சம்)
எங்கித்தியான் — எங்கிருந்து வந்தவன்
பதனம் — பதலம் — பத்திரம்
தப்படி — தாண்டல் (5 அடி)
பாச்சிக்கை — சூதாடும் கருவி
நாழி — 24 நிமிடங்கள்
அபிரான காலம் ?